# பள்ளிக் கல்வித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023-2024

### மானியக் கோரிக்கை எண் 43


## அன்பில் மகேஸ் பொய்யாமொழி
**பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்**



©

தமிழ்நாடு அரசு

2023

# பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023-24

### பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தொடக்கக் கல்வி, உயர்நிலை, மேல்நிலைக் கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | 8 |
| 3 | தனியார் பள்ளிகள் | 88 |
| 4 | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 102 |
| 5 | அரசுத் தேர்வுகள் இயக்ககம் | 160 |
| 6 | பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | 186 |
| 7 | பொது நூலகங்கள் | 194 |
| 8 | ஆசிரியர் தேர்வு வாரியம் | 236 |
| 9 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 245 |
| 10 | நிதி ஒதுக்கீடு | 264 |

## 1. முன்னுரை

**"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு."　　　　　　- குறள் 396**

"தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக்கொண்டே இருக்கும்."

**- கலைஞர் உரை**

தரமான கல்வி எதிர்காலக் குடிமக்களின் வாழ்வை வடிவமைப்பதற்கும் கல்விசார் கொள்கை முடிவுகளை வகுப்பதற்கும் மைல்கல் ஆகும். இன்று வழங்கப்படும் கல்வியின் தரம் மாணவர்களின் நாளைய நல்வாழ்விற்கு அடித்தளமாக அமைகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு அரசு அனைவருக்கும் சமமான, தரமான ஒருங்கிணைந்த மற்றும் ஒட்டுமொத்த

வளர்ச்சியை உள்ளடக்கிய கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகிறது. எனவே 2023-2024 ஆம் நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு அதிகபட்சமாக ரூ.40,299 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

பள்ளிக் கல்வித்துறை கீழ்கண்டவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

- பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்ப்பது.
- பள்ளியில் சேர்ந்த அனைத்து மாணவர்களையும் பள்ளி இறுதி வகுப்பு வரை 100 சதவீதம் தக்க வைத்தல்.
- மாணவர்களின் பள்ளி இடைநிற்றலை முழுமையாக நீக்குதல். குறிப்பாக கோவிட் பெருந்தொற்றால் ஏற்பட்ட விளைவுகளைச் சரி செய்தல்.

- மேம்படுத்தப்பட்ட கற்றல் விளைவுகளால் மாணவர்கள் வயதுக்கேற்ற கற்றல் அடைவுகளை அடைதல்; அடிப்படை வாசித்தல், எழுதுதல், எண்ணறிவு பெறுதலை உறுதி செய்தல்.

- பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் இவற்றை உறுதி செய்வதற்கான வாழ்க்கைத் திறன்களை மாணவர்களுக்கு அளித்தல்.

- பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

- ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தும் பணியிடைப் பயிற்சிகளை வழங்குதல்.

- தொழில்நுட்பம் வாயிலாகக் கற்றல் கற்பித்தல் முறைகளில் முன்னேற்றம் காணுதல்.

- நவீன உலகின் நடைமுறைத் தேவைகளுக்கேற்ப வாழ்க்கைத் திறன்களை மாணவர்களுக்கு அளித்தல்.

கடந்த ஆண்டைப் பொறுத்தவரை பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட மாணவர்களின் கற்றல் இழப்பை ஈடு செய்வதே துறையின் முக்கிய இலக்காக அமைந்தது. அரசின் இலட்சியத் திட்டமான “இல்லம் தேடிக் கல்வி" விளிம்புநிலை மாணவர்களின் கற்றல் இடைவெளியைக் கணிசமாகக் குறைக்க பெரும் பங்காற்றியது. மாணவர்களின் அடிப்படை வாசித்தல், எழுதுதல் எண்ணறிவு பெறுதலை உறுதி செய்யும் ’எண்ணும் எழுத்தும்" திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட இத்திட்டம்

மாணவர்கள் வயதுக்கேற்ற கற்றல் அடைவைப் பெறுதலை உறுதி செய்கிறது.

இன்றைய மின்னணு தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி வினாடி வினா மூலம் மதிப்பீடுகள் செய்யப்பட்டு மாணவர்களின் முன்னேற்றம் துறையால் தொடர் கண்காணிப்பு செய்யப்படுகிறது. இதற்கென வானவில் மன்றம், அறிவியல் தொழில்நுட்ப பொறியியல் கணித (STEM) அமர்வு போன்ற நிகழ்வுகள் உருவாக்கப்பட்டு மாணவர்களின் அறிவியல் சிந்தனையை மேம்படுத்துவதற்காக செய்யப்படுகின்றன. மேலும் உயர்கல்வி நிறுவனங்களின் அறிவியல் மையங்களைப் பார்வையிடச் செய்வதன் மூலமும் மாணவர்களின் அறிவியல் ஆர்வம் தூண்டப்படுகிறது.

மாணவர்களுக்கு முழுமையான கல்வி சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு கற்றல் இணைச் செயல்பாடுகளை ஊக்குவிக்க

கலைத்திருவிழா, கலையரங்கம் போன்ற நிகழ்வுகள் நடத்தப்பட்டன. மாவட்டம் மற்றும் மாநில அளவில் மாணவர்கள் ஆர்வத்துடனும் மகிழ்வுடனும் பங்கு பெற்ற இந்நிகழ்வுகள் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

"நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பெறுவதற்கான பயிற்சிகள் வழங்கப் பெறுகின்றன. இதன்முலம் பள்ளி மாணவர்கள் உயர்கல்வியைத் தேர்வு செய்வதிலும் வேலை வாய்ப்பை அடைவதிலும் உரிய வழிகாட்டுதல்களைப் பெறுகின்றனர்.

மேற்கண்ட முன்னெடுப்புகள் அனைத்தையும் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தொடக்கக் கல்வி இயக்ககம், பள்ளிக் கல்வி ஆணையரகம், தனியார் பள்ளிகள் இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,

வயதுவந்தோர் மற்றும் பள்ளிசாரா கல்வி இயக்ககம் வாயிலாக நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இச்சீரிய முயற்சிகள் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அரசுத் தேர்வுகள் இயக்ககம், நூலக இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் ஆகிய அலகுகளின் பங்கேற்புடன் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

# 2. தொடக்கக் கல்வி, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

## 2.1. அறிமுகம்

பள்ளிக் கல்வித் துறையின் முக்கிய கூறுகளாக செயல்படும் தொடக்க மற்றும் பள்ளிக் கல்வி இயக்ககங்கள் இணைந்து 6 முதல் 18 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்குகின்றன. தொடக்கக் கல்வியானது ஒரு குழந்தைக்கு முழுமையான திறன்களை வழங்கிடவும், இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியானது மாணவர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் வழிவகுக்கின்றன.

## 2.2. தொலைநோக்கு

6 முதல் 18 வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய,

தரமான, ஒட்டுமொத்த வளர்ச்சியை உள்ளடக்கிய மற்றும் முழுமையான கல்வியை வழங்குதல்.

## 2.3. குறிக்கோள்

- குழந்தை மையக் கற்றலை முன்னிலைப்படுத்தி மேன்மை நிறைந்த கற்பித்தல் வழியாக மாணவர்களின் உள்ளார்ந்த திறனை வெளிப்படுத்தி முதன்மை நிலையினை அடையச் செய்தல்.
- மாணவர்கள் தமது திறன்களை அடைதல் மற்றும் வெளிக்கொணர்தல், சமுதாயத்திற்கு நல்லன செய்வதற்கு பொறுப்புகள் நிறைந்த, நற்குணமிக்க ஒழுக்கமிக்க, ஆக்கப்பூர்வமான, சமூக அக்கறை கொண்டவர்களாக மாற்றுவதற்கான உன்னத சூழலை வகுப்பறையில் உருவாக்குதல்.

## 2.4. நோக்கம்

- 6 முதல் 14 வயதுடைய குழந்தைகள் அனைவரையும் 100 விழுக்காடு பள்ளியில் சேர்த்தலை உறுதி செய்தல்.
- பள்ளியில் சேர்ந்த அனைத்து குழந்தைகளையும் தக்கவைக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ முழுமையாக நடைமுறைபடுத்தல்.
- அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்குதல்
- புதிய பள்ளிகளைத் தொடங்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்.

- மக்கள்தொகை குறைவாக உள்ள பகுதிகளில் உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தொடங்குதல்.
- பள்ளிகள் தொடங்க சாத்தியமில்லா பகுதிகளில், குறிப்பாக, அடர்ந்த வனப்பகுதிகளிலும், தொலைதூர மலைப் பிரதேசங்களிலும் வசிக்கும் பள்ளி வயதுக் குழந்தைகளுக்குப் பாதுகாவலர் / போக்குவரத்து போன்ற வசதிகளை அமைத்துக் கொடுத்தல்.
- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள், நலிவடைந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகள் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த குழந்தைகள் அனைவரையும் உள்ளடக்கி பாகுபாடின்றி கல்வி பயிலும் சூழலைப் பள்ளிகளில் வழங்குதல்.

- பாலின சமன்பாட்டை உறுதி செய்தல்.
- குழந்தைகளிடம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறனை மேம்படுத்துதல்.
- திட்டமிடப்பட்ட கற்றல் இணைச் செயல்பாடுகள் மூலம் முழுமையான கல்வியை வழங்குதல்.
- உயர்தரமான உயர்கல்வியைத் திட்டமிடுவதற்கும் அதனை அடைவதற்கும் மாணவர்களைத் தயார்படுத்துதல்.
- போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் பாரிமரிப்பை உறுதிபடுத்துதல்.
- மாணவர்களுக்கு மேம்பட்ட கற்றலை உறுதி செய்ய உயர்தர கணினி

தொழில்நுட்ப வசதிகளை விரிவுபடுத்துதல்.

## 2.5. தரமான கல்விக்கான முன்னெடுப்புகள்

மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டுச் சிறப்பு முயற்சிகளாக எண்ணும் எழுத்தும் மற்றும் நான் முதல்வன் திட்டத்துடன், பிற முயற்சிகளான தற்காப்புக் கலைப் பயிற்சி, கல்விச் சுற்றுலா, கல்வி சாரா இணைச் செயல்பாடுகளான இலக்கிய மன்றம், வினாடி-வினா போட்டிகள், கலைத் திருவிழா மற்றும் விளையாட்டுப் போட்டிகள் போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கற்றலின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் கற்றல் மேம்பாட்டுத் திட்டம் (LEP) மூலமாகவும் தரம் உயர்த்தப்பட்ட, புதுப்பிக்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கல், வானவில் மன்ற (STEM) அமர்வுகள் மூலமாக எளிதில் அணுகி

சந்தேகங்களை தீர்க்கவும், கட்டணமில்லாத் தொலைபேசி மூலம் மாணவர்களின் அய்யபாடுகளுக்கான ஆலோசனை வழங்குதல் போன்றவை மூலம் மாணவர்களின் கல்வி தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### *2.5.1. இல்லம் தேடிக்கல்வி*

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் மாணவர்களிடம் ஏற்பட்ட கற்றல் இடைவெளி, கற்றல் இழப்பை ஈடுசெய்வது ஆகிய உயரிய நோக்கங்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அக்டோபர் 2021இல் கொண்டுவரப்பட்ட ஒரு சிறப்புத் திட்டமே இல்லம் தேடிக் கல்வி திட்டமாகும். மாநிலம் முழுவதும் இதில் பதிவு செய்த 7.46 லட்சம் தன்னார்வலர்களில் 1.89 லட்சம் தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டு, களத்தில் பணியாற்று-கின்றனர். இத்திட்டத்தைச் சீரிய முறையில்

வழிநடத்துவதற்காக மாநிலம், மாவட்டம் மற்றும் பள்ளி ஆகிய மூன்று நிலைகளில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. கல்வியின் அடிப்படையான எண்ணறிவினையும் எழுத்தறிவினையும் அனைத்து மாணவர்களும் பெற்றிருக்க வேண்டியது மிக அவசியம் என்பதை மனதில் கொண்டு எண்ணும் எழுத்தும் திட்டத்திற்கு இக்குழுக்கள் உறுதுணை புரிந்து வருகிறது.

குழந்தைகளிடம் வாசிப்புத் திறனை மேம்படுத்தவும், வாசிக்கும் பழக்கத்தை மகிழ்ச்சிகரமானதாக மாற்றும் வகையிலும் பள்ளிக் கல்வித்துறை, கூகுள் நிறுவனத்துடன் இணைந்து "**கூகுள் ரீட் அலாங்**" செயலியின் மூலமாகத் தொடர் வாசிப்பு மாரத்தான் நடத்தப்பட்டது. 12 நாள்களில் 263 கோடி சொற்களை மாணவர்கள் வாசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொரோனா பெருந்தொற்றினால் குழந்தைகளிடம் ஏற்பட்ட கற்றல் இடைவெளியில் 3 இல் 2 பங்கு இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது எனக் கலி∴போர்னியா சாண்டியாகோ பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. கார்த்திக் முரளிதரன் மற்றும் அபிஜித் சிங், உதவிப் பேராசிரியர், பொருளாதாரம், இன்ஸ்டிட்யூட்டோ டெக்னாலஜிகோ ஆட்டோனோமோ டிமெக்ஸிகோ (ITAM) ஆகியோரால் நடத்தப்பட்ட ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டிற்கு இல்லம் தேடிக் கல்வித் திட்டத்திற்கு ரூ. 226.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.5.2. எண்ணும் எழுத்தும்*

2022-23 ஆம் கல்வியாண்டு முதல் 1ஆம் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் 8

வயதுக்குட்பட்ட அனைத்து மாணவர்களும் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்ணறிவுத் திறன்களைப் பெறுவதை உறுதி செய்யும் நோக்கத்துடன் இவ்வியக்கம் தொடங்கப்பட்டுள்ளது. **எண்ணும் எழுத்தும் இயக்கம்**, கற்றல் நிலைக்கேற்ப மாணவர்களை மையப்படுத்திய கற்றல் கற்பித்தல் அணுகுமுறையோடு உருவாக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் கற்றலை மகிழ்ச்சியாக்கும் வகையில் எண்ணும் எழுத்தும் வகுப்பறைகளில், பாடல் களம், கதைக் களம், செயல்பாட்டுக் களம், படைப்புக் களம், படித்தல் களம் மற்றும் பொம்மலாட்டக் களம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வணுகுமுறை குழந்தைகளின் ஆளுமைத்திறனை வளர்க்கும் வகையிலான தகவல் தொடர்பு, இணைந்து செயல்படுதல், சுகாதாரம் மற்றும் ஏனைய முழுமையான பண்புகளை வளர்த்தல் போன்ற

வாழ்வியல் திறன்களை ஒருங்கமைக்க உதவி புரிகிறது.

டெலிகிராம் (Telegram) குழுவின் மூலம் ஆசிரியர்களிடம் மாநில அளவிலான அலுவலர்கள் தொடர்பு கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெற்றோர்களுக்கு தொலைபேசி மூலம் பதிவு செய்யப்பட்ட தகவல் அனுப்புதல், இத்திட்டத்தின் செயல்பாடுகளைச் சமூக ஊடகங்களில் தொடர்ந்து பதிவு செய்தல், பள்ளிகளில் மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்தும் விதமாக **எண்ணும் எழுத்தும் கற்றலைக் கொண்டாடுவோம்** எனப் பல்வேறு செயல்பாடுகள் மூலம் ஒரு தொடர்ச்சியான தகவல் தொடர்பினை இவ்வியக்கம் உருவாக்கியுள்ளது. இவை தவிர ஒவ்வொரு மாதமும் பெற்றோர் - ஆசிரியர் கூட்டமானது பள்ளிகளில் பெற்றோர்களிடம் இவ்வியக்கம் குறித்து விழிப்புணர்வை மேம்படுத்தவும் தங்கள்

குழந்தைகளின் கற்றல் முன்னேற்றம் குறித்து அறிந்துக்கொள்ளவும் நடத்தப்படுகிறது. மேலும், பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் இவ்வியக்கத்தின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்படுகிறது.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற வரவேற்பின் அடிப்படையில் **எண்ணும் எழுத்தும் இயக்கம்** 4 மற்றும் 5 ஆம் வகுப்புகளுக்கு ரூ.110 கோடி ஒதுக்கீட்டில் 2023-24 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்படுகிறது. ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், ஆசிரியர் கையேடும், மாணவர்களுக்குப் பயிற்சிக் கையேடும் வழங்கப்பட உள்ளது. ஒவ்வொரு மாணவரின் கற்றல் முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கண்காணிக்க வலுவான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### *2.5.3. தொழில் வழிகாட்டல் பயிற்சி மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாடு:*

01.03.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட "**நான் முதல்வன்**" முன்னெடுப்பானது அரசுப் பள்ளி மாணவர்களிடையே உயர்கல்வி மற்றும் அதன் விளைவாகத் தொழில் வளர்ச்சி வாய்ப்புகள் தொடர்பாக புரிதலின்மை நிலையை வெகுவாகக் குறைக்கிறது. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள ஏறத்தாழ 17 லட்சம் மாணவர்கள் தங்களது உயர்கல்வி மற்றும் தொழில்சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கும், மாணவர்கள் தாங்கள் பெற்ற அறிவைப் பயன்படுத்துவதற்குமான ஆதாரங்களை வழங்குவதே அரசின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம், பள்ளிக் கல்விக்குப் பிறகு அவர்களின் எதிர்காலத்திற்கான தயாரிப்பில் அறிவு மற்றும் திறன்களை வலுப்படுத்த மாணவர்,

பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் திறன்களைக் கட்டியெழுப்ப வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. **நான் முதல்வன்** என்கிற தொழில் வழிகாட்டல் இணையதளமானது 450 க்கும் மேற்பட்ட படிப்புகள், 2500 க்கும் மேற்பட்ட கல்லூரிகள், நிறுவனங்கள் மற்றும் அரசுத் திட்டங்களின் நிதி உதவிக்கான வழிகளை அடையாளம் காணவும், தொழில்முறை நிபுணர்கள் மற்றும் வழிகாட்டிகளிடமிருந்து நடைமுறை வாழ்க்கைக்கான அறிவைப் பெறவும் வழிவகை செய்கிறது. மாணவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க, கல்லூரிகளுக்கு நேரடியாக களப் பயணங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும், நேரடி பயன்பாட்டுச் செயல்முறைகள் அடங்கிய கட்டகங்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டன.

9 - 12ஆம் வகுப்புகளுக்கான மாதாந்திர அமர்வுகள் மூலம் வழங்கப்பட்ட செயல்திறன்

மிக்க ஆசிரியர் மற்றும் பள்ளித் தலைமைத்துவத் திறன் கொண்ட அனுபவமிக்க கற்றல் கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டமானது இதற்கான வலிமையான அடித்தளத்தை அமைத்துள்ளது. அனைத்துப் பள்ளிகளிலும் 19,000 க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட (NSS) தன்னார்வலர்களைக் கொண்ட, கட்டமைக்கப்பட்ட இணைப்புத் திட்டம், 430 கல்லூரிகளில் மாணவர்கள் விண்ணப்பிக்கவும், அவர்கள் விரும்பும் கல்லூரி மற்றும் படிப்புகளில் சேர்க்கை பெறவும் வழிகாட்டுவதற்காக நிறுவப்பட்டுள்ளது. மாணவர்களின் விருப்பங்களையும் சவால்களையும் புரிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பு, தன்னார்வலர்களுக்கு ஈடுபாட்டைத் தொடங்குவதற்கான வழி வகைகளை அமைத்துள்ளது.

பள்ளிகளில் நடத்தப்படும் வழிகாட்டல் பயிற்சிப் பட்டறைகள் வாயிலாக மாணவர்கள், தாங்கள் தொடர்ச்சியாக விடாமுயற்சியுடன் விண்ணப்பித்தலை ஊக்குவிக்கும் வகையிலும், **புதுமைப் பெண்** மற்றும் 7.5% **முன்னுரிமை** ஒதுக்கீடு போன்ற பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்தும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே தமிழ்நாடு அரசு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

### *2.5.4. வானவில் மன்றம் – STEM மற்றும் அறிவியல் கண்காட்சி:*

அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களைத் தானாக பரிசோதனை செய்து கற்றலை மேம்படுத்துவதற்காக வானவில் மன்றமானது (நடமாடும் அறிவியல் ஆய்வகம்) நவம்பர் 28, 2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திருச்சியில் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் உள்ள 13,210

அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 25 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 710 வானவில் மன்றக் கருத்தாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டபின், பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் கணித சோதனைகள் நடத்துவதற்காக அறிவியல் மற்றும் கணிதக் கருவிகளுடன் கட்டமைக்கப்பட்ட அட்டவணையின்படி பள்ளிகளுக்குச் சென்று பயிற்சி அளிக்கின்றனர்.

மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில், ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஆர்வமுள்ள மாணவர்களிடையே நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படுகிறது.

2022-23 ஆம் கல்வியாண்டில் 48,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தாங்கள் புரிந்துகொண்ட அறிவியல் மற்றும் கணிதக் கருத்துக்களையும், அதன் பயன்பாட்டையும் நாள்தோறும் பயன்படுத்தும் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட மாதிரிகள் மூலம் வெளிப்படுத்தினர். மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 152 மாணவர்களுக்கு அறிவியல் அறிஞர்களைச் சந்திக்கவும், கோளரங்கம், ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளம் போன்ற அறிவியல் ஆராய்ச்சிக்கான இடங்களைப் பார்வையிடவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

### *2.5.5. கலையரங்கம் மற்றும் கலைத் திருவிழா*

கலை வடிவங்கள் சாதி, வகுப்பு அல்லது மதம் ஆகியவற்றுடன் தொடர்புடையது என்கின்ற எதிர்மறையான கருத்துக்களைத் தகர்த்தெறியும் வகையில் அனைவருக்கும் கலை மற்றும் கலை அனைவருக்குமானது என்பதனை

வலியுறுத்துவதைப் பள்ளிக்கல்வித் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாணவர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தவும், இத்திட்டத்தின் மூலம் ஒரு துடிப்பான, மனிதாபிமானம் மிக்க மற்றும் வலிமையான கற்றல் சூழலை வெளிப்படுத்தும் வகையில் பள்ளிகளில் கலை மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் திறன்களை வெளிக் கொணரவும், அத்திறன்களைத் தொன்மையான பாரம்பரிய கலாச்சாரத்துடன் இணைக்கவும், இக்கல்வி ஆண்டில் பள்ளிகளில் கலை மற்றும் கலாச்சார வகுப்புகள் ரூ.5.35 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் உள்ள 3000 க்கும் மேற்பட்ட உள்ளூர்க் கலைஞர்களைக் கொண்டு 6 முதல் 9 வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்குப் பல்வேறு கலை

வடிவங்களைக் கற்பிக்கவும், பயிற்சி அளிக்கவும் மாதிரி பாடத்திட்டம் மற்றும் கால அட்டவணை தயாரிக்கப்பட்டு பள்ளிகளில் கலை அரங்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கவும், சிறந்த மாணவர்களைக் கண்டறிந்து தேசிய மற்றும் பன்னாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வகையில் சிறப்பான பயிற்சி அளிக்கவும் பள்ளி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் கவின் கலைகள், நாடகம், இசை, நடனம் மற்றும் நாட்டுப்புறக் கலை முதலிய பல்வேறு கலை வடிவங்களில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 28.52 இலட்சம் மாணவர்களுக்கு 206 விதமான போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. பள்ளி அளவில் பல்வேறு நிலைகளில் போட்டிகள் நடத்தப்பட்டு, இறுதியாக டிசம்பர் – 2022ல் மாநில அளவில் 17,038 மாணவர்கள் பங்கு கொண்ட

மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டன. இவர்களில் இருந்து கலையரசன் மற்றும் கலையரசி விருதுகள் பெற்ற மாணவர்களுடன் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 1759 மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கலைத்திருவிழா இறுதியில் விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

### *2.5.6. வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்*

வாசித்தல் என்பது அறிவாகிய சுடரை ஏற்றுவது போன்றது என்றும் உச்சரிக்கப்படும் ஒவ்வொரு சொல்லும் குழந்தையின் மனத்தை ஒளிரச் செய்யும் அறிவுச் சுடர் என்றும் தமிழ்நாடு அரசு உறுதியாக நம்புகிறது. 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் புத்தகங்களில் ஒளிந்திருக்கும் தகவல் பெட்டகமாகப் படைப்பாற்றலை வளர்க்க உதவும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும்

வகையில் நூலக இயக்கம் வடிவமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நூலக மேலாண்மைத் தொழில்நுட்பப் பயன்பாடுகள் தொடக்க நிலைச் செயல் முறைகளுடன் இணைந்து படைப்பாற்றலையும், பழக்கவழக்கங்களில் சீரான மாற்றங்களைக் கொண்டுவரும் வகையிலும், வகுப்புக்கு ஏற்றவாறு பொருத்தமான புத்தகங்களைச் சுழற்சி முறையில் வாராந்தோறும் மாணவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி அளவில் தொடங்கி மாநில அளவு வரையில் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளின் மூலம் மாணவர்கள் தாங்கள் வாசித்ததைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு, அரசுப்பள்ளி நூலகங்களுக்கு தேவையான புத்தகங்களைக் கொள்முதல் செய்து

வழங்குவதற்காக அவ்வப்போது கூடி, தேவையான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வழங்குகிறது. 2022-23 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசுப் பள்ளி நூலகங்களுக்கும் (தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்) ரூ.32 கோடி புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

### *2.5.7. சிறார் திரைப்படத் திருவிழா*

பள்ளிக் கல்வித்துறை 6 முதல் 9 ஆம் வகுப்பு வரையில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் வேறுபட்ட பண்பாடு, மொழி, மக்கள் மற்றும் வாழ்விடம் போன்றவற்றை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு மாதமும் திரைப்படம் திரையிடுதலைத் தொடங்கியுள்ளது. திரைப்படம் திரையிடலுடன், சுவரொட்டியை உருவாக்குவது, கதையின் முடிவை மாற்றுவது, விமர்சனங்கள எழுதுவது, திரைப்படத்தின் காட்சிகளை விமர்சனம் செய்வது போன்ற ஆக்கப்பூர்வமான

செயல்களைச் செய்யக் குழந்தைகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத்தகைய நடவடிக்கைகள் வழி மாணவர்களின் இரக்க குணம், பிற பண்பாடுகளை மதித்தல், பாலின வேறுபாடு அறிதல், கூர்ந்து கவனித்தல், உற்று நோக்குதல் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தை நன்கு புரிந்துகொள்வது போன்ற நேர்மறையான நடத்தைகளை ஊக்குவிக்கிறது. பள்ளிகளில் நடைபெறும் இத்தகைய திரையிடல் நிகழ்வுகளில் திரையுலகப் பிரபலங்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

மார்ச் 6 முதல் மார்ச் 11, 2023 வரை பள்ளிக் கல்வித் துறையால் ஒரு வார காலம் நடத்தப்பட்ட குழந்தைகள் திரைப்பட விழா, இத்துறையால் நடத்தப்பட்ட முதல் திரைப்பட விழாவாகும். மாநிலம் முழுவதிலும் உள்ள 13,000 பள்ளிகளில் இருந்து 152 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பள்ளி அளவில் 35,000 மாணவர்களும், மாவட்ட

அளவில் 3,400 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

திரைப்படம் திரையிடல், திரைப்படத் தயாரிப்பின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய விவாதங்கள் மற்றும் குறும்படங்கள் நேரடியாகத் தயாரித்தல் ஆகியவை இந்த விழாவில் அடங்கும். சிறந்த திரைப்படம், சிறந்த எடிட்டிங், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த இசை, சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர் மற்றும் நடிகை என அனைத்துப் பிரிவுகளிலும் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுக்க நிபுணர் குழுவால் மாணவர்கள் தயாரித்த குறுந்திரைப்படங்கள் மதிப்பிடப்பட்டன. மார்ச் 11, 2023 அன்று நடைபெற்ற நிறைவு விழாவின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த திரைப்படங்கள் மற்றும் மாணவக் கலைஞர்கள் பாராட்டப்பட்டனர்.

### *2.5.8. மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகள்*

அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் மாநில அரசானது செயல்பட்டு வருகிறது. அனைத்து மாணவர்களையும் ஏதேனும் ஒரு விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க செய்யவும், மாணவர்களுக்கிடையே மறைந்துள்ள விளையாட்டுத் திறனை கண்டறிந்து, அத்திறனை மேம்படுத்தவும், தேசிய மற்றும் சர்வதேச அளவில் பங்கேற்க செய்யவும் மாநில அரசானது பள்ளிகள் அளவில் போட்டிகளை நடத்தி வருகிறது.

பள்ளி, மண்டலம், மாவட்டம், மாநில மற்றும் சர்வதே அளவில் இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க தொழில்நுட்ப தீர்வுகளுடன் வெளிப்படைத்தன்மையாக போட்டிகள்

நடத்தப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதிலுமுள்ள சுமார் 3,500 உடற்கல்வி ஆசிரியர்களுக்கு SGFI புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள விளையாட்டுகளைப் பற்றிய புத்தாக்கப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இது சார்ந்து மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட விபரங்கள் வாயிலாக சுமார் 20 லட்சம் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் மண்டலம் முதல் சர்வதேச அளவு வரை அனைத்து விளையாட்டு போட்டிகளுக்கும் உடல் திறனாய்வுத் தேர்வு மூலம் பங்கேற்க வழிவகை செய்கிறது.

இதற்கு மேலாக, இந்திய அளவில் சதுரங்க விளையாட்டினை மாணவர்களிடையே ஊக்கப்படுத்தி வளர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டியினை நடத்தும் வாய்ப்பு

தமிழ்நாட்டிற்கு கிடைத்தது. இச்சர்வதேச நிகழ்வுடன் இணைத்து, பள்ளி அளவில் நடத்தப்பட்ட சதுரங்க போட்டியில் 13.29 லட்சம் மாணவர்கள் பங்கேற்று சுமார் 7400 மாணவர்கள் மாவட்ட அளவிலான போட்டிக்கு தேர்வாகியுள்ளனர். 9 முதல் 12 ஆம் வகுப்புகளில் சுமார் 304 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டி நடைபெற்றபோது பார்வையிடவும், உலகளாவிய சதுரங்க போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுடன் கலந்துரையாடவும் அழைக்கப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக, 2023-2024 ஆம் கல்வியாண்டிற்கு ரூ.11.5 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

### *2.5.9. உள்ளடங்கியக் கல்வி*

ஒட்டுமொத்த வளர்ச்சியை உள்ளடங்கிய கல்வியே சமத்துவச் சமுதாயத்திற்கான

அடித்தளம் என்ற அணுகுமுறையில் பள்ளிக் கல்வித்துறையானது பல்வேறு செயல்பாடுகளைச் செயல்படுத்தி வருகிறது. மாணவர்களுக்கு வழங்கப்படும் கற்பித்தல் உத்தி அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் இல்லையெனில் மாணவர்களுக்கு ஏற்றவகையில் கற்பித்தலை வழங்குவது அவசியமாகும். சுமார் 1.4 லட்சம் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும், "வீட்டு வழிக்கல்வி" மூலமாகவும் அவர்களின் தேவைக்கேற்ப உள்ளடங்கிய கல்வி வழங்கப்பட்டு வருகிறது. வீடு வீடாகச் சென்று தொடர் ஆய்வுகள் மூலம் குழந்தைகள் கண்டறியப்பட்டு பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். அடையாளம் காணப்பட்ட குழந்தைகளின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதற்காக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் சுகாதாரத் துறைகளுடன் இணைந்து மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு,

தேவையெனில் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு உதவி உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. குழந்தைகள் மற்றும் அவர்களின் பாதுகாவலர்களுக்குப் பள்ளிக்கு வந்து செல்ல போக்குவரத்து உதவித் தொகைகளும், மாற்றுத்திறனாளி பெண் குழந்தைகளுக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. அதிக உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு வீட்டு வழிக் கல்வியும் வழங்கப்படுகிறது.

மாற்றுத்திறன் மாணவர்களுக்குச் சிறப்பு கல்வியளிக்க, 2,401 சிறப்பு பயிற்றுநர்கள் பணிபுரிகின்றனர். இத்திட்டத்திற்காக 2023-24 ஆம் ஆண்டில் ரூபாய் 87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.5.10. மாணவ மன்ற செயல்பாடுகள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலா:*

மன்றச் செயல்பாடுகள் மாணவர்களின் சமூக திறன்களை வளர்த்து கொள்ளவும், ஆர்வங்களை கண்டறியவும் அதன் வாயிலாக அவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்து கொள்ளவும் உதவுகின்றது.

பள்ளிகளில் மன்றங்களைச் செயல்படுத்துதல் முயற்சியானது, குழந்தைகளுக்கு ஆர்வமூட்டும், மகிழ்வூட்டும் கற்றல் நடவடிக்கைகளுடன், பாடப்புத்தகங்களின் வாயிலாகப் பள்ளியில் கற்பிக்க இயலாத வாழ்க்கைப் பாடங்களை உள்ளடக்கி மறுசீரமைக்கப்பட்டுள்ளது. தோல்வியை எப்படி ஏற்றுக்கொள்வது, வெற்றி பெற விடாமுயற்சியுடன் எவ்வாறு செயல்படுவது போன்ற திறன்களை மன்றச் செயல்பாடுகள் மூலம் அறிந்து கொள்கின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும், இலக்கியம், கலை, நாடகம்,

அறிவியல், கணிதம் மற்றும் பொது அறிவு ஆகிய பல்வேறு துறைகளில் மாணவர்கள் தொடர்ந்து அறிந்து கொள்வதற்கென நூலகம் மற்றும் விளையாட்டுகளுடன் மன்றச் செயல்பாடுகளுக்குப் பள்ளிகளில் குறிப்பிட்ட கால அட்டவணை ஒதுக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையானது, 2022-23 ஆம் கல்வியாண்டில், 6 முதல் 9 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு, ஜூன் மாதம் முதல் அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் கட்டமைக்கப்பட்ட மன்ற செயல்பாடுகளைத் தொடங்கியது. பள்ளி அளவில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் பங்கேற்க ஊக்குவிக்கப்பட்டனர். மாநில அளவிலான போட்டிகளில் முதன்மை பெற்ற மாணவர்கள்

வெளிநாடுகளுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

2023-24 ஆம் கல்வியாண்டில் மன்ற செயல்பாடுகளுக்கென ரூ.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.5.11. கோடைக் கொண்டாட்டம்*

மாணவர்களின் தனித் திறனை மேம்படுத்தவும், கோடை விடுமுறையினை பயனுள்ள வகையில் சமூக கற்றலுடன் செலவிடவும், "கோடைக் கொண்டாட்டம்" சிறப்பு பயிற்சி முகாம் தமிழகத்தில் உள்ள மலைப் பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிலரங்கு சூழலியல், தலைமைத்துவம், மனித உரிமை, சமூக நீதி, பெண்ணுரிமை போன்ற அம்சங்களை புரிந்து கொள்ள உதவுகிறது. 2022 ஜூன் மாதம், ஊட்டியில் நடைபெற்ற சிறப்பு கோடை கொண்டாட்ட சிறப்பு முகாமில் மொத்தம் 1200

மாணவர்கள் பங்கேற்று பயனடைந்துள்ளனர். 2023-24 ஆம் கல்வியாண்டில் இப்பயிற்சி முகாமை சிறப்பாக செயல்படுத்த ரூ.50 லட்சம் செலவினம் மேற்கொள்ளப்படும்.

### *2.5.12. சிறார் பருவ இதழ் மற்றும் ஆசிரியர் மாத இதழ்*

மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கவும் அவர்களின் உள்ளார்ந்த படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஊஞ்சல் இதழும், உயர்வகுப்பு மாணவர்களுக்கு தேன்சிட்டு இதழும் மாதமிருமுறை வெளியிடப்படுகிறது. மேலும், சுமார் 3 லட்சம் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான படைப்புத் தளத்தை உருவாக்கவும், சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிமாறிக் கொள்ளவும் கனவு

ஆசிரியர் என்ற மாதஇதழ் வெளியிடப்படுகிறது. சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்க தினசரி மதிய உணவு வேளையில் சிறப்புக்கால அட்டவணை வழங்கப்பட்டு அரசுப் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 9ஆம் வகுப்பு மாணவர்கள் அதன் உள்ளடக்கங்கள் பற்றி படித்து பின் அது சார்ந்து விவாதிக்கப்படுகிறது.

### *2.5.13. பள்ளி விழிப்புணர்வு வாரம்*

கல்வியாண்டின் முதல் வாரத்தில், மாநில அளவில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு மன நலம், வன்முறை தடுப்பு, தன்னம்பிக்கை வளர்த்தல், போதை மற்றும் மது அடிமை ஒழிப்பு மற்றும் சுய தூய்மை பராமரிப்பு

என பல்வேறு தலைப்புகளில் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2022-23 ஆம் கல்வியாண்டின் முதல் வாரத்தில், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மனநலம், குழந்தைகளுக்கு எதிரான வன்முறை தடுப்பு, தன்னம்பிக்கை வளர்த்தல், போதை அடிமையிலிருந்து தடுப்பு மற்றும் சுய தூய்மை ஆகிய தலைப்புகளில் இவ் விழிப்புணர்வு திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தமிழக அரசானது குழந்தைகளின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு ஏற்ற பள்ளி சூழல் முக்கியம் என்ற நம்பிக்கையில், மாணவர்களின் வாழ்க்கையில் வெற்றி பெற அடித்தளமாக இவ்விழிப்புணர்வு வாரம் செயல்படுகிறது. இதன் அங்கமாக அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கண்ணொளி காண்போம் திட்டம், RBSK திட்டம், WIFS திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாணவர்களுக்கு தேவையான உடல் மற்றும் மன நலன் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்த மருத்துவ பரிசோதனை முகாம்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் போன்ற அரசு நலத் திட்டம், குற்றவியல் நீதி சட்டம், போக்சோ சட்டம், சாலை பாதுகாப்பு, இணைய பாதுகாப்பு, குழந்தைகளுக்கு எதிரான வன்முறை தடுப்பு மற்றும் போதைக்கு அடிமையாகாமல் இருக்க விழிப்புணர்வு உருவாக்கப்படுகிறது.

### *2.5.14. சுற்றுச்சூழல் மன்றம் (ECO – CLUB)*

சுற்றுச்சூழல் மன்றங்களும், தேசிய பசுமைப்படைகளும் பள்ளி மாணவரிடையே சுற்றுப்புறச் சூழல் மற்றும் அதன் பாதுகாப்பு குறித்து சிந்திக்க வைக்கின்றன. இதன் மூலம் சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இம்மன்றத்தின் நோக்கமாகும். அனைத்து

மாவட்டங்களிலும் 11,460 பள்ளிகளில் இம்மன்றம் தொடங்கப்பட்டுள்ளது. தேசிய பசுமைப் படையைச் சேர்ந்த மாணவர்கள் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படச் செய்வதே இதன் நோக்கமாகும்.

சுற்றுச்சூழல் மன்றங்கள் மரம் நடுதல், தோட்டப் பராமரிப்பு, வளாகங்களுக்குள் பசுமை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நெகிழித்தடை பற்றிய விழிப்புணர்வைப் பரப்புதல், உலகச் சுற்றுச்சூழல் நாள், ஓசோன் நாள், பல்லுயிர் ஓம்பல் நாள், ஆகியவற்றைக் கொண்டாடுதல், பள்ளி மாணவர்களிடையே கட்டுரை, ஓவியம் தீட்டுதல், வினாடிவினா ஆகிய போட்டிகள் நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன.

### *2.5.15. நாட்டு நலப்பணித்திட்டம் (NSS)*

நாட்டு நலப்பணித் திட்டமானது சுகாதார முகாம்கள், இரத்ததான முகாம்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்கள், திட்டங்கள் மற்றும் மரம் நடுதல் முதலான சமூக சேவைத் திட்டங்களில் தன்னார்வ நோக்கத்தோடு பணியாற்ற மாணவர்களை ஊக்குவிப்பதன் மூலம், மாணாக்கர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு வித்திடுவதாக அமைந்துள்ளது. தமிழ் நாட்டிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 1,957 நாட்டு நலப்பணித் திட்ட அணிகளில் 97,650 மாணவர்கள் தன்னார்வ நோக்கோடு செயலாற்றி வருகின்றனர். இத்திட்டத்தின் தொடர் செயல்பாடுகளுக்கு ரூ.1.83 கோடியும், சிறப்பு முகாம்கள் நடத்த ரூ.1.64 கோடியும் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### *2.5.16. சாரண சாரணியர் இயக்கம் (SCOUTS AND GUIDES)*

தமிழ்நாட்டில் சாரண சாரணியர் இயக்கம் தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் ஆகியவற்றை தூய்மைப்படுத்துதல்,மரம் நடுதல், சுகாதாரம் மற்றும் உடல்நலம் பற்றிய விழிப்புணர்வைப் பொதுமக்களிடம் ஏற்படுத்துதல், போக்குவரத்து நெரிசலை நெறிப்படுத்துதல் மற்றும் முதலுதவிக்கான பயிற்சி அளித்தல் ஆகிய பல்வேறு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை மாணவர்களுக்காக செயல்படுத்துகிறது. அரசு சாரண சாரணிய இயக்கத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்த ரூ.2 கோடியை மூலதன நிதியாக விடுவித்துள்ளது. இதனால் 3.21இலட்ச மாணவர்களும் 12,740 ஆசிரியர்களும் பயன்பெறுகின்றனர்.

### *2.5.17. இளையோர் செஞ்சிலுவைச் சங்கம் (JRC)*

இளம் செஞ்சிலுவைச் சங்க அலகுகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் ஆலோசகராகவும், ஈடுபாடு உள்ள மாணவர்கள் தன்னார்வலர்களாகவும் இம்மன்றத்தில் செயல்படுகின்றனர். இந்த மன்றம் மனித நேய மதிப்புகளைத் தூண்டவும், திறனை மெருகேற்றவும் உதவுகிறது. இம்மன்றத் தன்னார்வலர்களுக்கு, முதலுதவி, பேரிடர் மேலாண்மை, சாலைப்பாதுகாப்பு, தீயிலிருந்து தற்காத்துக்கொள்ளுதல், விழாக்களின் போது பொதுமக்களை வழிநடத்துதல் ஆகியவற்றிற்காக பயிற்சி அளிக்கப்படுகிறது. இச்சங்கம் 11,824 இளஞ்செஞ்சிலுவைச் சங்க அலகுகளையும், 4,72,960 மாணவ உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

### *2.5.18. எண்ணிய தொழில்நுட்ப விரிவாக்கம் (Digital Technology): திறன்மிகு வகுப்பறைகள் & உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள்*

தற்போதைய தொழில்நுட்ப உலகில், தொழில்நுட்ப எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் மாணவர்களைத் தயார்படுத்துதல் அவசியம் ஆகும். தொழில்நுட்ப உள்கட்டமைப்பை வழங்குவதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ள தமிழ்நாடு அரசு, மாணவர்களுக்குப் பொருத்தமான கற்றல் சூழலை உருவாக்குவதற்கு 2022-23 ஆம் கல்வியாண்டு முதல் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்களை நிறுவவும், அடுத்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தின் அனைத்து அரசுத் தொடக்கப் பள்ளிகளிலும் திறன்மிகு வகுப்பறைகளை அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2023-24 ஆம்

கல்வியாண்டில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில இருக்கும் 37 லட்சம் மாணவர்களுக்காக ஒவ்வொரு வாரத்திற்கான வளரறி மற்றும் மாதத்திற்கான தொகுத்தறி மதிப்பீட்டு முறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

2022-23இல் 7,500 திறன் வகுப்பறைகளுக்கு முதல் கட்டமாக ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2023-24ஆம் ஆண்டில் 5,000 திறன் வகுப்பறைகள் மற்றும் 3,500 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் முறையே ரூ.100 கோடி மற்றும் ரூ.175 கோடி மதிப்பில் அமைக்கப்பட உள்ளன.

### *2.5.19. உள்கட்டமைப்பு வசதிகள்:*

கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு ஏற்றச் சூழலை வழங்குவதற்குப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பராமரிப்பு முக்கியமானது. மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின்படி, அடுத்த ஐந்தாண்டுகளில் பள்ளிகளை மேம்படுத்தும் வகையில் ரூ.7500 கோடி செலவில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் நடப்பு ஆண்டில் ரூ.800 கோடி செலவில் 6000 புதிய வகுப்பறைகள் கட்டப்படுகின்றன. இதன்பொருட்டு 30 விழுக்காட்டுத் தொகை, அதாவது ரூ. 240 கோடி ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு 2022-23ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

2023-24ஆம் கல்வியாண்டில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கணினி அறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் போன்றவை ரூ.1156 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். பராமரிப்புப் பணிக்கான ஒதுக்கீடு இரண்டு

ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ரூ.30 கோடியிலிருந்து 2023-24இல் ரூ.150 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### *2.5.20. பள்ளி மேலாண்மைக் குழு:*

பள்ளி அளவில் பெற்றோர்கள், உள்ளாட்சி உறுப்பினர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் கல்வியாளர்களை உள்ளடக்கிய பள்ளி மேலாண்மைக் குழு செயல்படுகிறது. பள்ளி அளவில், பள்ளி மேலாண்மைக் குழு, பள்ளியின் கல்வி செயல்திறனை வளர்க்கவும், கண்காணிப்பதற்கும், இன்றியமையாத பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் செயல்படும் பள்ளி மேலாண்மைக் குழுக்களுக்குப் புதிய வடிவம் வழங்கப்பட்டுள்ளது. 23.54 இலட்சம் பெற்றோர் பங்கேற்புடன் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள்

(SMC) மறுகட்டமைக்கப்பட்டுள்ளன. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் மாநில அளவில் உள்ளவர்களுக்கும் SMC மறுகட்டமைப்பு, கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த பயிற்சி இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்டக் கள அலுவலர்களுக்கும் பள்ளி மேலாண்மைக் குழு குறித்த விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

அனைத்து வகையான அரசுப் பள்ளிகளிலும் 98 சதவிகித பள்ளி மேலாண்மைக் குழுக்களின் மறுகட்டமைப்பு பல்வேறு கட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளது. பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்கான தொழில் நுட்பத் தீர்வு தொடங்கப்பட்டுள்ளது. 2022-23ஆம் ஆண்டில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களால் பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல்

மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய செயல்பாடுகளுக்காக ரூ.12.57 கோடி செலவிடப்பட்டுள்ளது. பள்ளி மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்துப் பள்ளி மேலாண்மைக் குழுக்களாலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. குறைகளைத் தீர்க்கும் வகையிலும், கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையிலும், பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பப்படுகின்றன.

### *2.5.21. தகைசால்பள்ளிகள் (School of Excellence)*

07.05.2022 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மாநிலம் முழுவதும் உள்ள 28 பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தி, அவர்கள் கற்றலில் சிறந்து விளங்க ஊக்குவிக்கும் வகையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் தேவையான உள்கட்டமைப்பு, கல்வி மற்றும் இணை பாடத்திட்ட தேவைகளை வழங்குவதைத் தகைசால் பள்ளிகள் நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்பள்ளிகள் திறமையை வளர்க்கும் தளங்களாகச் செயல்படவும், விளையாட்டுத்திறன் மற்றும் கடினமாக உழைக்கக்கூடிய தன்மையை வளர்க்கவும், உள் மற்றும் வெளிப்புற வாய்ப்புகளை உணரச் செய்வதற்கும், இதன்மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான எல்லைகளை விரிவுபடுத்தவும் உதவுகின்றன.

இப்பள்ளிகள், பல்வேறு வகையான கல்விசார் மற்றும் கல்வி சாரா இணைச் செயல்பாடுகளை முன்னெடுப்பதன் மூலமும், மாணவர்களை ஆளுமைத்திறனுடன் சிறந்து விளங்கச்

செய்வதன் மூலமும் முழுமையான கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், கலை, நாடகம் மற்றும் இசை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களின் மூலம் கூடுதல் கற்பித்தல் வகுப்புகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பள்ளி மேலாண்மைக் குழு மூலம் விளையாட்டு ஆசிரியர்கள் மற்றும் நூலகர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

மேலும், ஆசிரியர்கள் தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் பாடத்திட்டங்களை அறிந்து கொள்ள நாட்டின் முதன்மையான நிறுவனங்களுக்குச் செல்லவும் மற்றும் மேற்படிப்புகள் பயிலவும் ஊக்கப்படுத்தப்-படுகின்றனர்.

இனிவரும் ஆண்டுகளில் மேற்கண்ட விளைவுகளை முழுமையாக அடைவதற்கான

அடித்தளத்தை அமைக்கும் வகையில், உள்கட்டமைப்பைப் புதுப்பித்தல், கட்டடம் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பைத் தொடங்குதல் மற்றும் வளங்கள் சேகரித்தல் போன்ற நிகழ்வுகளுக்காக 2022-23ஆம் ஆண்டில் ரூ.169.4 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

### *2.5.22. மாதிரிபள்ளிகள் (Model Schools)*

மாநிலம் மற்றும் நாடு முழுவதும் உள்ள முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் தொழில்முறை படிப்புகளில் சேருவதற்கு அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் எதிர்கொள்ளும் கடுமையான சமத்துவ-மின்மையை நன்கு உணர்ந்த தமிழ்நாடு அரசு, இந்த ஏற்றத்தாழ்வைப் போக்கும் வகையில் மாநிலம் முழுவதும் 10 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய பகுதிகளில் மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறந்த கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள்

தொழில்சார் துறைகளில் (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் மருத்துவம் - STEAM) படிப்பதற்கான வாய்ப்பை உறுதி செய்வதே மாதிரிப் பள்ளிகளை உருவாக்கியதன் முக்கிய நோக்கமாகும். முக்கியப் பாடங்களில் சிறந்து விளங்கும் வகையிலும் மாணவர்களுக்குத் தக்க ஆலோசனைகள் வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள முதன்மை நிறுவனங்களில் கல்வி கற்பதற்குத் தேவையான ஆர்வம், பன்முக ஆளுமைப் பண்பு, சமத்துவம் மற்றும் முற்போக்கான அணுகுமுறைகளைச் செயல்படுத்தும் சிறந்த தளங்களாக இம்மாதிரிப் பள்ளிகள் செயல்படுகின்றன.

தற்போது 10 மாவட்டங்களில் செயல்படும் மாதிரிப் பள்ளிகள் அக்டோபர் 2021 முதல் 12ஆம்

வகுப்பு மாணவர்களுடன் செயல்பட்டு வருகின்றன. 2022-23ஆம் ஆண்டில், மாதிரிப் பள்ளிகள் திட்டம் ரூ.125 கோடி செலவில் மாநிலம் முழுவதும் கூடுதலாக 15 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாணவர் விரும்பும் இலக்கை அடைவதற்காக, மாதிரிப் பள்ளிகளில் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் அவர்தம் பெற்றோருக்கும் திறன்கள் மற்றும் தகுதி அடிப்படையில் உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் பற்றிய ஆழமான விழிப்புணர்வை வளர்ப்பதற்குத் தேவையான தொழில் வழிகாட்டுதலைச் செயல்படுத்த 2023-24 ஆம் கல்வியாண்டில் ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.5.23. பள்ளி மானியம்:*

செயல்படாத உபகரணங்களை மாற்றுதல், இணைய வசதி, கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் கொள்முதல் செய்தல், பராமரிப்பு,

கட்டிடங்களைப் பழுது பார்த்தல் போன்றவற்றின் மூலம் கற்றல் சூழலை மேம்படுத்த அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் ஆண்டுதோறும் பள்ளி மானியம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை பின்வருமாறு:

| **வ. எண்.** | **பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை** | **பள்ளிக்கு வழங்கப்படும் மானியத் தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| 1. | 11 முதல் 15 வரை | 12,500 |
| 2. | 16 முதல் 100 வரை | 25,000 |
| 3. | 101 முதல் 250 வரை | 50,000 |
| 4. | 251 முதல் 1000 வரை | 75,000 |
| 5. | 1000 க்கு மேல் | 1,00,000 |

2022-2023ஆம் கல்வியாண்டில், பள்ளி மானியமாக ரூ.119.27 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### *2.5.24. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்*

தேர்ந்தெடுக்கப்பட்ட 1,545 மாநகராட்சி, நகராட்சி, ஊரக மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 1,14,095 மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் முன்னோடித் திட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக ரூ. 33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.5.25. நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி*

வளமான புதிய தலைமுறையினரை உருவாக்க தமிழ்நாடு அரசானது சமூக அமைப்புகள், பெருந்தொழில் நிறுவனங்கள்

மற்றும் தனிநபர் ஆகியோருடன் இணைந்து பள்ளிகள் மேம்பாடு அடைவதை இலக்காக கொண்டு உருவாக்கப்பட்ட திட்டமே 'நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' அமைப்பாகும். அரசுப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் 2022-23 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் பெறப்படும் பொது மக்களின் பங்களிப்பால் அரசு பள்ளிகளில் உட்கட்டமைப்பு, சுகாதாரம், விளையாட்டு, கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சி போன்றவை மேம்படுத்தப்பட்டு மாணவர் கற்றல் திறன் உலக தரத்தில் மேம்பட வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

2022-23ஆம் கல்வி ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் தனிநபர் மற்றும் பெரும்தொழில் நிறுவனங்கள் மூலம் ரூ.68.47 கோடி பெறப்பட்டுள்ளது.

## 2.6. சமநிலைக் கல்வி (Equity)

சமூகத்தில் நலிவடைந்த / பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில், பெண் குழந்தைகளுக்கு உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதி வசதிகளை உருவாக்குதல், வளரிளம் பருவப் பெண்களுக்குச் சுகாதார வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி வழங்குதல், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான மருத்துவ வசதிகள்/ உபகரணங்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### *2.6.1 நலத்திட்டங்கள்*

அரசுப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் கல்வியை தொடரவும், பொருளாதார, சமூகக் காரணங்களால் தடையேதுமின்றி பள்ளிக்கல்வியை நிறைவு

செய்வதற்காகவும் அரசு பின்வரும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

| வ. எண் | நலத் திட்டத்தின் பெயர் | வகுப்பு | பயன்பெற்ற மாணவர் எண்ணிக்கை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பாடநூல்கள் | 1-12 | 78.95 |
| 2 | நோட்டுப்புத்தகம் | 1-10 | 62.20 |
| 3. | புத்தகப்பை | 1-12 | 74.60 |
| 4. | காலணிகள், கால் ஏந்திகள் மற்றும் காலுறைகள் | 1-10 | 61.98 |
| 5. | புவியியல் வரைபடம் | 6& 7-10 புதிதாக சேர்ந்த மாணவர்-களுக்கு | 9.84 |
| 6. | கிரையான் மற்றும் வண்ணப் பென்சில் | 1-5 | 26.35 |

| | | | |
|---|---|---|---|
| 7. | கணித உபகரணப் பெட்டி | 6&9 | 14.20 |
| 8. | சிறப்பு ஊக்கத்தொகை | 10-12 | 16.37 |
| 9. | சீருடை | 1-8 | 42.22 |
| 10. | மிதிவண்டி | 11 | 5.29 |
| 11. | கம்பளிச்சட்டை | 1-8 | 1.17 |
| 12. | மழையாடைகள், காலுறைகள் | 1-8 | 1.17 |
| 13. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் | 1-10 | 49.12 |
| 14. | பேருந்து பயண அட்டை | 1-12 | 37.08 |

| | | | |
|---|---|---|---|
| 15. | வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவி | 1-12 | 1,847.00 |

### *2.6.2. பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்:*

வருகைப் பதிவேட்டின் அடிப்படையில், இடை நிற்றலுக்கான வாய்ப்புள்ள மாணவர்களைக் கண்டறியும் வழிமுறைகளை பள்ளிக்கல்வித் துறை உருவாக்கியுள்ளது. இதன் அடிப்படையில் சிறப்புப் கைபேசி செயலியின் மூலம் வீடு வீடாகக் கணக்கெடுப்புப் பணி நடத்தப்படுகிறது. அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள், பொதுமக்கள் மற்றும் அரசின் சிறப்புத் திட்டமான இல்லம் தேடிக் கல்வியின் தன்னார்வலர்களைக் கொண்டு உள்ளடக்கிய பள்ளி, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான

குழுக்களை உருவாக்கி, மாவட்ட ஆட்சியர் தலைமையில் சமூகப் பங்கேற்புடன் ஆண்டு முழுவதும் பெண் குழந்தைகள், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள், திருநங்கைகள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள், அருகில் உள்ள பள்ளிகளில் வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

2023-24ஆம் கல்வி ஆண்டில் இத்திட்டத்தின் தொடர்ச்சிக்காக ரூ.8.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.6.3. வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்*

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களின் வருவாய் ஈட்டும் தாய் / தந்தை விபத்தில் இறந்தாலோ

அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அதனால் பாதிக்கப்படுகின்ற அவர்தம் குழந்தைகளுடைய பள்ளிக் கல்வி எவ்விதத்திலும் தடைபடாமல் இருக்க கல்வி உதவித் தொகையாக ரூ.75,000/- பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி உதவித் தொகை சார்ந்த மாணவர் மற்றும் பாதுகாவலர் பெயரில் வைப்பு நிதியாக தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்(TNPFC) முதலீடு செய்யப்பட்டு அம்மாணவர் பள்ளிப் படிப்பை முடிக்கும் வரை அவ்வைப்பு நிதியின் வட்டித் தொகை சார்ந்த மாணவரின் கல்விச் செலவிற்குப் பயன்படும் வகையில் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 2022-23 ஆம் கல்வியாண்டில் ரூ.10.68 கோடி மதிப்பில் 1540 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

### *2.6.4. தமிழ்நாடு ஊரக திறனாய்வுத் தேர்வுத் திட்டம் (TRUST)*

ஊரகப் பகுதிகளில் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/- க்குள் இருக்கும் மாணவ/ மாணவியர்களில் அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்றவர்களுக்கு, அரசுத் தேர்வு இயக்குநரகத்தால் “தமிழ்நாடு கிராமப்புற மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு (Tamil Nadu Rural Students Talent Search Scheme Exam) நடத்தப்பட்டு, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் (சென்னை நீங்கலாக) (37 மாவட்டங்கள்) இத்தேர்வுக்கு தற்போது 9 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் (எட்டாம் வகுப்பில் மொத்த மதிப்பெண்களில் குறைந்தபட்சம் 50 விழுக்காடு பெற்று தேர்ச்சியடைந்த) மாணாக்கர்களே தகுதியானவர்கள். ஒவ்வொரு ஆண்டும் இத்தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ/

மாணவிகளுக்கு ஆண்டிற்கு ரூ.1000/- ம் வீதம் 4 ஆண்டுகளுக்கு 12ஆம் வகுப்பு வரை தொடர்ந்து பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. கடந்த 2022-23ஆம் கல்வியாண்டில் 3700 மாணவர்கள் இத்தேர்வின் மூலம் உதவித் தொகைக்கு தகுதி பெற்றிருக்கின்றனர். 2022-23ஆம் ஆண்டிற்கு ரூ.1.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையானது அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

### *2.6.5. தேசிய திறன் மற்றும் வருவாய் உதவித் தொகை (NMMS)*

பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு மேல்நிலைப் படிப்பைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் உதவித்தொகை வழங்குவதற்கான இந்திய அரசின் ஒரு முன்னோடித் திட்டமே தேசிய திறன் மற்றும் வருவாய் உதவித்தொகை

திட்டமாகும். மாநில அரசானது 8ஆம் வகுப்பில் 55% மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியுறும் மாணவர்களுக்கு இந்த தகுதித் தேர்வினை நடத்தி உதவித்தொகைக்குத் தேர்வு செய்கிறது. தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஆண்டுக்கு முறையே, ரூ.12,000/- வீதம் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2022-23ஆம் கல்வியாண்டில் தமிழகத்திலிருந்து 5,613 மாணவர்கள் இவ்வுதவித் தொகைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### *2.6.6. மாணவர் விபத்து நிவாரணத் திட்டம் (SARS)*

பள்ளியிலோ அல்லது பள்ளி சார்ந்த செயல்பாடுகளின்போதோ ஒரு மாணவர் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளாகும்போது அம்மாணவர்களுக்கு நிவாரண நிதி வழங்குகின்ற ஒரு புதுமையான திட்டத்தை மாநில அரசு

உருவாக்கியுள்ளது. அரசு, அரசு உதவிபெறும், ஊராட்சி பள்ளிகளில் பயில்கின்ற மாணவர்களுக்காக இத்திட்டம் செயல்படுத்தப்-படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விபத்தில் மரணமடைந்தவர்க்கு ரூ.1,00,000/- எனவும், பெரிய காயமடைந்தவருக்கு ரூ. 50,000/- எனவும், சிறிய காயங்களுக்கு ரூ.25,000/- எனவும் அம்மாணவனின் குடும்பத்தாருக்கு வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில் ரூ.4.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 மாணவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2.7. ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக முயர்ச்சிகள்

### *2.7.1. ஆசிரியர்களின் தொழில்முறை மேம்பாடு*

ஆசிரியர் கல்விக்குப் புத்துயிர் ஊட்ட கீழ்க்காணும் மூன்று முறைகள் செயல்படுத்தப்படுகின்றன.

(அ) தொழில்முறைப் பயிற்சியாளர்களாக ஆசிரியர்களின் திறன்களை வலுப்படுத்துதல் - பொருளடக்கம் சார்ந்த புரிதல் கற்பித்தல் முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்களை (டிஜிட்டல் தொழில் நுட்பங்கள் உட்பட) வளர்ப்பதில் கவனம் செலுத்துதல். ஆசிரியர்களுக்கான தொழில்சார் மேம்பாட்டுத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) பள்ளி அளவில் கல்வி முடிவுகளை வலுப்படுத்துவதற்கான வளங்கள் மற்றும் அணுகுமுறைகளுடன் பாடத்திட்ட அனுபவங்களை வடிவமைத்தல்

(இ) நடைமுறையில் உள்ள தொழில்முறை சமூகங்களை வலுப்படுத்துதல் - தனிநபர் இடைவினைக்கான திட்டமிடல் மற்றும் மீளாய்வு குழுக்கள், குறுவள மையம், ஒன்றிய அளவில் அமைத்தல் மற்றும் கற்றல், பகிர்தலுக்கான இணையவழிக் குழுக்களை அமைத்தல்.

நிகழ்ச்சி நிரல்/வழிகாட்டுதல்களின்படி பயிற்சிகள் முறையாகச் செயல்படுவதை மேற்பார்வையிடவும், கற்றல், கற்பித்தல் உபகரணங்களின் (TLM) பயன்பாடு, திறனை மதிப்பிடவும், வகுப்புப் பங்கேற்பை மதிப்பிடவும், பிற தளங்களில் பின்னூட்டத்திற்கான கருத்துக்களை வலுப்படுத்தவும் மற்றும் பயிற்சி அமர்வுகளைக் கவனிப்பதற்காகவும் கள அலுவலர்களுக்கான பயிற்சி பார்வை தொழில்நுட்பச் செயலியைப் பள்ளிக்கல்வித் துறை உருவாக்கியுள்ளது.

2022-23 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்கும் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குச் சிறப்புத் திறன் மேம்பாட்டை உறுதி செய்வதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டம் தொடர்ச்சியாகச் செயல்பட ரூ.454.31 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### *2.7.2. தற்காலிக ஆசிரியர் நியமனம்*

தமிழ்நாட்டில் 2022-23 ஆம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை, பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்தன. முறையான நேரடி நியமனம் வாயிலாக மேற்கண்ட காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் வரை இடைநிலை ஆசிரியர்கள் மாதம் ரூ.12000, பட்டதாரி ஆசிரியர்கள் மாதம் ரூ.15000 மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மாதம் ரூ.18000 என்கிற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்திட அரசாணை வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ளது.

### *2.7.3. கருணை அடிப்படை நியமனம்*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இறந்த அரசு ஊழியர்களின்

வாரிசுதாரர்களில் தகுதியான 269 நபர்களுக்கு இளநிலை உதவியாளராக 13.10.2022 அன்று கருணை அடிப்படை நியமன ஆணை வழங்கப்பட்டது.

### *2.7.4. மாவட்ட அளவில் நிர்வாக சீரமைப்பு*

மாவட்ட அளவில் தொடக்கக்கல்வி, இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகளை வெவ்வேறு அலகுகளாக நிர்வகிப்பதற்காக 58 மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), 55 மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மற்றும் 39 மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) அலுவலகங்கள் 38 வருவாய் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### *2.7.5. வட்டாரக்கல்வி அலுவலர்கள் பதவி உயர்வு மற்றும் நியமனம்*

19.09.2022 மற்றும் 20.09.2022 ஆகிய நாட்களில் நடைபெற்ற கலந்தாய்வு மூலம் 61

நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வட்டாரக் கல்வி அலுவலர்களாக பதவி உயர்வு பெற்றனர். மேலும் கூடுதலாக 91 வட்டாரக் கல்வி அலுவலர்கள் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்டனர்.

### *2.7.6.கோப்புகள் மின் அலுவலகம் (e-office) நடைமுறைப்படுத்துதல்*

பள்ளிக்கல்வியின் மாநில அலுவலகத்தில் உள்ள கோப்புகளை விரைவாகக் கையாளும் வகையில் அலுவலக நடைமுறைகள் e-office மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து மாவட்டங்களிலும் இம்முறை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இந்நடைமுறை மூலம், அரசு ஆணைகளை வழங்குதல் மற்றும் முன்னுரிமைத் திட்டங்களுக்கான நிருவாக அனுமதிகளைப் பெறுதல் மற்றும் பொதுக் கோரிக்கைகளுக்கான

அலுவலகச் செயலாக்கம் போன்ற நடவடிக்கைகள் காலக்கெடுவுடன் விரைவாக முடிக்கப்படும்.

### *2.7.7. குடிமக்கள் சேவைகள்*

பள்ளிக்கல்வி துறை, மாணவர்களுக்கு இணையம் வாயிலாக மாற்றுச் சான்றிதழ், நற்சான்றிதழ், தமிழ்வழி பயின்றவர்களுக்கான சான்றிதழ் (PSTM) போன்றவற்றை வழங்குகின்றது. இவை முன்னர் நேரில் மட்டுமே வழங்கப்பட்டன. இவ்வாறு இணையம் வழியாக அளிக்கும் 23 சேவைகள் மூலம் கடந்த 2 மாதங்களில் 1.75 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

### *2.7.8. பள்ளிப்பதிவேடுகள் கணினிமயமாக்குதல்*

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நிர்வாகப் பணிச்சுமையைக் குறைப்பதற்காக, பள்ளிப் பதிவேடுகள்

அனைத்தும் கணினி மயமாக்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நிருவாக பணிச்சுமையினை இயன்ற அளவு குறைத்து அவர்கள் தங்களை முழுமையாக கற்றல்-கற்பித்தல் பணிக்கு ஈடுபடுத்திக்கொள்ளும் வகையில் பள்ளிகளில் பராமரிக்கப்பட்டு வரும் சுமார் 100 வகையான பதிவேடுகளில் சிலவற்றை கணினிமயமாக்கியும், சிலவற்றை நீக்கியும் சிலவற்றை நேரடியாக பாராமரிக்கவும் ஆணையிடப்பட்டது. 2022-23ஆம் கல்வி ஆண்டில் 45 பதிவேடுகள் கணினிமயமாக்கப்பட்டு பள்ளிகளுக்கு பராமரிப்பு சார்ந்த செயல்முறைப்பயிற்சி அளிக்கப்பட்டது.

### *2.7.9. தமிழ்நாடு பள்ளிப் பார்வை*

பள்ளிக்கல்வி துறை, அறிவியல் முறையில் தரவுகளைச் சேகரித்து சான்றுகளின் அடிப்படையில் நிர்வாக முடிவுகளை

மேற்கொள்ள நவீன செயலி முறையை உருவாக்கி நடைமுறைப்படுத்தியுள்ளது. துறையின் முதன்மைச் செயளாலர் முதல் வட்டாரக் கல்வி அலுவலர் வரை அனைத்து அலுவலர்களும் மாணவர்களின் கற்றல் நிலைகளை துல்லியமாக மதிப்பீடு செய்து கண்காணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் கல்வித் துறை அலுவலர்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், வட்டார, மாவட்ட, மாநில அளவில் பள்ளிகளோடு தொடர்புடையோர்களின் இணைப்பை வலுப்படுத்தப்படுகிறது.

இச்செயல்முறைகளால் மேற்கொள்ளப்படும் தொடர் கண்காணிப்பு, மதிப்பீடுகள் சான்றுகள் அடிப்படையில் துல்லியமாக அமைவதால் கள

எதார்த்தத்தை அறியவும் வாய்ப்பாகிறது. 2022-23ஆம் கல்வியாண்டில் 30,000 நிர்வாக அலுவலர்கள் 38 மாவட்டங்களில் 1.8 இலட்சம் வகுப்புகள் பார்வையிடப்பட்டுள்ளன. இப்பள்ளி பார்வை செயலியை அடிப்படையாக கொண்டு இதுவரை 12 மண்டல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### *2.7.10. பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி:*

ஒரு பள்ளியின் தலைமையானது, ஆசிரியர்களை ஊக்கப்படுத்துதல், கற்றல் மற்றும் கற்பித்தல் நிகழ்வுகளுக்கு உரிய சூழலை வடிவமைத்தல், சமூகம் மற்றும் பள்ளியின் முன்னாள் மாணவர்களுடனான தொடர்பு போன்ற கல்வி சார்ந்த அனைத்து அம்சங்களின் மீதும் தன்னுடைய தாக்கத்தைக் கொண்டுள்ளது. பள்ளிகளை மேம்படுத்துவதில் வலுவான தலைமைத்துவத்தின் மகத்தான

முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, பள்ளிக் கல்வித் துறை, பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு (HMs) ஆண்டுதோறும் தலைமைத்துவ மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தை வடிவமைத்துச் செயல்படுத்தி வருகிறது.

பள்ளிக்கான எளிதில் அடையக்கூடிய சுய இலக்குகளை நிர்ணயித்தல், பாடத்திட்டத் தேவைகளைப் புரிந்துகொள்வது மற்றும் ஆசிரியர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டினை அளித்தல், கற்றல் கற்பித்தல் செயல்முறைகளை பள்ளி நிருவாகத்தில் செயல்திறனை மேம்படுத்துதல், பள்ளியின் வளர்ச்சிக்குத் தேவையான சமூக ஈடுபாட்டை வளர்ப்பது, ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுடன் ஒருங்கிணைந்த செயல்பாட்டை உருவாக்குதல், அரசாங்கத்தின் முதன்மையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழிவகுத்தல், எளிதாக்குதல் மற்றும்

கண்காணித்தல் போன்ற பல்வேறு அம்சங்களில் 8304 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அதற்கான திறன்களைப் பெற்றுள்ளனர்.

இந்தக் கல்வியாண்டில் நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு இத்திட்டத்தினைச் செயல்படுத்திட ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.7.11.பள்ளிக் கல்வி அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி:*

நாட்டின் சிறந்த கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களின் உதவியுடன் திறன் மேம்பாடு, தலைமைத்துவம் மற்றும் மேலாண்மை ஆகிய பொருண்மைகளில் ஆண்டுதோறும் நிர்வாகிகளுக்கு உண்டு உறைவிடப் பயிற்சி அளிக்கப்படும் என்று 2022ஆம் ஆண்டு

சட்டமன்றத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது..

அதனடிப்படையில், 22 இணை இயக்குநர்கள், 38 முதன்மைக் கல்வி அலுவலர்கள், நேரடியாக நியமிக்கப்பட்ட 20 மாவட்டக் கல்வி அலுவலர்கள், பதவி உயர்வு பெற்ற 87 மாவட்டக் கல்வி அலுவலர்கள், 2009 மற்றும் 2012ஆம் ஆண்டில் நேரடியாக நியமிக்கப்பட்ட 67 வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் 2022ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட 95 வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு நிருவாகத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2023-24ஆம் கல்வியாண்டில் வட்டாரக் கல்வி அலுவலர்கள் முதல் இணை இயக்குநர்கள் வரையிலான அனைத்துக் கல்வி அலுவலர்களுக்கான கல்வி மற்றும் நிருவாகத்

திறன் மேம்பாட்டுப் பயிற்சியானது, புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் மற்றும் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து உண்டு உறைவிடப் பயிற்சியாகத் தொடர்ந்து நடத்தப்படும்.

## 2.8. ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி:

கல்விசார் குறியீடுகளையும், கல்வியின் தரத்தையும் உயர்த்த ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட இத்திட்டம், முன்தொடக்க, தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை என்ற தடைகளின்றி முன் தொடக்கக் கல்வி முதல் 12ஆம் வகுப்பு வரை தொடர்நிலையாக அமையச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது முன்பிருந்த அனைவருக்கும் கல்வி இயக்கம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் மற்றும் ஆசிரியர் கல்வி ஆகிய திட்டங்களின் ஒருங்கிணைந்த திட்டமாகும். ஒன்றிய மற்றும்

மாநில அரசுகள் முறையே 60:40 என்ற விழுக்காட்டில் இத்திட்டத்திற்கான நிதியுதவியைச் செய்கின்றன. மேலும், பள்ளிச் செல்லும் குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி மற்றும் சமநிலைக் கல்வியை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பள்ளிக்கல்வித் துறையால் வழங்கப்பட்ட பாடப் புத்தகங்களில் உள்ள விரைவுத் துலங்கல் குறியீடுகள் மூலம் அவற்றில் உள்ளடக்கிய ஒலி-ஒளி வடிவிலான பாடங்கள் மற்றும் மதிப்பீட்டு வினாக்களை எளிய முறையில் மாணவர்கள் அணுகி, புரிதலுடன் கற்பதற்கு ஏதுவாக வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் ஆசிரியர் பணியிடைப் பயிற்சிகளை நடத்துவதற்காக நிதி ஆதாரங்களை ஒன்றிய அரசிடமிருந்து பெறுவதில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது.

## 2.9. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககங்களுக்கு 2023-24 ஆம் ஆண்டிற்கு ரூ.39,446.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 3. தனியார் பள்ளிகள் இயக்ககம்

## 3.1. முன்னுரை

புதியதாக தனியார் பள்ளிகள் இயக்ககம் சனவரி 2023 முதல் மாநிலப் பாடத்திட்டத்திலும் மாநிலப் பாடத்திட்டம் அல்லாத இதர கல்வி வாரியங்களின்கீழ் செயல்படும் தனியார் பள்ளிகளை ஒருங்கிணைத்து நிர்வகிக்கவும் கண்காணிக்கவும் உருவாக்கப்பட்டது.

அரசு வழிகாட்டுதலின் கீழ் ஆங்கில வழி மற்றும் தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களின் சில கல்வித் தேவைகளை தனியார் பள்ளிகள் பூர்த்தி செய்கின்றன. இப் பள்ளிகள் மாநிலப் பொதுப் பள்ளிக் கல்வி வாரியம் / மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் மற்றும் மாநிலப் பாடத்திட்டம் அல்லாத இதரக் கல்வி வாரியங்கள் (State Common Board / CBSE / ICSE / IB /IGCSE, etc.) போன்றவற்றின் பாடத்திட்டத்தைப்

பின்பற்றும் சுயநிதிப் பள்ளிகளாகும். தற்போது 12,631 தனியார் பள்ளிகளில் சுமார் 56.9 இலட்சம் குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். இந்தப் பள்ளிகளை மாநில அளவில் தனியார் பள்ளிகள் இயக்குநரும் மற்றும் வருவாய் மாவட்ட அளவில் மாவட்ட கல்வி அலுவலர்களும் (தனியார் பள்ளிகள்) கண்காணிக்கின்றனர்.

### 3.2. தொலை நோக்கு

மாணவர்களுக்கு தரமான கல்வி, பாதுகாப்பான கற்றல் சூழல், பள்ளிகளில் நல்ல உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், முழுமையான கல்வித் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமனம் செய்தல், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011ஐ நடைமுறைப்படுத்தல் மற்றும் அனைத்து

வகையான தனியார் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை இணையவழியாக வெளிப்படைத் தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்படுவதை அனைத்து வகையான தனியார் பள்ளிகளிலும் உறுதி செய்வதை தொலைநோக்காகக் கொண்டுள்ளது தனியார் பள்ளிகள் இயக்ககம்.

## 3.3. குறிக்கோள்கள்

- தனியார் பள்ளிகளில் போதுமான மற்றும் பாதுகாப்பான உட்கட்டமைப்பு வசதிகள் இருப்பதை உறுதி செய்தல்.
- புதிய தனியார் பள்ளிகளைத் திறக்க அனுமதி வழங்குதல்.
- மாணவர்களுக்கு கற்றலுக்கு உகந்த சூழலை உறுதி செய்தல் மற்றும் கல்வித் தரத்தினை மேம்படுத்துல்.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்,

2009ஐ நடைமுறைப்படுத்துவதில் அரசின் முகமையாகச் செயல்படுதல்.

- தனியார் பள்ளிகள் நிர்வாகம் தொடர்பான சட்டங்கள், விதிகள் மற்றும் அரசால் அவ்வப்போது வழங்கப்படும் வழிகாட்டுதல்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்-படுவதை உறுதி செய்தல்.

## 3.4.தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டம், 2018

மாநிலப் பள்ளிக் கல்வி பொதுப் பாடச் சட்டம், 2010 நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், அனைத்துத் தனியார் பள்ளிகளும், மாநிலப் பொதுக் கல்வி வாரியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. அனைத்து வகை தனியார் பள்ளிகளையும் நிர்வகிக்க பொதுவான சட்டம் மற்றும் விதிகள் வகுப்பதற்கான ஆலோசனைகளை வழங்க ஒரு வல்லுநர் குழு

அமைக்கப்பட்டது. வல்லுநர் குழுவின் ஆலோசனைகளின்படி தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) சட்டம், 2018 சட்டமாக்கப்பட்டது. தனியார் பள்ளிகள் தரமான கல்வி அளிப்பதையும், குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதையும் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதையும் இச்சட்டம் வலியுறுத்துகிறது. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) விதிகள் 2023 தமிழ்நாடு அரசிதழ் எண்.22/2023-ல் 13.01.2023 அன்று வெளியிடப்பட்டு நடைமுறைக்கு வரப் பெற்றுள்ளது.

## 3.5. பங்களிப்பு மற்றும் பொறுப்புகள்

### *3.5.1. அனுமதி / அங்கீகாரம்*

புதிய தனியார் பள்ளிகள் தொடங்கவும், தனியார் உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தவும் அனைத்து வகையான தனியார் பள்ளிகளுக்கு தொடர் அங்கீகாரம் வழங்கவும்

தனியார் பள்ளிகள் இயக்ககத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2022-23ஆம் கல்வியாண்டில் 30 புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்கவும், ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் 44 மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலப் பாடத்திட்டம் அல்லாத பிற பாடத்திட்டத்தில் 61 புதிய பள்ளிகள் தொடங்க அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

### *3.5.2. ஒழுங்குமுறைப்படுத்துதல்*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.12.2022 அன்று பள்ளிக் கல்வித் துறையில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தனியார் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்துதல் இணைய முகப்பு

(Regulatory Compliance Portal) மற்றும் அலுவலர்களுக்கான ஆய்வுச் செயலியும் (Inspection App) தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் புதிய சுயநிதி தனியார் பள்ளிகள் தொடங்க அனுமதி, தரம் உயர்த்துதல், கூடுதல் பிரிவுகள் தொடங்குதல் போன்ற பல்வேறு சேவைகளையும் இணைய வழியாக மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தனியார் பள்ளிகள்) ஆய்வுச் செயலி வாயிலாக பள்ளிகளை ஆய்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக நிர்வாகத்தில் காகித முறையினை அகற்றி, ஒளிவு மறைவு அற்ற வகையில் வெளிப்படையாகவும் விரைவாகவும் பள்ளிகளுக்குத் தேவையான ஆணைகளைத் தனியார் பள்ளி நிர்வாகங்கள் அவர்களின் இடத்திலிருந்தே பெற முடியும்.

## 3.6.தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் நடைமுறைப்படுத்துதல்

தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம், 2006 சட்டமாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 2006–07ஆம் ஆண்டில் 1ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கர்களுக்கு பகுதி–1இல் தமிழ் பாடம் கட்டாயப் பாடமாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, எதிர்காலத்தில் வரும் கல்வி ஆண்டுகளில், அடுத்தடுத்த வகுப்புகளுக்குப் பகுதி–1இல் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி, தற்போது, அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் மாநிலப் பாடத்திட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் 1ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்புவரை பகுதி–1இல் தமிழ்ப் பாடத்தினைப் பயின்று வருகின்றனர்.

## 3.7 குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 நடைமுறைப்படுத்துதல்

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 வகுக்கப்பட்டு, 12.11.2011 முதல் தமிழகத்தில் சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 12 (1) (சி)இன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவுநிலை வகுப்பில் 25 % இடஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளைச் சேர்ப்பதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்த மாநில அளவில், தனியார்

பள்ளிகள் இயக்குநர் முதன்மைத் தொடர்பு அலுவலராகவும், மாவட்ட அளவில், முதன்மைக் கல்வி அலுவலர்கள் மாவட்டத் தொடர்பு அலுவலர்களாகவும் செயல்படுகின்றனர்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, பிரிவு 12 (1) (சி)இ,ன் கீழ் சேர்க்கையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய, விண்ணப்பங்கள் இணையவழியாகப் பெறப்பட்டு வருகின்றன. 2022-23ஆம் கல்வியாண்டில் மொத்தம் 74,296 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதன் கீழ் 2021-22ஆம் கல்வியாண்டிற்கான கல்விக் கட்டணத் தொகை ரூ.364.44 கோடி பள்ளிகளுக்கு ஈடுசெய்யப்பட்டுள்ளது.

## 3.8. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009

கல்வி வியாபாரம் ஆவதைத் தடுக்கவும் மாணாக்கர்களிடம் அதிகப்படியான நன்கொடை கட்டணம் வசூல் செய்வதைத் தடுக்கவும் தமிழ்நாட்டு அரசால் தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 சட்டமாக்கப்பட்டு அதற்கான விதிகள் வகுக்கப்பட்டன.

தனியார் பள்ளிகளுக்கு கட்டணம் நிர்ணயம் செய்வதற்காக, தனியார் பள்ளிகளுக்கான கட்டண நிர்ணயக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அனைத்து வகுப்புகளுக்கும், வசூலிக்கப்பட வேண்டிய கட்டணத்தை நிர்ணயம் செய்து ஆணை வழங்குகிறது இவ்வாணை மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும்.

## 3.9. 39 மாவட்ட கல்வி அலுவலகங்கள் (தனியார் பள்ளிகள்) தோற்றுவிக்கப்பட்டன.

தனியார் மெட்ரிகுலேசன் பள்ளிகளை ஒழுங்குமுறைப்படுத்த ஏற்கனவே, மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த நிலையில் 2018ஆம் ஆண்டில் துறை மறுசீரமைப்பு செய்யப்பட்டதில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் ஆய்வாளர் அலுலவகங்கள் மூடப்பட்டு, கல்வி மாவட்ட அதிகார எல்லைக்குட்பட்டப் பள்ளிகளுக்கு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் வருவாய் மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாலும், அரசுப் பள்ளிகளில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்வதாலும், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மைக் கல்வி

அலுவலர்கள் நேரத்தை ஒதுக்கி, தனியார் சுயநிதி பள்ளிகளைத் திறம்பட ஆய்வு செய்ய முடியாத காரணத்தினால் அனைத்து வகையான தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தவும், நிர்வகிக்கவும் 01.10.2022 முதல் 39 மாவட்டக் கல்வி அலுவலகங்கள் (தனியார் பள்ளிகள்) வருவாய் மாவட்ட அளவில் தோற்றுவிக்கப்பட்டு செம்மையாக செயல்பட்டு வருகின்றன.

## 3.10. தனியார் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியை மேம்படுத்துவதற்கான நலத்திட்டங்கள்:-

தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உபகரணங்கள், பாடநூல், நோட்டு புத்தகம், புத்தகப் பை மற்றும் இதர நலத்திட்ட உதவிகள், அரசு நிதியுதவின்றிச் செயல்படும் தனியார் சுயநிதி பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் பாடங்களைப் பயிலும்

மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.41 பள்ளிக் கல்வி(எம்.எஸ்)த்துறை நாள்.16.02.2023-ன்படி இத்திட்டங்களைச் செயல்படுத்த ரூ.2.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக தனியார் சுயநிதிப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் 47,661 மாணவர்கள் பயனடைவார்கள்.

## 3.11. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககத்திற்கு 2023 -24ஆம் ஆண்டிற்கு ரூ.297.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## 4.1. அறிமுகம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளிக் கல்வித்துறையின்கீழ் செயல்பட்டுவருகிறது. இந்நிறுவனம் பள்ளிக் கல்வியின் தரத்தை உறுதிசெய்யும் முதன்மை நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனம், அனைத்து இயக்ககங்களுக்கும் கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்கள், கற்பித்தலியல், மதிப்பீடு, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கான வழிகாட்டுதல் போன்ற கல்விசார் செயல்பாடுகளைத் தரமாக வழங்குவதில் முன்னோடியாக விளங்குகிறது. இந்தக் கல்விசார் செயல்பாடுகள், பள்ளிக் கல்வித் துறையைத் தற்போதைய நிலையிலிருந்து மேம்படுத்தவும் சீரமைக்கவும் தொலைநோக்கினை அடையச் செய்யவும் பெரிதும் உதவுகின்றன.

மேலும் இந்நிறுவனம் கற்றல், கற்பித்தலியல், மதிப்பீடு, வகுப்பறைச் செயல்பாடுகள், கற்றல் விளைவுகள், மாணவர்களின் வளரிளம் பருவ நடத்தைகள், மாணவர்கள் வருகையின்மை, மாணவர்களின் உடல்நலன், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த வழிகாட்டுதல் போன்றவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு முழுமையான கல்வியை மாணவர்கள் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

குழந்தைகள் எவ்வித மன அழுத்தமும் சுமையுமின்றித் தொடர்ந்து கல்வி கற்பதை உறுதி செய்வதற்காக, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கற்பித்தலியல் செயல்பாடுகளை வடிவமைப்பதில் முயற்சி எடுத்து வருகிறது. பாடப் புத்தகங்கள் மற்றும் கற்றல் வளங்களை மின்னியப் பாடப்பொருள்களாக மாற்றி, அவையனைத்தும்

மாணவர்களுக்கு மின்னியத்தளங்கள் மூலம் எல்லா நேரமும் (24x7) கிடைக்கச் செய்வதற்கு இந்நிறுவனம் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும், கற்றலை மேம்படுத்துவதற்காக, தொழில்நுட்பத்தைத் தேவையான அளவில் பயன்படுத்துவதற்கும் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் மூலம் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் இந்நிறுவனம் திறனுடன் செயலாற்றி வருகிறது.

குழந்தை மைய வகுப்பறைச் செயல்பாடுகள் மூலம் குழந்தைகளின் பாடம் சார்ந்த திறன்களை மேம்படுத்துவதற்குப் பல்வேறு கற்றல் வளங்களை இந்நிறுவனம் உருவாக்கி வருகிறது. மாணவர்களின் கலை உணர்வு மற்றும் கலைத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் இந்நிறுவனம் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. பள்ளிக் கல்வியின் சீரான செயல்பாட்டினை உறுதி செய்வதற்காகப்

பல்வேறு கல்விசார் அங்கத்தினர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை ஒருங்கிணைத்து நடத்தி, அவற்றின் மூலம் அவர்களின் பணித்திறனை மேம்படுத்தவும் இந்நிறுவனம் செயலாற்றி வருகிறது.

## 4.2. தொலைநோக்கு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது, மாணவர்கள் புதிய தொழில்நுட்ப உலகினை எதிர்கொள்ள உகந்தவர்களாக மாற்றும்வகையில் கற்றல் விளைவுகள், முழுமையான, மகிழ்வுடன் கற்றலுக்கான பல்வகைக் கற்பித்தல் நெறிமுறைகள், மாற்றுவழிக் கற்பித்தல் உத்திகள், மின்னியவழிக் கற்றல் மற்றும் உயர்நிலைச் சிந்தனைத் திறனை ஊக்குவிக்கும் வகையிலான மதிப்பீடுகள் ஆகியவற்றின்வழி தரமான பள்ளி அமைப்பை உருவாக்குவதைத் தமது இலக்காகக் கொண்டுள்ளது.

## 4.3. பங்களிப்பும் செயல்பாடுகளும்

- கலைத்திட்டம் வடிவமைத்தல், பாடத்திட்டம் வடிவமைத்தல், பாடநூல்கள், கற்பித்தல் துணைப்பொருள்கள், செய்தி மடல்கள், இதழ்கள், கல்வி உபகரணப் பெட்டிகள், பல்லூடகப் பொருள்கள் மற்றும் கல்வி சார்புடைய பிற வளங்களை உருவாக்குதல்.

- ஆசிரியப் பயிற்சி மாணவர்களுக்குப் பணிமுன் பயிற்சியை அளித்தல்.

- பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்.

- நிர்வாக அலுவலர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை வழங்குதல்.

- வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளோடு கற்றல் விளைவுகளை ஒருங்கிணைத்தல்.
- பள்ளிக் கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக, கல்விசார் செயல்பாடுகளையும் அணுகு-முறைகளையும் மதிப்பிடுதல் மற்றும் குறைதீர் நடவடிக்கைகள் மூலம் கல்விசார் செயல்பாடுகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துதல்.

## 4.4. நோக்கங்கள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அடைவுத் திறன் அடிப்படையிலான தரமான பள்ளிக் கல்வியை உறுதி செய்வதற்காகப் பல்வேறு

குறிக்கோள்களைக் கொண்டு பணியாற்றுகிறது. அவற்றுள் மிகவும் முக்கிய நோக்கங்களாவன:

- தொடர்ந்து மாறிவரும் பள்ளி அமைப்பிற்கேற்ப கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை மாற்றியமைத்தல்.
- கற்றலை மேம்படுத்துவதற்காகக் கற்றல் முறைகள், கற்றல்- கற்பித்தல் பொருள்களைப் பயன்படுத்துதல், மின்னியக்கருவிகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் புதுமையைப் புகுத்துதல்.
- முதல் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை உருவாக்கப்பட்ட பாடநூல்கள் மற்றும் கற்றல் வளங்கள் அனைத்தையும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக எண்ம (Digital)

வடிவங்களாக, மின்-நூல்களாக மாற்றுதல்.

- கற்றல் விளைவுகள் அடிப்படையிலான கற்றலை உறுதி செய்வதற்காகக் கல்விசார் அங்கத்தினர்கள் அனைவருக்கும் அனைத்துப் பாடங்கள் மற்றும் அனைத்து வகுப்புகளுக்கான கற்றல் விளைவுகள் சார்ந்த பயிற்சிகளை வழங்குதல்.
- கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளில் ஏற்படும் தடைகளை நீக்கும்வகையில் ஆய்வுத் திட்டங்களையும் செயலாய்வுகளையும் மேற்கொள்ளுதல்.
- கற்பித்தலியல், மதிப்பீடுகள் மற்றும் புதுமையான முன்னெடுப்புகள்

ஆகியவை சார்ந்து ஆசிரியர்களுக்கு உதவிகளை வழங்குதல்.

## 4.5. திட்டங்களும் செயல்பாடுகளும்

### *4.5.1. மதிப்பீட்டுப் புலம்*

மதிப்பீடு என்பது மாணவர்களின் கற்றல் விளைவுகளைத் துல்லியமாக அளவிடுவதற்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வளமான பின்னூட்டங்களை வழங்குவதற்கும் தேவைப்படும் ஒரு கருவியாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு, புரிதல் மற்றும் பயன்பாடு அடிப்படையிலான மதிப்பீட்டில் அதிக கவனம் செலுத்தும் வகையில் தமிழ்நாட்டில் நடைமுறையிலுள்ள மதிப்பீட்டு முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த இலக்கை அடைய, உயர்சிந்தனை வினாக்களை மாணவர்கள் எதிர்கொள்ளும் திறனைப் பெறச் செய்தல் வேண்டும். எனவே, தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்துப் பள்ளிகளிலும்

பயனுள்ள மதிப்பீட்டு நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக, இந்நிறுவனம் மதிப்பீட்டிற்கான ஒரு புதிய பிரிவை உருவாக்கியுள்ளது. இம்மதிப்பீட்டுப் பிரிவு, தமிழ்நாடு கலைத்திட்டத்தின் நோக்கங்களுக்கு மாணவர்களிடையே கூர்சிந்தனைத் திறன்களை வளர்ப்பது, மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்துவது போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

மார்ச் 1, 2023 அன்று மாநில மதிப்பீட்டுப் புலத்தைத் தமிழ்நாட்டின் மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களும் தொடங்கி வைத்தனர். இணையவழி மதிப்பீட்டுக் கருவிகளை உருவாக்குவதற்கும் பள்ளிகளுக்கான பயனுள்ள மதிப்பீட்டு நடைமுறைகளை வடிவமைப்பதற்கும் மாநில மதிப்பீட்டுப் புலம், சீடாக் (CDAC) மற்றும்

சென்னை இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (IIT(M)) இணைந்து செயல்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதுமுள்ள ஆசிரியர்கள் அனைவரும் இணையவழியாக வினாக்கள் உருவாக்கும் திறன் பெறுவதை இப்புலம் இலக்காகக் கொண்டுள்ளது. தற்போது, மாணவர்களுக்கு வினாத்தாள்களை மதிப்பீட்டுக் கருவிகளின் வழியாக வழங்குவதற்கான இணையவழி முன்னோட்டம் நடைபெற்று வருகிறது. மேலும், பள்ளிகளில் தற்போது நடைமுறையிலுள்ள மதிப்பீட்டு முறைகளை ஆராய்ந்து அதனை மேம்படுத்தவும், ஆசிரியர்களுக்குத் தேவையான தொடர் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. நினைவாற்றலை மையப்படுத்திய வினாக்கள் மற்றும் பாடநூல்களில் கொடுக்கப்பட்ட வினாக்களிலிருந்து விலகி, அறிதல், புரிதல் மற்றும் பயன்பாடு சார்ந்த வினாக்களைத் தயாரிப்பதற்கான பயிற்சிகள் தற்போது

ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன. மாநில மதிப்பீட்டுப் புலம் வழங்கும் மதிப்பீடு தொடர்பான பயிற்சிகளால், ஆசிரியர்களின் திறன்கள் உயர்தர மதிப்பீடுகளை வடிவமைக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, ஆசிரியர்களால் தொகுக்கப்படும் உயர் சிந்தனை வினாக்கள்யாவும் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் உள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech Labs) வழியாக மாணவர்களைச் சென்றடைகின்றன.

### *4.5.2. ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி*

தமிழ்நாடு அரசு, தேர்ந்த கல்வியாளர்களைக் கொண்டு தரமான பயிற்சிகளை வழங்கி, ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்துவதை முதன்மைத் திட்டமாகக் கொண்டுள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்றினைத் தொடர்ந்து, குறுவள மையம் மற்றும் வட்டார

வளமைய அளவில் சிறந்த வகுப்பறைச் செயல்பாடுகளைப் பகிர்ந்துகொண்டு, தொடர் பணித்திறன் மேம்பாட்டினை ஆசிரியர்கள் அடைவதற்கான முயற்சியினை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் எடுத்துள்ளது. புதிய கற்பித்தல் முறைகள், கற்பித்தலில் புதிய சவால்கள், கற்றல் விளைவுகளுக்கான சரியான கற்றல் கற்பித்தல் உபகரணங்களைத் தயாரித்தல் மற்றும் குறைதீர்க் கற்பித்தலுக்கான திட்டங்களைத் தயாரித்தல் ஆகியவற்றை மையப்படுத்திப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்டு முழுவதும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளை முறைப்படுத்தும் வகையில், முதன்முறையாக பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, கல்வியாண்டின் தொடக்கத்தில் வெளியிட்டுள்ளது. குறுவள மையம், வட்டார வள மையங்களில் ஆசிரியர்கள் பகிர்ந்து கொள்ளும்

சிறந்த வகுப்பறை அனுபவங்கள் வகுப்பறைச் செயல்பாடுகளை மேம்படுத்த உதவுகின்றன. மாவட்டங்களில் இருந்து பெறப்படும் பின்னூட்டங்களும், ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்த உதவுகின்றன. அலுவலர்களால் பயிற்சிப் பார்வை செயலி மூலம் மேற்கொள்ளப்படும் பயிற்சி மேற்பார்வை, பயிற்சியின் கருத்துச் செறிவு, கருத்தாளர்களின் திறன் மதிப்பீடு மற்றும் வகுப்பறையில் மாணவர்களின் ஈடுபாட்டினை அளவிடுதல் ஆகியவற்றை மேம்படுத்த உதவுகிறது. இப்பயிற்சியின் மூலம் 83,000 ஆசிரியர்கள் பயனடைந்து உள்ளனர்.

செறிவான தமிழர் வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், தொன்மை மரபு உள்ளிட்ட தொல்லியல் தகவல்களை மாணவர்களுக்கு வழங்கிட ஏதுவாக ஆசிரியர்களுக்கான தொல்லியல் பயிற்சி, கீழடியில் தொடங்கி

வைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது தமிழ்நாட்டில் ஒன்பது மண்டலங்களில் 1000 அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### *4.5.3. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சி*

கல்வியாளர்களின் பணித் திறனை மேம்படுத்துவதன் வாயிலாகவே வகுப்பறைச் செயல்பாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்த இயலும். கல்வியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த அணுகுமுறையினைக் கொண்ட ஒரு திட்டமிடப்பட்ட பயிற்சி மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும்

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி, ஆசிரியர்களுக்குரிய இன்றியமையாத திறன்களை வளர்த்தல், பயிற்சிகளை வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதல், கலைத்திட்டம் உருவாக்குதல், பாடப் புத்தகங்களை எழுதுதல் மற்றும் தேவை அடிப்படையிலான பயிற்சிகளை அடையாளங் காணுதல் போன்ற அடிப்படைக் கூறுகளைக் கொண்டிருந்தன. கல்வியாளர்களின் திறன்களை வளர்ப்பதன் மூலம் ஆசிரியர்களிடம் கற்றல் செயல்பாடு குறித்த ஆழமான புரிதலை ஏற்படுத்தவும், சிறப்பான வகுப்பறை மேலாண்மையை வடிவமைக்கவும், செயல்படுத்தவுமான போதியத் திறன்களைப் பெற இப்பயிற்சிகள் உதவுகின்றன. இப்பயிற்சியின் மூலம் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி

மற்றும் பயிற்சி நிறுவனம் சார்ந்த 450 கல்வியாளர்கள் பயனடைந்தனர்.

### *4.5.4. பள்ளிக் கல்வித்துறை அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி*

பள்ளிக் கல்வித்துறையின் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காகப் பல்வேறு நிலைகளில் பணியாற்றும் துறை அலுவலர்களின் திறனை மேம்படுத்துவதற்கான புதிய முன்முயற்சிகளை மாநில அரசு மேற்கொண்டுள்ளது. அலுவலர்கள் வகிக்கும் பொறுப்பு மற்றும் அவர்களது பணி அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் திறன் மேம்பாட்டை வழங்க பள்ளிக் கல்வித்துறை திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. துறையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திட்டங்கள், ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் ஆகியவற்றை வடிவமைத்துச் செயல்படுத்தி வரும் அலுவலர்கள் மற்றும் மேற்பார்வை அலுவலர்களாகப் பணியாற்றும் 20

இணை இயக்குநர்களுக்குப் புதிய கொள்கைகளை உருவாக்குதல், அவற்றைத் திறனாய்வு செய்து புதியவற்றை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 38 முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தைச் சிறப்பாகவும், திறன் மிக்கதாகவும் மாற்றிடத் தொழில்நுட்ப உதவியுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், புள்ளிவிவரங்களின் அடிப்படையில் முடிவெடுத்தல் ஆகியன சார்ந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. நேரடி நியமனம் மூலம் புதிதாகப் பணியமர்த்தப்பட்ட 20 மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குக் களஅனுபவத்துடன் கூடிய புதுமுகப் பயிற்சியும், பதவி உயர்வு மூலம் பணிநியமனம் பெற்ற 124 மாவட்டக் கல்வி அலுவர்களுக்குப் பல்வேறு மென்திறன்கள்

மற்றும் தரவுகள் அடிப்படையில் நிர்வாகத்திறனை மேம்படுத்துதல் சார்ந்த பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன. நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்ட 152 வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் பதவி உயர்வு மூலம் பணியமர்த்தப்பட்ட 664 வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் கல்விசார், நிருவாக மற்றும் தனியாள் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய, கள அனுபவத்துடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டது. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 8,033 தலைமை ஆசிரியர்களுக்கு அவர்களது செயல் திறனில் நேர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தும்வகையில் அவர்களுக்குத் தலைமைப் பண்புகளை வளர்த்தல், பள்ளி வளர்ச்சித் திட்டம் உருவாக்குதல் சார்ந்து பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 4.6. கற்றல் இழப்புகளைக் குறைப்பதற்கான சிறப்பான முன்னெடுப்புகள்

### *4.6.1 எண்ணும் எழுத்தும்*

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 2021-22இன் சட்டப்பேரவை நிதிநிலை அறிக்கையில் 2025ஆம் ஆண்டிற்குள் 8 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் பொருளுணர்ந்து படிக்கவும் அடிப்படைக் கணிதத் திறன்கள் பெறுவதை உறுதி செய்யவும் எண்ணும் எழுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

படித்தல், எழுதுதல் மற்றும் எண்களைப் பயன்படுத்தி அடிப்படைக் கணிதச் செயல்பாடுகளை செய்யும் திறன்கள் எதிர்காலக் கற்றலுக்கும் வாழ்நாள் முழுவதும் நடைபெறும் தொடர் கற்றலுக்கும் அடிப்படையாகத் திகழ்கின்றன. இளம்வயதில் பெறும் எண்ணறிவும் எழுத்தறிவும் கற்றலுக்கு

அடிப்படையாக அமைவதோடு மட்டுமின்றி அடுத்தடுத்த வகுப்புகளில் பெறவுள்ள கற்றல் விளைவுகளுக்கும் இன்றியமையாததாக அமையும்.

**வகுப்புசார்ந்த அணுகுமுறையிலிருந்து கற்றல் நிலை சார்ந்த அணுகுமுறைக்கு மாற்றம் பெற்ற கற்பித்தல்.**

கற்றல் இழப்பைக் குறைப்பதற்காக நிலைவாரியான கற்பித்தல் என்ற மாற்று அணுகுமுறை, வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் எண்ணும் எழுத்தும் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த அணுகுமுறையில் கற்றலுக்குத் தேவையான அடிப்படைத் திறன்களைக் குழந்தைகள் பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

குழந்தைமையச் செயல்பாடுகளான பாடல்கள், கதைகள், கலை, கைவினை,

உடலியக்கச் செயல்பாடுகளைக் கொண்ட பங்கேற்பு விளையாட்டுகள், படைப்பாற்றல், கற்பனை ஆகியவற்றுக்கு வாய்ப்பளித்து மெய்யான பொருளுடன் விளையாட்டில் ஈடுபடுதல், உற்றுநோக்குதல், குழுக்களாகக் கற்றல், சேர்ந்து கற்றல், தனியாகக் கற்றல் ஆகிய முறைகளில் கற்றல் கற்பித்தல் நிகழ்கின்றன. குழந்தைகளை ஊக்கப்படுத்துதல், விளக்கமளித்தல், வலுவூட்டுதல், மதிப்பிடுதல், குறைதீர்க் கற்பித்தல், குழந்தைகளைச் செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல் மற்றும் செயல்பாடுகளில் பங்கேற்கச் செய்தல், வழிகாட்டுதல் ஆகிய வழிமுறைகளில் இதன் செயல்பாடுகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

***கற்றல் நிலை அடிப்படையிலான கற்றல் கற்பித்தல் பொருள்கள்***

தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கான மாணவர் பயிற்சி நூல்கள்,

ஆசிரியர் கையேடுகள் மற்றும் தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களுக்கான எண்ணும் எழுத்தும் கற்றல் துணைப் பொருள்கள் ஆகியவை தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலான சூழ்நிலையியல் கருத்துகள் மொழி, கணிதப் பாடங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பிற பாடப் பகுதிகள் செயல்திட்டங்களாக வழங்கப்படுகின்றன. கற்றல் நிலை அடிப்படையிலான கற்றல் கற்பித்தல் பொருள்கள், குழந்தைகளின் வேறுபட்ட கற்றல் நிலைகளுக்கேற்ப அளிக்கப்பட்டுள்ளன.

***வகுப்பறையில் கற்றல் களங்களை ஏற்படுத்துதல்***

எண்ணும் எழுத்தும் வகுப்பறைகள், படைப்பாற்றல் களம், பாடல் களம், செயல்பாட்டுக் களம், படித்தல் களம், கதைக் களம் ஆகிய களங்களைக் கொண்டு செயல்பாடுகளின் நிகழ்த்துக் களமாக, கலைகளின் பட்டறையாக, தனித்திறன்களின் வெளிப்பாட்டு மேடையாக,

இசை அரங்கமாக, கதைக் களமாக, விளையாட்டுக் கூடமாக, ஓவியக் கூடமாக அனைத்துக் குழந்தைகளும் மகிழ்ந்து கற்கும் வகையில் உருமாறியுள்ளன.

***அனைவருக்குமான கல்வி***

எண்ணும் எழுத்தும் செயல்பாடுகள், அனைத்துப் புலன்களையும் பயன்படுத்திச் செய்யும்விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளதால் இது கற்றல் குறைபாடுடைய குழந்தைகள் மட்டுமல்லாமல் பார்த்துக் கற்போர், கேட்டுக் கற்போர், உடலியக்கச் செயல்பாடுகள் மூலம் கற்போர், தொட்டுணர்ந்து கற்போர் போன்ற அனைத்துவகையான கற்போருக்கான கற்றல் தேவைகளையும் நிறைவு செய்கிறது. எனவே, எண்ணும் எழுத்தும் திட்டம், அனைத்து வகைக் குழந்தைகளையும் உள்ளடக்கிய கல்வி முறையாகவும் விளங்குகிறது.

### *குழந்தைமைய மதிப்பீடுகள்*

மதிப்பீடுகள், குழந்தைமைய முறையில் இணைய வழியிலும் நேரடியாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. வளரறி மதிப்பீடுகள் வாரத்திற்கு ஒரு முறையும் தொகுத்தறி மதிப்பீடுகள் ஒவ்வொரு பருவத்தின் இறுதியிலும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மதிப்பீடுகள், குழந்தைகளின் கற்றல் விளைவுகளின் அடைவினை மதிப்பிடுவதுடன் அவர்களின் கற்றல் நிலைகளில் ஏற்படும் முன்னேற்றத்தினைப் புரிந்து கொள்ளவும் உதவுகின்றன.

### *ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாடு*

ஒவ்வொரு பருவத்தின் தொடக்கத்தில் ஆசிரியர்களுக்கு எண்ணும் எழுத்தும் வகுப்பறைகளைக் கையாளுவது சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தப் பயிற்சிகள் பங்கேற்பு முறையில்

வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிகளின் மூலமாக ஆசிரியர்கள் வகுப்பறைச் செயல்பாடுகளை உணர்ந்து கொள்ளுதல், கற்றல் நிலை அடிப்படையிலான அணுகுமுறைகளைப் புரிந்துகொள்ளுதல், கற்றல் விளைவுகள், கற்றல் கற்பித்தல் துணைப்பொருள்களின் முறையான பயன்பாட்டினை அறிதல், கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் மற்றும் மதிப்பீட்டில் தொழில்நுட்பத்தினை ஒருங்கிணைக்கத் தெரிந்து கொள்ளுதல், ஆசிரியர் கையேடுகள், மாணவர் பயிற்சி நூல்களின் இன்றியமையாமையைப் புரிந்துகொள்ளுதல் ஆகிய கூறுகளில் திறன் மேம்பாடு அடைந்தனர்.

முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பருவங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட எண்ணும் எழுத்தும் வகுப்பறைகளில் இருந்து பெறப்பட்ட பின்னூட்டங்களின் அடிப்படையில் பாடப் புத்தகங்கள், ஆசிரியர் கையேடுகள்,

மாணவர் பயிற்சி நூல்கள் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### *ஆசிரியர்களுக்கான தொடர் வழிகாட்டல் மற்றும் ஊக்குவிப்பு*

திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியான வழிகாட்டல் மற்றும் ஊக்குவிப்பு அளிக்கப்பட்டு வருகின்றன. எண்ணும் எழுத்தும் ஆசிரியர்களுக்காகத் தனித்துவமாக உருவாக்கப்பட்டுள்ள தளம் வழியாக ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறைச் செயல்பாடுகளின் அனுபவங்களைக் காணொலி, கேட்பொலிக் கோப்புகள் மற்றும் ஒளிப்படங்கள் மூலம் பதிவு செய்கின்றனர். இவற்றின் மூலம் மாநிலம் முழுவதுமுள்ள ஆசிரியர்கள் சிறந்த வகுப்பறைச் செயல்பாடுகளை அறிந்து கொள்ளவும், தமக்கு ஏற்படும் ஐயங்களை மாநில வளக் குழுவின் வாயிலாகத் தீர்த்துக் கொள்ளவும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. இத்திட்டத்தினை

நடைமுறைப்படுத்தும் போது எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதலை அளிக்கவும் பாடம் மற்றும் கற்பித்தல் முறை சார்ந்து வல்லுநர்களோடு கலந்துரையாடு-வதற்கான வாய்ப்பினைப் பெறவும் இவை அனைத்திற்கும் மேலாக ஆசிரியர்களின் ஊக்குவிப்பை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடப் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் கையேடுகளில் உள்ள விரைவுத் துலங்கல் குறியீடுகளில் வகுப்பறைச் செயல்பாடுகளுக்கான மாதிரிக் காணொலிகள் மற்றும் கேட்பொலிக் கோப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் ஆசிரியர்கள், வகுப்பறைக் செயல்பாடுகளைச் சிறப்பாக மேற்கொள்ள முடிகிறது. எண்ணும் எழுத்தும் திட்டத்திற்கெனவே உருவாக்கப்பட்ட கல்வித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மாணவர் மற்றும் ஆசிரியர்களின் பயன்பாட்டிற்காக ஒளிபரப்பு

செய்யப்பட்டு வருகின்றன. எண்ணும் எழுத்தும் பாடக் காணொலிகள், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன அதிகாரப்பூர்வ வலையொளியில் (Youtube)இல் எந்த நேரத்திலும் பயன்படுத்திக் கொள்ள ஏற்றவகையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### *திறன்மிகு மேற்பார்வை*

மாநில மற்றும் மாவட்ட அளவிலான மேற்பார்வை அலுவலர்களுக்கு எண்ணும் எழுத்தும் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. செயலி உதவியுடன் கூடிய வகுப்பறை உற்றுநோக்கல் மற்றும் கள அலுவலர்களால் தொடர்ச்சியான இடைவெளிகளில் செய்யப்படும் மீளாய்வுகள் போன்றவற்றால் மேற்பார்வை சிறப்பாக நடைபெறுகிறது.

***எண்ணும் எழுத்தும் திட்டத்தால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்***

ஏற்றம் தரும் மாற்றமாக எண்ணும் எழுத்தும் வகுப்பறைகள், தனித்துவமாக, உயிரோட்டமுள்ளதாக, ஆர்வமூட்டக்கூடியதாக, ஜனநாயகம் மிக்கதாக, மிகச் சிறப்பாக, கற்றல் விளைவுகளை அனைத்து நிலையினரும் அடையும் வண்ணம் இருப்பதால் அனைவராலும் வரவேற்கப்படுகிறது. மாணவர்கள், ஆசிரியர்களிடையே இணக்கம் ஏற்பட்டுள்ளதை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோரின் பின்னூட்டங்கள் உணர்த்துகின்றன. இவை மட்டுமல்லாமல், மாணவர்களின் கற்றல் அடைவுகளைப் பார்க்கும்பொழுது எண்ணும் எழுத்தும் திட்டம், சரியான பாதையில் செல்வதைக் காணமுடிகிறது. எண்ணும் எழுத்தும் திட்டத்தின் மூலம் 15,89,235 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

### *4.6.2 இல்லம் தேடிக் கல்வி*

கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக, பள்ளிகள் நீண்டநாள்கள் மூடப்பட்டிருந்த நிலையில், மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுசெய்யும்வகையில், அரசு செயல்படுத்திய முதன்மைத் திட்டம் 'இல்லம் தேடிக் கல்வி' ஆகும். மாணவர்களின் இல்லங்களுக்கே நேரடியாகச் சென்று, தேவையான கற்றல் வளங்களை அளிப்பது இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். உள்ளூரில் உள்ள திறன் வாய்ந்த தன்னார்வலர்கள் உதவியுடன் கற்பித்தல் நடைபெறுகிறது. இத்திட்டம் சார்ந்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இல்லம் தேடிக் கல்விக்கான கற்றல்-கற்பித்தல் வளங்களை உருவாக்கி

அளித்துள்ளது. இதன்மூலம், தன்னார்வலர்கள் தாம் எடுக்கும் வகுப்புகளில் சிறப்பாகச் செயல்படுகின்றனர்; மாணவர்கள் தாமே முன்வந்து ஆர்வத்துடன் கற்றல் கற்பித்தலில் பங்கேற்கின்றனர். 1, 2 மற்றும் 3 ஆகிய வகுப்புகளுக்கு எண்ணும் எழுத்தும் திட்ட (நிலைவாரியான கற்பித்தல் அடிப்படையிலான) பாடப்பொருள்களைப் போல கற்றல்-கற்பித்தல் பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 4 முதல் 8 வரையிலான வகுப்புகளுக்குப் பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள இன்றியமையாத கற்றல் விளைவுகளுக்கு ஏற்ப கற்றல்-கற்பித்தல் துணைப்பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனால், மாணவர்கள், வகுப்பறையில் கற்றுக்கொண்ட பாடக் கருத்துகள் இம்மையங்களில் வலுவூட்டப்படுகின்றன. தொடக்க நிலை மாணவர்களின் முன்னேற்றத்தை அறிந்து கொள்ளும் வகையில்,

கற்றல் அடைவு அட்டைகள், தன்னார்வலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

### *4.6.3 இணைப்புப் பாடப் பயிற்சி*

கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாகப் பள்ளிகள் நீண்ட காலமாகச் செயல்படாமல் இருந்ததால், மாணவர்களுக்குக் குறிப்பாகத் தொடக்க வகுப்புக் குழந்தைகளுக்குக் கற்றல் இழப்பு ஏற்பட்டுள்ளது. கற்றல் இழப்பின் அளவை மதிப்பீடு செய்வதற்காக நடத்தப்பட்ட அடிப்படை ஆய்வின் முடிவுகள், 4 மற்றும் 5 ஆம் வகுப்புக் குழந்தைகளில் பெரும்பாலானோர் தங்கள் வகுப்புநிலையில் இல்லை என்பதைத் தெரிவிக்கின்றன. இக்கற்றல் இடைவெளியைக் குறைக்கும்வகையில் இணைப்புப் பாடப் பயிற்சிப் புத்தகம் உருவாக்கப்பட்டு தம் வகுப்புநிலைக்குக் கீழுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. 4 மற்றும் 5 ஆம் வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இணைப்புப்

பாடப்பகுதிகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த இணைப்புப் பாடம், பள்ளி வேலை நேரத்திலேயே நடத்தப்படுகிறது.

## 4.7 மாநில வள மையம்

மாநில வளமையமானது, ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களுக்குக் கற்றல், கற்பித்தலை நேரடி கற்றல் அனுபவமாக அளிக்கும் முழுமையான முதன்மை நிறுவனமாகத் திகழும். கரும்பலகையில் எழுதிக் கற்பித்தல் என்ற வழக்கமான முறையிலிருந்து செய்து பார்த்து அனுபவம் மூலம் கற்பிக்கும் முறைக்குக் கற்பித்தலானது முற்றிலும் மாற்றமடைவதை மாநில வள மையம் வலியுறுத்துகிறது. ஆர்வமூட்டக் கூடியதாக, ஈடுபடுத்தக்கூடியதாக, ஆசிரியர்கள் பங்கேற்றுக் கற்றுக் கொள்ளக்கூடியதாக, பொருள்புரிந்து கற்பதாக, மகிழ்வுடன் கற்பதாக, கலந்துரையாடிக் கற்பதாக

எனப் பல்வேறு கற்பித்தல் கூறுகளை மாநில வள மையம் கொண்டுள்ளது. இதன்மூலம் பயிற்சி பெறுபவர்கள், தற்போதைய புதிய கற்பித்தல் அணுகுமுறைகள், உத்திகள், கற்றல்-கற்பித்தல் கருவிகள் போன்றவற்றைத் தெரிந்து கொள்வதோடு அவற்றைத் தங்கள் வகுப்பறையில் பயன்படுத்திக் கற்றலை எவ்வாறு நேரடி அனுபவமாக மாற்றுவது என்பதையும் அறிந்து கொள்வர்.

மாநில வள மையம், இரண்டு வகையான வகுப்புகளுக்குப் பயனுள்ளதாக அமையும். அவை 1 - 5 வகுப்புகள் மற்றும் 6 - 12 வகுப்புகள். 1 - 5 வகுப்புகளுக்கு எண்ணும் எழுத்தும் திட்டம் முதன்மைப்படுத்தப்படும். 6 - 12 வகுப்புகளுக்குத் தற்கால, புதிய, மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப உதவியுடன் கூடிய கற்பித்தல் முறைகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் உள்ளூர் தேவைகளுக்கேற்பச் செய்து காட்டுதல்

முறையில் வழங்கப்படும். எனவே, இம்மையத்தில் தமிழ்நாடு கலைத்திட்ட கட்டமைப்பு-2017 இன்படி, தேவையான அனைத்துத் தளவாடங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கருவிகளுடன் கூடிய ஒவ்வொரு பாடத்திற்கான தனித்தனி அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கும். மாநில வள மையத்தில், ஒவ்வொரு பாடப்பொருளையும் சிறப்பாகக் கற்பிக்க உதவும்வகையில், வல்லுநர்களின் செய்துகாட்டல் இடம்பெறும். மாநில வள மையத்தில் உள்ள எண்ணும் எழுத்தும் திட்டத்தின் கற்றல் களங்களின் பின்னணியே பார்வையாளர்கள், கற்பித்தல் சூழல் மற்றும் 'கற்றல் களம்' அமைப்பதற்கு வழிகாட்டும் மாதிரியாக விளங்குகிறது.

மாநில வள மையத்தின் மொழி ஆய்வகமும் தகவல் தொழில்நுட்ப ஆய்வகமும் பார்வையிடுபவர்களுக்குச் சிறந்த கற்றல் அனுபவங்களை வழங்குவதற்காகத் தற்போதைய,

புதிய தரமான மென் பொருள்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளன; சிறப்பான, தரமான மின்நூல்களைக் கொண்ட சிறந்த மின்நூலகமும் உருவாக்கப்பட்டுள்ளது. பயனற்ற பொருள்களில் இருந்து தாமே செய்து பார்த்து மதிப்புமிக்க கற்றலைப் பெற 'நீயே செய்து பார்' பகுதி இடமளிக்கிறது. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணித (STEM) ஆய்வகம், ஒரு சிந்தனைத் தளமாகச் செயல்பட்டு புதியனவற்றை உருவாக்கத் தூண்டுவதாக அமைகிறது. பாடம் சார்ந்த வளங்கள் தவிர, வேறெந்த முறையிலும் பெற இயலாத பல்வேறு அனுபவங்களைத் தகவல் தொழில்நுட்பத்துடன் இணைத்து வழங்குவதற்குரிய வசதிகள் இந்த மையத்தில் உள்ளன. எனவே, மாநில வள மையத்தில் உள்ள ஒவ்வொன்றும் ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் சார்ந்த சிந்தனையைத் தூண்டி அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வழிகாட்டும்.

## 4.8 ஆராய்ச்சிச் செயல்பாடுகள்

பள்ளிக்கல்வியில் உள்ள நடைமுறைச் சவால்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்குக் கல்வியியல் ஆராய்ச்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மாநில ஆராய்ச்சிக் குழுவானது ஆசிரியப் பயிற்றுநர்கள் மற்றும் ஆசிரியர்களின் பள்ளிப் பார்வை, பணியிடைப் பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட கல்வி ஆராய்ச்சிகளை மீளாய்வு செய்து வருகிறது. கற்றல் இழப்பு, பாடநூல்களின் பயன்பாடு, குழந்தைப் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் சுகாதாரம், மனவெழுச்சி நலன் மற்றும் புதுமையான கல்விசார் செயல்பாடுகள் வழியாக, கற்றல் விளைவுகளை அடைவதற்காக மாநிலம் முழுவதும் செயலாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன .

மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிக் களங்களாக மதிப்பீடு, தகவல் தொழில்நுட்பம், கல்விசார் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளின் பல்வேறு பரிமாணங்கள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் போன்றவை அமைந்துள்ளன. 2022-23ஆம் கல்வியாண்டில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களால் 298 செயலாராய்ச்சிகளும், 132 மாவட்ட அளவிலான ஆராய்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், அலைபேசிச் செயலியைப் பயன்படுத்தி எழுத்துக் கூட்டிப் படித்தல் பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளது. மதுரை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், விளையாட்டு நுட்பங்களின் மூலம்

பெருக்கல் திறனை மேம்படுத்துதல் தொடர்பான ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளது.

ஆராய்ச்சியின் முடிவுகள், கருத்தரங்குகள் மற்றும் ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சிகள் மூலம் பரவலாக்கப்படுகின்றன. இந்நிறுவனம், ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ரூபாய் 1.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாராய்ச்சி முடிவுகள், மாநில அளவிலான கல்விசார் உறுப்பினர்களுக்குப் பெரும் பயனளிப்பதாக உள்ளன.

## 4.9. தொழிற்கல்வி சீரமைப்பு

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் 26.8.2021 அன்று நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில் தொழிற் சாலைகளில் வேலைவாய்ப்புகள் அதிகமுள்ள பணிகளுக்குத் தேவையான திறன்களைப் பெற்ற மாணவர்கள் உடனடியாகப் பணிவாய்ப்புகளைப் பெற

வழிகாட்டும்வகையில் தொழிற்கல்விப் பாடங்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் துணையுடன் சீரமைக்கப்படும் என்று அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தொழிற்கல்விப் பாடத்திட்டம் மற்றும் புத்தகங்களைச் சீரமைப்பதற்காக ஏழு உறுப்பினர்களைக் கொண்ட வழிநடத்தும் குழு உருவாக்கப்பட்டது. இக்குழு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி 8 தொழிற்கல்விப் பாடங்களைச் சீரமைப்பு செய்யவும், தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பாடம் சார்ந்து தொழிற்சாலைகளில் நேரடியாகப் பயிற்சி அளிக்கவும், தேசியத்திறன் தகுதிக் கட்டமைப்புக்கேற்றச் சீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை உருவாக்கவும், வேலைவாய்ப்புத் திறன்கள் என்ற பாடத்தை அனைத்துத்

தொழிற்கல்விப் பிரிவுகளிலும் அறிமுகப்படுத்தவும் பரிந்துரை செய்துள்ளது.

அரசு தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், அரசு தொழில் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் பாட வல்லுநர்கள், கல்வியாளர்கள் மற்றும் பாடநூல் ஆசிரியர்களைக் கொண்டு பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. வேலைவாய்ப்புத் திறன்கள் என்னும் பாடம், மாணவர்களின் தகவல் தொடர்புத் திறன், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனையும் திறன் போன்றவற்றை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசியத் தகுதித் திறன் கட்டமைப்பின் (NSQF) பாடத்திட்ட உள்ளடக்கத்துடன் தொழிற் கல்வியின் திருத்தப்பட்ட பாடத்திட்டத்துடன் ஒப்பிட்டுச் சீரமைப்பது தொழிற்கல்வி மாணவர்கள், பள்ளிக்

கல்வித்துறையிடமிருந்து சான்றிதழைப் பெறுவதற்கு மட்டுமல்லாமல், சிறந்த வேலைவாய்ப்புக்குப் பயனுள்ளதாக இருக்கும் தொழிற்சாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட திறன் நிறைவுச் சான்றிதழைப் பெறுவதற்கும் உதவும். செய்முறைப் பயிற்சிச் சான்றிதழ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட திறன் மேம்பாட்டுக் கழகங்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து வழங்கப்படுகிறது.

600க்கும் மேற்பட்ட சிறு, குறு, நடுத்தர மற்றும் பெரிய அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றின் மூலம், தொழில் சார்ந்த கற்பித்தல் திறன் பயிற்சியினை மாணவர்கள் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. நடப்புக் கல்வியாண்டில் 40 மணி நேர நேரிடைப்

பயிற்சியானது, மாணவர்களின் பாடப்பிரிவு சார்ந்த தொழிற்சாலை அல்லது அரசு நிறுவனங்களிலேயே வழங்கப்பட்டுள்ளது. தொழிற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் இக்கல்வியாண்டின் தொடக்கத்தில் நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

2022-23 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்புக்கான சீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடப் புத்தகங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 2023–24 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்புக்கான பாடத்திட்டம் மற்றும் பாடப் புத்தகங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.

## 4.10. உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு-களுக்கான ஆலோசனை மையம்

அரசுப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான ஆலோசனைகள், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்படுகின்றன. இது தொடர்பாக ஒவ்வொரு பள்ளியிலும், 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் ஆலோசனை மையம் நிறுவப்பட்டுள்ளது.

ஒவ்வோர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி சார்ந்த மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக இரண்டு ஆசிரியர்கள், தூதுவர்களாக நியமிக்கப்-பட்டுள்ளனர். மேலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் சார்ந்த தகவல் அடங்கிய ஒரு கட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

***நான் முதல்வன் - இணையத்தளம்***

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 'நான் முதல்வன்' என்ற இணையத் தளம் (https://www.naanmudhalvan.tn.gov.in) மாணவர்கள் உயர்கல்வி சார்ந்த தகவல்களைப் பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாணவரின் விருப்பத்திற்கேற்ப அவர்களின் உயர்கல்வி, தெரிவு செய்யப்படுகிறது. இதற்குத் தேவையான உயர்கல்வி சார்ந்த தகவல்கள் 'நான் முதல்வன்' இணையத்தளத்தில் தமிழ்நாடு கல்வி மேலாண்மைத் தகவல் முகமை மூலம் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இந்த இணையத்தளத்தில் 419க்கும் மேற்பட்ட உயர்கல்விப் படிப்புகள் 2500க்கும் மேற்பட்ட கல்லூரிகள், நுழைவுத்தேர்வுகள், அரசு மற்றும் தனியார் ஊக்கத்தொகை திட்டங்கள் சார்ந்த தகவல்கள், கல்விக்கடன் பெறுதல் மற்றும் விண்ணப்பித்தல் சார்ந்த தகவல்கள் பதிவேற்றம்

செய்யப்பட்டுள்ளன. மேலும் 2021-22ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று பல்வேறு காரணங்களால் உயர்கல்வியில் சேர இயலாத சூழ்நிலைகளில் உள்ள மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மூலம் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் உயர்கல்வித் துறையுடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து தனியார் கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், அரசுஉதவி பெறும் நிறுவனங்கள் ஆகியவற்றில் உடனடியாக உயர்கல்வியில் சேர்க்கை பெறும்வகையில் முகாம்களை நடத்தின. மாணவர்களுக்குக் கல்விக் கடன் வழங்குவதற்காக வங்கிகளும் முகாமில் பங்கேற்றன.

2022-23ஆம் கல்வியாண்டில் உயர்கல்வித் துறையும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையும் இணைந்து நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், அரசு கலைக் கல்லூரிகளின் முன்னாள் மாணவர்கள் உதவியுடன் தற்போது 12ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவம் மற்றும் தொழிற்கல்வி சார்ந்த உயர்கல்வி நுழைவுத் தேர்வுகளில் இணைய வழியாக விண்ணப்பிப்பதற்கான உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த 'நான் முதல்வன்' இணையத் தளத்தில். மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டுத் துறையில் பதக்கங்களைப் பெறும் மாணவர்களுக்கு உயர் கல்விக்கான சேர்க்கையில் வழங்கப்பட்டுள்ள தளர்வுகள் குறித்த விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அரசுப்பள்ளி மாணவரும் அவரவர் திறமை மற்றும் விருப்பத்திற்கேற்ப

உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பினைப் பெறுவதை உறுதிசெய்யும் இலக்குடன் 'நான் முதல்வன்' திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் சார்ந்த அனைத்துத் தகவல்களும் ஒரே தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 13,19,742 மாணவர்கள் 'நான் முதல்வன்' திட்டத்தினால் பயன் பெற்றுள்ளனர்.

## 4.11. மொழி ஆய்வகம் உருவாக்குதல்

2023-24ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் புலமையை அதிகரிக்க, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் 6029 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், மொழி ஆய்வகங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களிடையே ஆங்கில மொழியைப் பேசுவதில், பதில் அளிப்பதில், சொற்களைச் சரியாக ஒலிப்பதில், பாடப்பொருளைப் பொருளுணர்ந்து படிப்பதில் உள்ள தயக்கத்தினைக் களைவதற்கான கருவியாகவும் தளமாகவும் இந்த ஆங்கில மொழி ஆய்வகங்கள் செயல்படும்.

பலவகைப்பட்ட செயல்பாடுகளான கதைகள், செயல்பாடுகள், உரையாடுதல், வினாக்களைக் கேட்டல் ஆகியவை மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. மேலும், மாணவர்கள் இதன் வாயிலாகத் தங்களின் உரையாடலைப் பதிவு செய்யவும், சூழ்நிலைக்கேற்ப நடித்துக்காட்டவும் அல்லது சரியாகப் பதில் அளிக்கவும் உதவுகின்றன.

தவறுகள் ஏற்படும் என்ற அச்சஉணர்வே குழந்தைகள், ஆங்கில மொழியில் பேசுவதைத் தடுக்கிறது. மாணவர்கள் தங்களின் பேச்சை,

ஒலிப்பினைச் சரிபார்க்கும்வகையில் செயற்கை நுண்ணறிவு வசதிகளுடன் கூடிய மொழி ஆய்வகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

*கற்றலின் ஒவ்வொரு நிலையிலும் சுய மதிப்பீடு உள்ளது. அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்புவரை பயிலும் 35 இலட்சம் மாணவர்கள், இந்த மொழி ஆய்வகம் மூலம் பயனடைகிறார்கள்.*

### 4.12. மாதிரி மின்னியப் பாடப்பொருள் உருவாக்கம்

தொழில்நுட்பம் மற்றும் மின்னியக் கருவிகளின் மூலம் மின்னியக் கல்வி பெறுதல் என்பது கற்பதற்கும் அறிவினைப் பெறுவதற்கும் உதவுகிறது. இணையம் மற்றும் மாறி வரும் தொழில்நுட்பம் ஆகியன பயன்பாட்டிற்கு வந்த பின்னர், கற்றல் இடைவினையுடன் கூடியதாகவும் ஈடுபாட்டுடன் கூடியதாகவும் ஆர்வமூட்டும் வகையிலும் சிறப்பாகப்

பயன்படுத்தும் வகையிலும் மாற்றியுள்ளது. கல்வியானது பாடப்புத்தகங்கள் மற்றும் வகுப்பறைகளுடன் மட்டும் நின்று விடுவதில்லை. இது தொழில்நுட்பத்துடன் கூடிய மின்னியப் பாடப்பொருள்களின் ஒருங்கிணைப்பு ஆகும். இதில் பாடப்பொருளை எழுதுதல் மற்றும் மின்னியப் பாடப்பொருளாக மாற்றுதல் ஆகிய இரண்டு படிநிலைகள் உள்ளன. தெரிவு செய்யப்பட்ட 107 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வரலாறு, கணக்குப்பதிவியல், வணிகவியல் மற்றும் பொருளியல் ஆகிய பாடங்களில் 8000 பாடப்பொருள்களை உருவாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பாடப்பொருள்களை ஆசிரியர்கள் எழுதியுள்ளனர். இந்தப் பாடப்பொருள்கள், மாநிலம் முழுவதும்

பல்வேறு கல்லூரிகளில் பணியாற்றும் 70 வல்லுநர்களால் மேலாய்வு செய்யப்பட்டுள்ளன.

மேலும், பள்ளிக்கல்வித்துறை, 'புத்தகப் பூங்கொத்து' என்ற துணைப்பாடப் பொருளைத் தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்காகத் தயாரித்துள்ளது. இவற்றை மின்னியப் பாடப்பொருளாக மாற்ற முதற்கட்டமாக 30 காணொலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தரமான மின்னியப் பாடப்பொருள்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மேலும், இந்நிறுவனம் எண்ணும் எழுத்தும் என்ற திட்டத்திற்காக 139 காணொலிகளை இணைத்து மின்னிய ஆசிரியர் கையேட்டினை வெளியிட்டுள்ளது.

### 4.13. கல்வித் தொலைக்காட்சி

கல்வித் தொலைக்காட்சி, 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களுக்கும் மின்னியப் பாடப்பொருள்களை (24x7) எல்லா நேரங்களிலும் பார்க்கும்வகையில் ஒளிபரப்பு செய்கிறது. கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாகப் பள்ளிகள் மூடப்பட்டிருந்த காலங்களில், பள்ளிகளின் பணியினை இடைவெளி இல்லாமல் கல்வித் தொலைக்காட்சி மேற்கொண்டது. வகுப்புவாரியான, பாடவாரியான, காணொலிகள், தமிழ்நாடு அரசு கேபிள் மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்டன. ஒளிபரப்பைப் பெற இயலாத இடங்களில் உள்ள மாணவர்களுக்குத் தனியார் சேனல்கள், DTH மற்றும் Multi Service Cable Operators ஆகியோரின் உதவியுடன் காணொலிகள் கொண்டு சேர்க்கப்பட்டன.

மேலும், இல்லம் தேடிக் கல்வித் திட்டம் சார்ந்த 338 காணொலிகள் மற்றும் எண்ணும் எழுத்தும் திட்டம் சார்ந்த 232 காணொலிகள் உருவாக்கம், படப்பதிவு, படத்தொகுப்பு மற்றும் ஒளிபரப்பு ஆகியவற்றைக் கல்வித் தொலைக்காட்சி மேற்கொண்டது.

கல்வித் தொலைக்காட்சி, பிற அரசு துறைகளுக்கான காணொலிகளையும் தயாரித்து ஒளிபரப்பினை மேற்கொண்டது. இதன் தொடர்ச்சியாக, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறைக்கான 1024 அரைமணி நேரக் காணொலிகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பு செய்யப்பட்டன. அடுத்ததாக, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், பள்ளி மாணவர்களிடையே மாசுபடுதல் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்நோக்கில் தயாரித்த 'மீண்டும் மஞ்சப்பை' என்ற காணொலியையும் கல்வித் தொலைக்காட்சி ஒளிபரப்பு செய்தது.

கல்வித் தொலைக்காட்சியின் வழியாகப் பொருநை இலக்கியத் திருவிழாவின் 56 காணொலிகள், சென்னை இலக்கியத் திருவிழாவின் 86 காணொலிகள், சிறுவாணி இலக்கியத் திருவிழாவின் 44 காணொலிகள் ஆகியவற்றை ஒளிப்பதிவும், படத்தொகுப்பும் செய்து உதவியுள்ளது. காவேரி இலக்கியத் திருவிழா மற்றும் வைகை இலக்கியத் திருவிழா ஆகியவற்றிற்கும் தொடர்ந்து உதவியை வழங்கிவருகிறது. தமிழ்நாடு பேச்சுத்திட்டம் (TN Talk) சார்ந்த 4 காணொலிகளைத் தயாரித்து படத்தொகுப்பு செய்ய கல்வித் தொலைக்காட்சி உதவியுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசின் சிறப்பு முன்முயற்சித் திட்டங்களான நான் முதல்வன் திட்டம், வானவில் மன்றம், கலைத் திருவிழா, நம்ம பள்ளித்திட்டம், நம்பள்ளி நம்பெருமைத் திட்டம், மாபெரும் தமிழ்க் கனவுத் திட்டம் ஆகியவற்றிற்கான காணொலிகளை ஒளிப்பதிவு

செய்து படத்தொகுப்பு செய்வதற்கும் கல்வித் தொலைக்காட்சி உதவிசெய்கிறது.

தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்கள் தவிர, பாடப்பொருள் மட்டுமல்லாது செயல்பாடுகளான கலை, கதை கூறுதல், வரைதல், எழுதுதல் பயிற்சி, பாடுதல், நடனம், விளையாட்டு, பள்ளிகளின் சிறப்புச் செயல்பாடுகள், அறிவியல் பரிசோதனைகள், வினாடிவினா, ஆலோசனை வழங்குதல், பொருட்காட்சிகள், புத்தகக்கண்காட்சி மற்றும் தேசியத் திறனாய்வுத் தேர்வு (NTSE), தமிழ்நாடு ஊரக மாணவர்களின் திறனாய்வுத் தேர்வு (TRUST), தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்புதவித் தொகைத் தேர்வு (NMMS) போன்ற தேர்வுகளுக்கு வழிகாட்டுதல் ஆகியவற்றிற்குக் காணொலிகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கான காணொலிகள் தயாரிப்புப்பணியும்

தொடர்ந்து நடைபெற்று, வரும் கல்வியாண்டில் ஒளிபரப்பு செய்யப்பட உள்ளன.

## 4.14. நிதி ஒதுக்கீடு

தமிழ்நாடு அரசால் 2023-24ஆம் ஆண்டிற்கு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.194.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 5. அரசுத் தேர்வுகள் இயக்ககம்

## 5.1. அறிமுகம்

அரசுத் தேர்வுகள் இயக்ககம், இடைநிலை (பத்தாம் வகுப்பு), மேல்நிலை முதலாம் ஆண்டு (பதினோராம் வகுப்பு) மற்றும் இரண்டாம் ஆண்டு (பன்னிரெண்டாம் வகுப்பு) ஆகிய வகுப்புகளுக்கு மாநிலப் பொதுத் தேர்வுகளை நடத்திடும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பினை ஏற்றுள்ளது. இவ்வியக்ககம் நடத்திடும் அனைத்து தேர்வுகளின் தரத்தில் மேன்மை கண்டிட, தோற்றுவிக்கப்பட்ட 1975 ஆம் ஆண்டு முதல் பல்வேறு புதுமையான முயற்சிகளை செயல்படுத்தி, தேர்வுகளை வெளிப்படைத் தன்மையுடனும் மற்றும் தொழில்நுட்பத்துடன் செம்மையாக நடத்தி வருகிறது. தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE), தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு (NMMS) , தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு

(TRUST) மற்றும் தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு போன்ற பல்வேறு உதவி தொகைத் தேர்வுகளையும் இவ்வியக்ககம் நடத்துகிறது.

## 5.2. குறிக்கோள்கள்

- அனைத்து வகையான தேர்வுகளையும் வெளிப்படைத் தன்மையுடனும் நியாயமான முறையிலும் நடத்துதல்.
- மாணவர்களிடையே ஆக்கப்பூர்வமான சிந்தனை திறன்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் வினாத்தாள் அமைப்பில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளுதல்.
- தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவது முதல் தேர்வு முடிவுகள் வெளியிடுவது வரையிலான

அனைத்து நடைமுறைகளையும் மின்னணு மயமாக்குதல்.

- மாணவர்கள் சிரமமின்றி உயர்கல்வி பயில, குறித்த நேரத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுதல் மற்றும் தேர்வர்களுக்கான தக்க சான்றிதழ்களை வழங்கிடுதல்.

## 5.3. செயல்பாடுகள்.

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 35 வகையான தேர்வுகளை நடத்துவதற்கான மிகஉயர்ந்த பொறுப்பினை ஏற்றுள்ளது. வினாத்தாட்களை வடிவமைப்பதுடன் இவ்வியக்ககம் பாதுகாப்பான முறைகளைக் கையாண்டு, தேர்வுகளை முழு வெளிப்படைத் தன்மையுடன் நடத்தி, தேர்வு முடிவுகளை எவ்வித புகாருக்கும் இடமின்றி வெளியிட்டு உரிய சான்றிதழ்களையும் தேர்வர்களுக்கு வழங்கி வருகின்றது.

## 5.4. இணையதள சேவைகள்

மாணவர் சமூகம், பெற்றோர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குத் தேவைப்படும் கீழ்குறிப்பிட்டுள்ள விவரங்களை எளிதாக பெறுவதற்காக www.dge.tn.gov.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

- தேர்வு முடிவுகள்
- தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் பதிவிறக்கம் செய்யும் வசதி
- தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்யும் வசதி
- தேர்வுக்கட்டணத்தை இணையதளம் மூலம் செலுத்துதல்
- பள்ளி மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான பெயர் பட்டியல் தயாரித்தல்.

- முந்தைய ஆண்டு தேர்வுகளின் வினாத்தாட்கள்/மாதிரி வினாத்தாட்கள்
- மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை அறிதல்
- தேர்வு அறிவிப்புகள்
- தேர்வுக்கால அட்டவணைகள்
- விண்ணப்பப் படிவங்கள்
- தேர்வுக் கட்டண விவரங்கள்
- தேர்வர்களுக்கான அறிவுரைகள்
- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்

- சான்றிட்ட மதிப்பெண் நகல் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- புலப்பெயர்ச்சி சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்

## 5.5. மாணவர்கள் நலன்

### *5.5.1. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான ஏற்பாடுகள். (CWSN)*

பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சலுகைகளாவன:

- தரை தளத்தில் இருக்கை வசதி ஏற்படுத்துதல்.
- ஏதேனும் ஒரு மொழிப் பாட விலக்கு.

- பார்வைத்திறன் குறைபாடுடைய தேர்வர்களுக்கு தேர்வெழுத தனி அறை வசதி செய்யப்படுகிறது.

- சொல்வதை எழுதுபவர் நியமனம் (சொல்வதை எழுதுபவராக தகுதியான மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் தகுதி பெற்ற இளங்கலை பட்டதாரி / முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்).

- கூடுதல் ஒரு மணி நேரம் வழங்கப்படுகிறது.

- கணிப்பான்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.

- இடைநிலை வகுப்பு (10 ஆம் வகுப்பு) பயிலும் சிறப்பு கவனம் தேவைப்படும்

குழந்தைகளுக்கு செய்முறைத்தேர்வு விலக்களிக்கப்படுகிறது.

- மேல்நிலை வகுப்புகள் (11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு) பயிலும் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு செய்முறைத் தேர்வின் போது ஆய்வக உதவியாளர் நியமனம்.

- தேர்வர்களது விருப்பத்தின் அடிப்படையில், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களில் மட்டும், செய்முறைத் தேர்வுக்குப் பதிலாக செய்முறை தொடர்பான கொள்குறி வினாக்கள் (Multiple Choice Questions) அடங்கிய வினாத்தாட்கள் வழங்கப்படுகிறது.

### *5.5.2. தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்.*

தமிழ் வழியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. 2022–2023–ஆம் கல்வியாண்டில் பின்வரும் தேர்வர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வகுப்பு | தேர்வு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தேர்வர்கள் |
|---|---|---|
| 1. | இடைநிலை | 4,61,415 |
| 2. | மேல்நிலை முதலாம் ஆண்டு | 3,83,775 |
| 3. | மேல்நிலை இரண்டாம் ஆண்டு | 4,42,888 |

## 5.6 பொது மக்கள் நலன்

### *5.6.1 மின் ஆவணக் காப்பகம்*

மின் ஆவணக்காப்பகம் சான்றிதழ்களை மின்னணுச் சான்றிதழ்களாக பதிவிறக்கம் செய்து கொள்ள உதவுகிறது. இடைநிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகளை எழுதிய மாணவர்கள் தங்களது ஆதார் எண்ணைக் கொண்டு மின் ஆவணக் காப்பகத்தின் உள்நுழைந்து அவர்களது மின்னணு மதிப்பெண் சான்றிதழினை அரசுத்தேர்வுகள் இயக்கக மதிப்பெண் விவர தொகுப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 1,23,44,021 தேர்வர்களது மதிப்பெண் விவரங்கள் மின் ஆவணக் காப்பகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### *5.6.2. மதிப்பெண் சான்றிதழ்களில் மின்னணு சான்றளிப்பு.*

உயர்கல்வி அல்லது வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்ல விரும்பும் மாணவர்களின் நலனுக்காக மாணவர்களது மதிப்பெண் சான்றிதழ்கள் மின்னணு சான்றிட்ட சான்றிதழ்களாக பெற்றிடும் வசதியினை இந்த அரசு செய்துள்ளது. 2022-2023 ஆம் கல்வியாண்டில், இந்நாள் வரை 579 மதிப்பெண் சான்றிதழ்களுக்கு மின்னணுச் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

### *5.6.3 அருகாமை அரசு இ- சேவை மையங்கள் வழியே வழங்கப்படும் சேவைகள்*

இவ்வியக்ககத்தால் வழங்கப்படும் கீழ்க்காணும் சேவைகளை அருகில் உள்ள அரசு இ-சேவை மையங்களின் வழியே பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்று
- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்
- சான்றிட்ட மதிப்பெண் நகல்
- மதிப்பெண் சான்றிதழில் திருத்தம்
- புலப்பெயர்வு சான்றிதழ் (வெளி மாநிலம் அல்லது வெளி நாடுகளில் உயர் கல்வி பயில்வதற்கு)
- விடைத்தாட்கள் நகல் பதிவிறக்கம் செய்தல்
- மறுமதிப்பீடு /விடைத்தாள் நகல் பெறுவதற்கான விண்ணப்பங்கள்
- தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் பதிவிறக்கம் செய்தல்

**5.7.சிறைச்சாலைகளில் தேர்வு மையங்கள் அமைத்தல்**

மாநிலப் பொதுத் தேர்வுகள் சிறைவாசிகளின் கல்வித் தேடலை ஊக்குவிப்பதற்காகவும் அவர்களின் சீர்திருத்த காலத்திற்குப் பிறகு வாழ்வாதாரத்திற்கு உதவுவதற்காகவும் சிறைச்சாலை வளாகத்திலேயே தேர்வுகள் நடத்தப்படுகின்றன. 2022-23 கல்வியாண்டில், மார்ச்/ஏப்ரல் 2023 மாநிலப் பொதுத் தேர்வுகளுக்கு தேர்வெழுத முறையே 10, 11 மற்றும் 12 வகுப்புகளுக்கு 264, 125 மற்றும் 90 எண்ணிக்கையிலான சிறைவாசிகள் விண்ணப்பித்துள்ளனர்.

**5. 8.துணைத் தேர்வுகள் நடத்துதல்**

ஒவ்வொரு ஆண்டும் இடைநிலை மற்றும் மேல்நிலை (முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு) பொதுத்தேர்வு முடிவுகள்

வெளியிட்டவுடன் அதே கல்வியாண்டில் தேர்வர்கள் தங்களது உயர் படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் துணைத் தேர்வுகள் நடத்தப்படுகிறது.

## 5.9.உதவித் தொகைக்கான தேர்வுகள்

### *5.9.1. தமிழ் மொழி இலக்கிய திறனறித் தேர்வு*

பள்ளி மாணவர்களின் தமிழ் மொழி இலக்கிய திறனை மேம்படுத்தும் வகையில் 2022-23ஆம் கல்வியாண்டு முதல் மேல்நிலை முதலாமாண்டு (11ஆம் வகுப்பு) பயிலும் பள்ளி மாணவர்களுக்கு தமிழ் மொழி இலக்கிய திறனறித் தேர்வு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அக்டோபர் 2022ல் நடைபெற்ற முதல் தேர்வில் 2,50,732 மாணவர்கள் தேர்வெழுதினர். தேர்வெழுதியவர்களுள் 750 அரசுப் பள்ளி மாணவர்களும், 750 அரசுப் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற தனியார் பள்ளி மாணவர்களும் மொத்தம் 1500 மாணவர்கள்

தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஊக்கத் தொகையாக மாதம் ரூ.1500/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

### *5.9.2. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு (NMMS)*

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 7 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 8 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.3,50,000/-க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில் தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித்தொகை தேர்வினை தேர்வெழுத தகுதியுடையவர் ஆவர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 9 முதல் 12ஆம் வகுப்பு வரை ஆண்டு தோறும் ரூ.12,000/- (மாதம் ரூ.1000/-வீதம்) உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின்கீழ் மாநில அளவில் 6,695 மாணவர்கள் படிப்பு உதவித் தொகை பெறுகின்றனர். பிப்ரவரி 2023இல்

நடைபெற்ற (NMMS) தேர்வில் 2,22,985 மாணவர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

### *5.9.3. தேசியத் திறனாய்வுத் தேர்வு (NTSE)*

தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பு முகமையாக இவ்வியக்ககம் செயல்பட்டு இத்தேர்வினை நடத்துகிறது. கல்வி ஆண்டில், மத்திய / மாநிலப் பள்ளி குழுமங்களில் 10-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் இத்தேர்வினை எழுத தகுதிபடைத்தவர்கள் ஆவர். இவ்வியக்ககத்தால் நடத்தப்படும் முதல்நிலை தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் இரண்டாம் நிலைத் தேர்வினை தேசிய அளவில் NCERT நடத்துகிறது. இத்திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் NCERT நடத்தும் இரண்டாம் நிலையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட

மாணவர்களுக்கு 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் வரை மாதம் ரூ.1250/-ம், இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கும் வரை மாதந்தோறும் ரூ.2,000/-ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழுவினால் நிர்ணயிக்கப்படும் உதவித் தொகை அதிகபட்சமாக நான்கு ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

### *5.9.4. தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு (TRUST)*

ஊரகப் பகுதிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவர்கள், அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில் இத்தேர்வினை எழுத தகுதியுடையோர் ஆவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர்கள் எழுத்துத் தேர்வில் தெரிவு

செய்யப்பட்டு ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதம், தொடரும் நான்கு ஆண்டுகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. டிசம்பர் 2022 இல் நடைபெற்ற (TRUST) தேர்வை 91,484 மாணவர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

## 5.10. பல்வேறு வகையான தேர்வுகள் நடத்துதல்

### *5.10.1. எட்டாம் வகுப்புத் தேர்வு (தனித்தேர்வர்கள்)*

குறைந்தபட்ச எட்டாம் வகுப்பு கல்வித் தகுதியினை அளிக்கும் வகையில், நேரடித் தனித்தேர்வர்களுக்கு எட்டாம் வகுப்புத் தேர்வு இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகிறது. அக்டோபர் 2022-இல் நடத்தப்பட்ட எட்டாம் வகுப்புத் தேர்வில் 4,027 தனித்தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

### *5.10.2. தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு*

இவ்வியக்ககத்தால் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு நடத்தப்படுகிறது. ஆகஸ்ட்

2022-இல் நடைபெற்ற இத்தேர்வினை 6636 மாணவர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

### *5.10.3. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் (ssc) தேர்வுகளை நடத்துதல்*

ஆண்டுதோறும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் சென்னையில் நடத்தப்படும் தேர்வுகளுக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

### *5.10.4. அரசுத் தொழில்நுட்பத் தேர்வுகள்*

வேலைவாய்ப்பிற்கான தொழில்நுட்பக் கல்வித் தகுதியை வழங்குவதற்கு, ஓவியம், தையல், விவசாயம், அச்சுக்கலை, இசை, கைத்தறி மற்றும் நெசவு போன்ற பாடப்பிரிவுகளில் அரசுத் தொழில் நுட்பத் தேர்வுகள் நடத்தப்படுகிறது.

## 5.11. இயக்ககத்தினை கணினி மயமாக்குதல்

மாணவர்களின் பெயர் பட்டியல் தயாரித்தல் முதற்கொண்டு தேர்வு முடிவுகள் வெளியிடுதல் வரையிலான அனைத்து தேர்வுப் பணிகளும் இணைய வழியாக மேற்கொள்ளப்படுகிறது. இயக்ககத்தின் அனைத்து செயல்பாடுகளும், முழு அளவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

## 5.12. அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள்

தெரிந்தெடுக்கப்பட்ட பள்ளி வளாகங்களில் 252 அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் செயல்படுகின்றன. இவ்வியக்ககத்தால் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளுக்கும் தனித்தேர்வர்கள் இணைய வழியில் எளிதாக விண்ணப்பிக்க இச்சேவை மையங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது.

## 5.13. தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

தேர்வர்களின் பெயர் பட்டியல் தயாரிக்கும் பொழுது பதியப்பட்ட அலைபேசி எண்ணிற்கு தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக உடனடியாக அனுப்பி வைக்கப்படுகிறது. தேர்வு முடிவுகள் இணைய வழி வாயிலாக வெளியிடுவதற்கு https://tn.results.nic.in, https://dge1.tn.nic.in, https://dge2.tn.nic.in ஆகிய மூன்று இணையதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) சம்பந்தப்பட்ட பள்ளிகள் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேல்நிலை பொதுத் தேர்வுக்குரிய விடைத்தாட்களின் நகல்கள் பெறுவதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்வர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் விடைத்

தாட்களின் நகல்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதன் மூலம் மாணவர்கள் அவர்களது மதிப்பெண்கள் மறுகூட்டலுக்கோ அல்லது அவர்களது விடைத்தாட்களின் மறு மதிப்பீட்டிற்கோ விண்ணப்பிக்கலாம்.

### 5.14. சான்றிதழ்கள் வழங்குதல்

#### *5.14.1.தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல்*

தேர்வு முடிவுகள் வெளிவந்த மறுநாள் முதல், இடைநிலைத் தேர்வெழுதிய தேர்வர்கள் அவர்களின் தற்காலிக மதிப்பெண் சான்றிதழையும், மேல்நிலைத் தேர்வெழுதியோர் மதிப்பெண் பட்டியலையும் இணையதளம் (https://dge1.tn.nic.in) வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### *5.14.2.இடைநிலை / மேல்நிலை தேர்வுகளுக்கான பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள்*

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் முழுமையாக தேர்ச்சி அடைந்தவர்களுக்கு பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள் தனித்தனியே வழங்கப்படுகிறது. அத்துடன் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல் வழங்கப்படுகிறது. இடைநிலை / மேல்நிலை தேர்வுகளை ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

***5.14.3.மதிப்பெண் சான்றிதழின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்.***

தேர்வர்களின் விண்ணபத்தின் அடிப்படையில் மதிப்பெண் சான்றிதழின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இவ்வியக்கக இணைய தளத்தில் உள்ளது. 2022-23ஆம் ஆண்டு 4,140 சான்றிட்ட மதிப்பெண் நகல்களும் மற்றும் 11,199 இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

***5.14.4.புலப்பெயர்ச்சி சான்றிதழ்***

10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் தேர்வர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட 5 தினங்களுக்குள்

புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. 2022-23ஆம் ஆண்டு 7,010 புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### *5.14.5.மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையினை சரிபார்த்தல்*

மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை கோரி உயர் கல்வி நிறுவனங்கள், தனியார் அலுவலகங்கள் மற்றும் பணி நியமன அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை அறியும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 2022-23-ஆம் ஆண்டில் 2,38,356 மதிப்பெண் சான்றிதழ்களுக்கு உண்மைத் தன்மை சரிபார்த்து வழங்கப்பட்டுள்ளது.

### 5.15. நிதி ஒதுக்கீடு

2023-24ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இவ்வியக்ககத்திற்கு ரூ.127.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 6. பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

## 6.1. முன்னுரை

முறையான பள்ளிப் படிப்பின் நன்மைகளைப் பெற்றிராத வயது வந்தோருக்கு, அவர்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்குத் தேவையான அடிப்படை அறிவு மற்றும் திறன்களைக் கற்றுக்கொள்ள பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி உதவுகிறது. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வியானது, முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாத வயது வந்தோர் அனைவரும், புதிய வடிவிலான அனுபவ அறிவு மற்றும் வாழ்க்கைத் திறன்களைப் பெற உதவுவதற்குத் தேவையான முறையான மற்றும் தொடர் கற்றல் நடவடிக்கைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்தனிப்பட்ட நபர்களின் வருவாய் ஈட்டும் திறனை மேம்படுத்த உதவும் அடிப்படைக் கல்வியை வழங்குவதன் மூலம்

தன்னம்பிக்கையை உருவாக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு அரசானது, மாநிலத்தில் எழுத்தறிவின்மையை முற்றிலும் அகற்றிட வேண்டும் என்கிற உறுதியான நோக்கத்தோடு, 1976 ஆம் ஆண்டு முதல் பல்வேறு வயது வந்தோர் கல்வித் திட்டங்களைப் பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் வாயிலாகத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

## 6.2. தொலைநோக்கு

மாநிலத்தில், விரிவான திட்டங்களின் வாயிலாக, 15 வயதுக்குமேற்பட்ட, முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாத அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவுக் கல்வி, அடிப்படைக் கல்வி, தொழிற் திறன் கல்வி மற்றும் வாழ்நாள் முழுதும் கல்வி ஆகிய கல்வி வாய்ப்புகளை

வழங்குவதன் மூலம் முழு எழுத்தறிவை அடைதல்.

## 6.3. குறிக்கோள்கள்

- எழுத்தறிவு பெறாத வயது வந்த அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுக் கல்வி அளித்தல்.

- புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அடிப்படைக் கல்விக்கு மேல் கற்றலைத் தொடரவும், பள்ளிகளில் அளிக்கப்படும் முறையான கல்விக்கு இணையான கல்வி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.

- தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் வருவாய் ஈட்டும் திறனை மேம்படச் செய்தல்.

- புதிதாக எழுத்தறிவு பெற்றோர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.

## 6.4.வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் மாவட்டங்களில் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் மாவட்டங்களில் சிறப்பு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டமானது கடந்த 2019-20 ஆம் ஆண்டு முதல் 2022-23ஆம் ஆண்டு வரை ரூ.6.23 கோடி மதிப்பீட்டில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. 15 வயதுக்கு மேற்பட்ட, முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாத 1,68,716 நபர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்குவதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். இவர்களுள், 67,968 நபர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தையும், 1,00,748 நபர்கள் விருதுநகர் மாவட்டத்தையும் சார்ந்தவர்களாவர்.

தமிழ்நாடு அரசின் 100 சதவீத நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்ட இச்சிறப்புத் திட்டத்தின் வாயிலாக, 1,68,945 கற்போர் தங்களின் அடிப்படை எழுத்தறிவுக் கல்வியைப் பெற்று பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவர்களுள், 68,092 கற்போர் இராமநாதபுரம் மாவட்டத்திலும், 1,00,853 கற்போர் விருதுநகர் மாவட்டத்திலும் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் குறிக்கோள்களை எட்டிடும் வகையில், மொத்தமாக 4064 கற்போர் கற்றல் மையங்கள் அமைக்கப்பட்டு, அம்மையங்களில் 4064 தன்னார்வலர்களின் கல்வி சேவைகள் பயன்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த கற்போர்கள் எண்ணிக்கை விவரங்கள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

| இராமநாதபுரம் மாவட்டம் | | | விருதுநகர் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|
| ஒன்றியம் | மொத்த மையங்களின் எண்ணிக்கை | பயனடைந்த கற்போர்களின் எண்ணிக்கை | ஒன்றியம் | மொத்த மையங்களின் எண்ணிக்கை | பயனடைந்த கற்போர்களின் எண்ணிக்கை |
| இராமநாதபுரம் | 114 | 5282 | விருதுநகர் | 290 | 11815 |
| R.S.மங்களம் | 124 | 5050 | சாத்தூர் | 197 | 7913 |
| நைனார் கோயில் | 84 | 3565 | காரியாப் பட்டி | 170 | 6847 |
| திருவாடாணை | 167 | 6807 | அருப்புக்கோட்டை | 175 | 7071 |
| மண்டபம் | 189 | 7525 | நரிக்குடி | 162 | 6495 |
| திருப்புள்ளாணி | 138 | 6007 | திருச்சுழி | 164 | 6564 |
| கடலாடி | 256 | 10585 | ஸ்ரீவில்லி புத்தூர் | 201 | 8105 |
| பரமகுடி | 121 | 5487 | இராஜ பாளையம் | 285 | 11616 |
| போகலூர் | 69 | 2976 | சிவகாசி | 419 | 17110 |
| கமுதி | 173 | 8462 | வேம்பக்கோட்டை | 255 | 10386 |
| முதுகுளத்தூர் | 141 | 6346 | வத்திரா யிருப்பு | 170 | 6931 |
| மொத்தம் | **1576** | **68092** | மொத்தம் | **2488** | **100853** |

**ஆதாரம்: பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்.**

## 6.5 புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-27

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-27 என்கிற திட்டமானது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்கிற நிதிப்பங்களிப்பின் கீழ், 2022-23 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு 2022-23ஆம் ஆண்டில், 15 வயதுக்குமேற்பட்ட, முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாத 4.80 இலட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வியை வழங்கிடுவதை இத்திட்டம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டமானது, 2026-27 ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுத் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

இதுவரை இத்திட்டத்தின் கீழ், 28,848 கற்போர் எழுத்தறிவு மையங்கள் அமைக்கப்பட்டு,

5.28 இலட்சம் கற்போர் சேர்க்கப்பட்டுள்ளனர். தன்னார்வலர்களின் தன்னலமற்ற உன்னத சேவைகளின் உதவியுடன் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடப்பு 2022-23ஆம் நிதியாண்டிற்கு, ரூ.9.83 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இந்நிதியில், 2022-23 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த, ரூ.7.38 கோடியை முதல் தவணை நிதியாக தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

**6.6. நிதி ஒதுக்கீடு**

தமிழ்நாடு அரசால், 2023-24ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டத்தின் கீழ் ரூ.13.42 கோடி நிதி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 7. பொது நூலக இயக்ககம்

## 7.1. அறிமுகம்

பொது நூலகங்கள் அறிவின் நுழைவாயில்கள் மற்றும் தனிநபர்கள் மற்றும் சமூக குழுக்களின் கலாச்சார மேம்பாட்டை ஊக்குவிக்கின்றன. அவை தகவல் ஆதாரங்களுக்கான இலவச மற்றும் சமமான அணுகலை வழங்குகின்றன மற்றும் தரமான மனித மூலதனத்தை வளர்ப்பதை செயல்படுத்துகின்றன. தொழில்நுட்பம் பொது நூலகங்களை முக்கிய அறிவு மற்றும் கற்றல் மையங்களாக உருவாக்க உதவுகிறது.

## 7.2. இலக்கு

சமூகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் அவர்களின் தனிப்பட்ட, சமூக, கலாச்சார, பொருளாதார, இலக்கிய மற்றும் அறிவுசார்

மேம்பாட்டிற்காக ஒரு தகவல் தளத்தை உருவாக்குதல்

## 7.3. குறிக்கோள்கள்

- தொழில் நுட்பத்துடன் கூடிய பொது நூலகங்கள் மூலம் அனைத்துத் தரப்பு மக்களின் அறிவு சார் தகவல் தேவைகளை நிறைவு செய்தல்.
- பழைய மற்றும் அரிய நூல்களை மின்னுருவாக்கம் செய்து பாதுகாத்தல்.
- கிராமங்கள் தோறும் நூலகங்களை உருவாக்குதல்.
- மாற்றுத் திறனாளர்களும் பயன்பெறும் வகையில் ஒலி நூல்கள், மின்நூல்கள் மற்றும் பிரெய்லி நூல்கள் பொது நூலகங்களில் இருப்பதை உறுதி செய்தல்.

- பதிப்பிக்கப்படும் தரமான, புதிய நூல்கள் உடனுக்குடன் பொது நூலகங்களில் இருப்பு வைத்தலை உறுதி செய்தல்.
- தொலைதூர கிராமங்களில் உள்ள பொது நூலகங்களிலும் நவீன தொழில் நுட்பச் சேவையை மேம்படுத்துதல்.
- அனைத்துப் பொது நூலகங்களிலும் உள்கட்டமைப்புவசதிகளைச் சிறப்பாக்குதல்.

## 7.4. தமிழகத்தில் பொது நூலகங்கள்

பொது நூலகச் சேவைகள் திறம்பட வழங்கிடும் நோக்கில், நாட்டிலேயே முதன்முறையாக 1948 ஆம் ஆண்டு "தமிழ்நாடு பொது நூலகச் சட்டம்" இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, 1972 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பொது நூலக இயக்ககத்தின் கீழ் தற்போது, மாநில மைய நூலகமான

கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், 32 மாவட்ட மைய நூலகங்கள், 1,926 கிளை நூலகங்கள், 1,915 ஊர்ப்புற நூலகங்கள், 14 நடமாடும் நூலகங்கள் மற்றும் 771 பகுதி நேர நூலகங்கள் என மொத்தம் 4,660 நூலகங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர அரசு மானியம் பெற்று தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம், டாக்டர் உ.வே.சா. நூலகம் மற்றும் மறைமலையடிகள் நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

### *7.4.1. கன்னிமாரா பொது நூலகம்*

தமிழ்நாட்டின் மாநில - மைய நூலகமான கன்னிமாரா பொது நூலகம் 1896ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தியாவின் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றான கன்னிமாரா பொது நூலகம், நூல்கள் (செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்கள்) அனுப்புகைச் சட்டம் 1954இன்படி

இந்தியாவில் வெளியாகும் அனைத்து நூல்கள், செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் ஒரு பிரதியை இலவசமாக பெற்று வருகிறது. இந்நூலகத்தில் இலக்கியம், வரலாறு மற்றும் அறிவியல் சார்ந்த 9,32,079 புத்தகங்கள் உள்ளன.

அரியவகை நூல்கள் பிரிவு, பாடநூல் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு, மொழிப் பிரிவு, பருவஇதழ் பிரிவு, குடிமைப்பணி கல்வி மையம், இந்திய மொழி நூல்கள் பிரிவு, குழந்தைகள் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகள் இந்நூலகத்தில் செயல்பட்டு வருகின்றன. நாட்டுடமை ஆக்கப்பட்ட நூல்கள் மற்றும் 1950ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்காக மின்னுருவாக்கம் செய்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கன்னிமாரா பொது நூலகத்திலுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,47,947 ஆகும். இந்நூலகத்தைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும்

www.connemarapubliclibrarychennai.com எனும் இணைய தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

சென்னை மாநகர வரலாற்றின் ஒரு பகுதி என்ற வகையில் தமிழ்நாட்டில் சிறப்பான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ள கன்னிமாரா பொது நூலகம் 2021இல் தனது 125வது ஆண்டு நிறைவு பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து, கன்னிமாரா பொது நூலகத்தின் பழைய நூலகக் கட்டடம் ரூ.1.50 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ளதோடு, ரூ.3.19 கோடி செலவில் மின் கட்டமைப்புகள் பொதுப்பணித் துறையின் மூலம் சீர்செய்யப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

### *7.4.2. அண்ணா நூற்றாண்டு நூலகம்*

தெற்கு ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகம் சென்னை கோட்டூர்புரத்தில் 3.75 இலட்சம் சதுர

அடி பரப்பளவில் 197.43 கோடி செலவில் கட்டப்பட்ட 9 தளங்களுடன் அமைந்துள்ளது. இந்நூலகம் 2010ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் மேனாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் டாக்டர்.மு.கருணாநிதி அவர்களால் பொது மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நூலகத்தில் பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய 6,23,189 நூல்கள் இடம் பெற்றுள்ளன.

போட்டித் தேர்வுப் பிரிவு, குழந்தைகள் பிரிவு, பருவ இதழ் பிரிவு, தமிழ், ஆங்கிலம் மற்றும் மண்டல மொழிப் புத்தகப் பிரிவு, மின்நூல் பிரிவு மற்றும் அரசினர் கீழ்திசைச் சுவடிகள் நூலகம் ஆகிய பல்வேறு பிரிவுகளுடன் பார்வைமாற்றுத் திறனாளர்களுக்கான தனிப்பிரிவு மற்றும் சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு ஆகிய தனிப் பிரிவுகளும் இங்குள்ளன.

இந்நூலகத்திலுள்ள நூல்களைப் பற்றிய விவரங்களை இணையதளத்தின் வாயிலாக எந்த இடத்திலிருந்தும் எளிமையாகவும் விரைவாகவும் அணுகத்தக்க ஒருங்கிணைந்த நூலக மேலாண்மை அமைப்பு (WEB-OPAC) ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, ரேடியோ அலைவரிசை குறியீடு (Radio Frequency Identification – RFID) தொழில் நுட்பத்தின் மூலம் நூல்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நூலகத்திலுள்ள மாநாட்டுக் கூடம், கருத்தரங்குக் கூடம், கலையரங்கம் முதலியவற்றில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை வீதத்தில் அரசு விழாக்கள், கலை மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள், பள்ளி ஆண்டு விழா மற்றும் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா, தேசிய, மாநில அளவிலான தொழில்சார் மாநாடுகள், சிறந்த கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் நடத்தும் கருத்தரங்குகள்

மற்றும் அரசால் அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் நவீன மாநில நூலகமாகவும், மாநிலத்தின் அறிவுசார் கருவூலமாகத் திகழ்ந்து வரும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் கட்டடம் மற்றும் மின்சாரம் சார்ந்த பழுதுகள் தமிழக அரசால் பொதுப்பணித் துறை மூலம் ரூ.37.82 கோடி செலவில் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டு, இந்நூலகத்திலுள்ள காலாவதியான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் பழுதுநீக்கம் செய்யப்பட்டு, புதிய தொழில்நுட்ப சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும், ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தி வரும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வெளியிடப்பட்ட சிறந்த புத்தகங்களைக் கொண்டுள்ள அண்ணா

நூற்றாண்டு நூலகத்தின் புத்தகங்களின் பரந்த தொகுப்பினைப் புதுப்பித்து விரிவுபடுத்தும் நோக்கில், ரூ.6.50 கோடி மதிப்பில் இந்நூலகத்திற்கு மின்-புத்தகங்கள், மின்-பத்திரிகைகள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் கொள்முதல் செய்வதற்கு அரசால் அனுமதிக்கப்பட்டு, கொள்முதல் செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *7.4.3. சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம்*

இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் புகழ்பெற்ற நூலகங்களில் ஒன்றான மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம் தஞ்சாவூரில் நாயக்க மன்னர்களால் 16ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இந்நூலகம் கலாச்சார பழங்கால பொருட்கள் மற்றும் அரிய புத்தகங்கள், ஓவியம் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றின்

மகத்தான மதிப்புமிக்க களஞ்சியத்தைக் கொண்டுள்ளது. இந்த நூலகம் 1918 முதல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்த அறிவு மையத்தில் 47,334 கையெழுத்துப் பிரதிகள் உள்ளன, அவற்றில் 24,165 பனை ஓலைகளில் உள்ளன. 23,169 தமிழ், சமஸ்கிருதம், மராத்தி மற்றும் ஆங்கில மொழிகளில் காகித கையெழுத்துப் பிரதிகள் உள்ளன, மேலும், 45,000 புத்தகங்கள், வரைபடங்கள், இலக்கியம், கலை மற்றும் கலாச்சாரத்தின் அனைத்து அம்சங்களையும் கொண்ட ஓவியங்கள் உள்ளன, பணியாளர்களின் நலன் மற்றும் நூலக வளர்ச்சிக்காக ஆண்டு பராமரிப்பு மானியமாக தமிழக அரசு ரூ.75 இலட்சம் வழங்குகிறது. பழமையான மற்றும் மிகவும் விலையுயர்ந்த அரிய புத்தகங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் பனை ஓலைகள்

மின்னுருவாக்கம் செய்யப்பட்டு சாதாரண மக்கள் முதல் ஆராய்ச்சியாளர்கள் வரை பயன்படுத்துவதற்காக பாதுகாக்கப்பட்டுள்ளன.

### *7.4.4. மறைமலையடிகள் நூலகம், சென்னை*

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறை மலையடிகளை கௌரவிக்கும் வகையில் 1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் தேதி மறைமலையடிகள் நூலகம் நிறுவப்பட்டது. கன்னிமாரா பொது நூலக வளாகத்தில் இந்நூலகம் இயங்கி வருகிறது. சங்க இலக்கியம், திருக்குறள், இலக்கணம், இதழியல், வாழ்க்கை வரலாறு, நாலடியார், திருவாசகம், அகராதிகள் மற்றும் மருத்துவம் தொடர்பான புத்தகங்கள் போன்ற குறிப்பிடத்தக்க பண்டைய இலக்கியத் தொகுப்புகளைக் கொண்டுள்ளது. இந்த நூலகத்தை பராமரிக்க தமிழக அரசு ஆண்டு மானியமாக ரூ.1 இலட்சம் வழங்குகிறது.

### 7.4.5. டாக்டர் உ. வே.சா. நூலகம், சென்னை

இந்த நூலகம் 1943 ஆம் ஆண்டு சிறந்த தமிழறிஞரும் ஆய்வாளருமான அன்புடன் தமிழ் தாத்தா என்று அழைக்கப்படும் முனைவர் உ.வே.சா. அவர்களின் நினைவாக நிறுவப்பட்டது. 2,200 விலைமதிப்பற்ற ஓலைச் சுவடிகள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, அகப்பொருள் விளக்கம், அகராதி நிகண்டு, அரிச்சந்திரப் புராணம், இலக்கிய விளக்கம், நேமிநாதம், சேக்கிழார் புராணம், தொன்னூல், வீரசோழியம், தொல்காப்பியம், பெருங்கதை, இராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை, பெரிய புராணம், இலக்கணக்கொத்து மற்றும் புகழ்பெற்ற தழிழறிஞர்களிடமிருந்து டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு எழுதிய 3000க்கும் மேற்பட்ட கடிதங்கள் மற்றும் 1893 முதல் 1939 வரை உ.வே.சா. அவர்களின் நாட்குறிப்புகள் இந்நூலகத்தில் உள்ளன. இந்த

நூலகத்திற்கு 2022-23ஆம் நிதியாண்டில் தமிழக அரசு ரூ.24.40 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.

### 7.5. மாவட்ட மைய நூலகங்கள்

தமிழ்நாடு பொது நூலக விதிகள் 1950ன் கீழ் மாவட்ட மைய நூலகங்கள் நிறுவப்பட்டன. இந்த நூலகங்கள் வாசகர்களுக்கு தரமான தகவல்களை வழங்குவதில் சிறப்பான பணியை செய்து வருகின்றன. வாசகர்களின் வசதிக்காக, குறிப்பாக பள்ளி/கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் பழைய மற்றும் அரிய புத்தகங்களைப் பெறுவதற்காக இந்த மாவட்ட மைய நூலகங்களின் மின் புத்தகங்களை படிப்படியாக டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. இந்நூலகங்களில் பல்வேறு துறைசார்ந்த 70 இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள், பருவ இதழ்கள், குறிப்புதவி நூல்கள், குடிமைப்பணி உள்ளிட்ட போட்டித் தேர்வு நூல்கள் மற்றும் இணைதள வசதிகள் இடம் பெற்றுள்ளன.

மாவட்ட மைய நூலகங்களில் 13,26,589 உறுப்பினர்கள் உள்ளதோடு, 14,58,036 வாசகர்கள் இந்த நூலகங்களால் பயனடைந்துள்ளனர்.

### 7.6. கிளை நூலகங்கள்

மக்கள் தொகை அதிகமாக உள்ள பகுதிகளுக்கு நூலகச் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில், 5,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கிளை நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது மாநிலம் முழுவதும் 314 முழுநேர கிளை நூலகங்கள் உட்பட 1,926 கிளை நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நூலகங்களில் குழந்தைகள், மாணவர்கள், பெண்கள், உழைக்கும் மக்கள் மற்றும் மூத்த குடிமக்கள் நலனுக்காக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த நூலகங்களில் வாசகர்களின் பயன்பாட்டிற்காக

மொத்தம் 5,99,87,898 புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்நூலகங்களில் 64,02,699 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளதோடு, 2022-23 ஆம் நிதியாண்டில் இந்நூலகங்களால் 1,70,96,724 பார்வையாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**7.7. ஊர்ப்புற நூலகங்கள்**

ஊர்ப்புற நூலகங்கள் 1996ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இந்நூலகங்கள் சமூகத்திற்கு மதிப்பை வழங்குவதோடு சமூக, கலாச்சார மற்றும் அறிவுசார் தொடர்புகளுக்கான சந்திப்பு இடமாகவும் விளங்குகின்றன. புதிய தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஊர்ப்புற நூலகங்கள் கணினி வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2022-23ஆம் ஆண்டில், 1,01,74,926 வாசகர்கள் பயனடைந்ததோடு, 21,85,384 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த நூலகங்களில் 2,20,60,472 புத்தகங்கள் இடம்பெற்றுள்ளன.

## 7.8 நடமாடும் நூலகங்கள்

மலைப்பாங்கான, தொலைதூர மற்றும் அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களின் நூலகத் தேவைகளை நிறைவேற்றவும், இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பள்ளி மாணவர்களிடையே புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், மாநிலத்தின் 14 மாவட்டங்களில் குறுந்தகடுகள், புத்தகங்கள், ஒளிப்படங்கள், வரைபடங்கள் மற்றும் பருவ இதழ்களுடன் நடமாடும் நூலகங்கள் சேவையாற்றி வருகின்றன. இந்த நடமாடும் நூலகங்களால் 34,073 உறுப்பினர்களும், 36,200 வாசகர்களும் பயனடைந்துள்ளனர்.

## 7.9. பகுதி நேர நூலகங்கள்

பொது நூலகச் சேவையானது அடித்தட்டு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டவை பகுதிநேர நூலகங்கள் ஆகும். இந்த நூலகங்கள் வாயிலாக 3,40,805 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, 16,71,753 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

## 7.10. நிதி ஆதாரம் (நூலக வரி)

பொது நூலகத் துறையின் முக்கிய வருவாய் நூலக வரியே ஆகும். தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948, பிரிவு 12(1)(a)-இன்படி, உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலிக்கும் சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் நூலக வரி வசூலிக்கப்படுகிறது. நூலகங்களுக்குத் தேவையான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் வாங்குதல், புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுதடைந்த நூலகக் கட்டடங்களைப்

புதுப்பித்தல், நூலகங்களுக்குத் தேவையான எழுது பொருட்கள், நுகர் பொருட்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல், பகுதிநேரத் துப்புரவாளர் ஊதியம், பகுநேர நூலகர் தொகுப்பூதியம், தினக்கூலி ஊதியம் மற்றும் நூலக மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் நேரடியாக நூலக நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் நூலக வரியாக (பிப்ரவரி-2023 வரை) ரூ.138.00 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**7.11. நூலகக் கட்டமைப்பு**

தமிழ் நாட்டில் செயல்பட்டுவரும் 4,660 பொது நூலகங்களில் 1,781 நூலகங்கள் சொந்தக் கட்டடத்திலும், 2,552 நூலகங்கள் வாடகையில்லா இலவசக் கட்டடத்திலும், 313 நூலகங்கள் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன.

### 7.12. கணினிமயமாக்கம்

நூலகச் சேவைகளின் தரத்தை உயர்த்த கன்னிமாரா பொது நூலகம் (மாநில மைய நூலகம்) மற்றும் அனைத்து மாவட்ட மைய நூலகங்களும் இணையம் மற்றும் மின்னஞ்சல் உள்ளிட்ட வசதிகளுடன் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

### 7.13. குடிமைப்பணி கல்வி மையம்

பெருவாரியான இளைஞர் சமூகத்தின் நலன் கருதி, கன்னிமாரா பொது நூலகம், மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் மாவட்ட தலைமையகத்தில் அமைந்துள்ள நூலகங்கள், நகராட்சிகள் மற்றும் சிறு நகரங்களில் செயல்படும் 289 நூலகங்களில் குடிமைப்பணி கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு ஆர்வமுள்ள இளைஞர்களின் பயன்பாட்டிற்காக இங்கு போட்டித் தேர்வுகள் தொடர்பான புத்தகங்கள், நாளிதழ்கள்,

பத்திரிக்கைகள், இதழ்கள் வாங்கி வைக்கப்படுகின்றன.

### 7.14. வாசகர் வட்டம்

நூலகச் செயல்பாடுகளில் மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர்வாசிகளைக் கொண்ட வாசகர் வட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மன்றம் நூலகங்களின் விரிவான பயன்பாட்டை உறுதிசெய்து, சிறந்த வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தி, பல்வேறு நூலகச் செயல்பாடுகளை நடத்துகிறது, புதிய எழுத்தாளர்கள் மற்றும் புத்தகங்களை அடையாளம் காட்டுவதோடு, நூலகங்கள் மூலம் வாசகர்களுடன் புத்தகங்களை இணைப்பதன் வாயிலாக பயனர்களிடையே நல்லுறவை வளர்க்கிறது.

## 7.15. நூலகப் புரவலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள்

பொது நூலகங்களுக்கு புரவலர்கள், பெரும் புரவலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் முறையே ரூ.1,000, ரூ.5,000 மற்றும் ரூ.10,000 நன்கொடையாக அளிக்கும் தொகை வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டு, கிடைக்கும் வட்டியானது பொது நூலகங்களின் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படுகிறது.

## 7.16. சாதனைகள்

### *7.16.1. கருணை அடிப்படை நியமனம்*

பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றி பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்தம் கல்வித்தகுதிக்கேற்ப மூன்றாம் நிலை நூலகர், பதிவறை எழுத்தர் மற்றும் கீழ்நிலை உதவியாளர்

பணியிடங்களில் 27 வாரிசுதாரர்களுக்கு 2022-23ஆம் ஆண்டில் கருணையடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### *7.16.2. பணி மாறுதல் கொள்கை உருவாக்கம்*

பொது நூலக இயக்ககம் மற்றும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பணிமாறுதல் வழங்கு-வதற்கான புதிய கொள்கை வகுக்கப்பட்டு, இக்கொள்கையின் அடிப்படையில் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றும் நூலக ஆய்வாளர், முதல் நிலை நூலகர், இருப்பு சரிபார்ப்பு அலுவலர், இரண்டாம் நிலை நூலகர் மற்றும் மூன்றாம் நிலை நூலகர்களில் 75 பணியாளர்களுக்கு அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் பணியிட மாறுதல் வழங்கப்பட்டுள்ளன.

### *7.16.3. அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் நூலக நிதியில் ஊதியம் பெற்று வந்த பணியாளர்களுக்கு அரசு நிதியில் ஊதியம்:*

நூலக நிதியில் ஊதியம் பெற்று வந்த 83 அண்ணா நூற்றாண்டு நூலகப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் உள்ள 551 மூன்றாம் நிலை நூலகர்கள் மற்றும் 353 ஊர்ப்புற நூலகர்களுக்கு குடும்ப நல நிதி சந்தா, சிறப்பு சேம நல நிதி சந்தா, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சந்தா மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட சந்தா ஆகிய சட்டபூர்வ அரசு பிடித்தங்களுடன் அனைத்து பலன்களுடன், தற்போது 2022ஆம் ஆண்டு முதல் அரசு நிதியிலிருந்து ஊதியம் பெற்றுள்ளனர்.

## 7.17. நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களின் கொள்முதல் முறையை மறுசீரமைத்தல்:

பொது நூலகங்களுக்கு நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் கொள்முதல் செய்வதில் உள்ள குறைபாடுகள் குறித்து நிபுணர் குழு அமைக்கப்பட்டு, இந்தக் குழுவின் அறிக்கையின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்கப்பட்டு பொது நூலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## 7.18. மின்னுருவாக்கம் (Digitization):

மின்னுருவாக்கத்திற்கான பல முயற்சிகள் பொது நூலக இயக்ககத்தால் எடுக்கப்பட்டுள்ளன. கன்னிமாரா பொது நூலகம், தமிழ்நாடு தொல்லியல் நூலகம், தமிழ்நாடு ஆவண காப்பக நூலகம், பல்கலைக்கழக நூலகங்கள், கல்லூரி நூலகங்கள் மற்றும் தனியார் நூலகங்களில் உள்ள அரிய நூல்களில் 21,043 நூல்கள் (30 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்கங்கள்) மற்றும்

2,54,694 ஓலைச் சுவடி பக்கங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு, இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், தற்போது மின்னுருவாக்கம் செய்யப்பட்ட 29,000-க்கும் மேற்பட்ட நூல்களுக்கான (40 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்கங்கள்) Meta data தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து https://tamilnadupubliclibraries.org என்ற இணையதளம் மூலம் பொது மக்கள் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

## 7.19. பொது நூலகங்களுக்கான ஒருங்கிணைந்த நூற்பட்டியல் (Union Catalogue):

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பொது நூலகங்களின் முழுப் பட்டியலைப் பராமரிக்கும் வகையில், ஒவ்வொரு நூலகத்தின் நூல்கள் இருப்பு விவரங்களை வழங்குவதற்கு,

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்ட மைய நூலகங்கள், அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் பிற அரசு உதவி பெறும் நூலகங்களுக்கான ஒருங்கிணைந்த நூற்பட்டியலை பொது நூலக இயக்ககம் உருவாக்கியுள்ளது. இந்நூலகங்களின் பட்டியல்கள் அனைத்தும் MARC 21 மற்றும் AACR2 தரநிலைகளின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்டுள்ளன, மேலும், இந்த ஒருங்கிணைந்த பட்டியல் Koha என்ற கட்டற்ற மென்பொருளில் பதிவேற்றப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 7 இலட்சம் புத்தகங்களின் விவரங்கள் தரப்படுத்தப்பட்டு, ஒருங்கிணைந்த அட்டவணையில் பதிவேற்றம் செய்யப்பட்டு, https://tamilnadupubliclibraries.org என்ற இணையதளம் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், 28 இலட்சம்

புத்தகங்கள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட உள்ளது.

### 7.20. வேலைவாய்ப்பு செய்தி கைப்பேசிச் செயலி மற்றும் இணையதளம்:

போட்டித் தேர்வர்கள் தங்களுக்குத் தேவையான பல்வேறு போட்டித் தேர்வுகள் மற்றும் வேலைவாய்ப்பு பற்றிய தகவல்களை அறிய வெவ்வேறு நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் இணையதளங்களை தேடுவதற்கான சிரமங்களைக் களைய "உங்கள் நூலகம் உள்ளங்கையில்" என்ற திட்டத்தின்படி, "TN Employment News" (Mobile App) மற்றும் www.tnemployment.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டு, இதன் மூலம் பெருமளவு மாணவர்கள் / வேலைவாய்ப்பு தேடும் இளைஞர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### 7.21. மெய்நிகர் நூலகம் (Virtual Reality Library)

பொது நூலகங்களைப் பயன்படுத்தும் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், ரூ.57.20 இலட்சம் மதிப்பீட்டில் 38 மாவட்டங்களில் உள்ள 76 நூலகங்களில், 152 மெய்நிகர் தொழிற்நுட்ப கருவிகளுடன் மெய்நிகர் நூலக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 7.22. மாவட்டங்களில் புத்தகக் காட்சிகள்

சமூகத்தின் அறிவுசார் மட்டத்தை உயர்த்துவதில் புத்தக வாசிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. இதனை மக்கள் இயக்கமாக மாற்ற, சென்னை புத்தகக் கண்காட்சியைப் போன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, ரூ.4.96 கோடி நிதி அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. 32 மாவட்டங்களில் புத்தகக் கண்காட்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டு, மீதமுள்ள

மாவட்டங்களில் புத்தகக் கண்காட்சியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 7.23. இலக்கியத் திருவிழாக்கள்

இலக்கியச் செழுமைமிக்க தமிழ் மொழியின் இலக்கிய மரபுகளைக் கொண்டாடும் நோக்கில், ஒவ்வொரு ஆண்டும் இலக்கியத் திருவிழாக்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, தமிழகத்தில் நதி நாகரிக மரபுகளின் அடிப்படையில் வைகை, காவேரி, பொருநை, சிறுவானி மற்றும் சென்னை இலக்கியத் திருவிழாக்கள் நடத்த ரூ.63.50 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை இலக்கியத் திருவிழா, சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சென்னை இலக்கியத் திருவிழா, கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறுவாணி இலக்கியத் திருவிழா, தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி இலக்கியத் திருவிழா மற்றும் மதுரை மாவட்டத்தில் வைகை இலக்கியத் திருவிழா

சிறப்பாக நடைபெற்றுள்ளனன. இத்திருவிழாவில் பெருமளவு இலக்கிய ஆர்வலர்கள், புத்தக விரும்பிகள் மற்றும் வாசகர்கள் என ஏராளமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

## 7.24. சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி

உலகளாவிய அறிவுப் பரிமாற்றத்தை நோக்கமாகக் கொண்டு, நமது செழுமையான தமிழ் இலக்கியப் படைப்புகளை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லவும், சிறந்த சர்வதேச அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புகளைப் பெற்றுத் தமிழில் பல புதிய படைப்புகளை உருவாக்கவும். தமிழ்நாடு அரசு சென்னை சர்வதேச புத்தகக் கண்காட்சியை ஜனவரி 16, 2023 முதல் ஜனவரி 18, 2023 வரை ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் வெற்றிகரமாக நடத்தியது.

இந்த முதல் சர்வதேச புத்தகக் கண்காட்சியில் 24 நாடுகள் பங்கேற்றன - பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, பங்களாதேஷ், அஜர்பைஜான், இஸ்ரேல், உகாண்டா, ஆர்மீனியா, அர்ஜென்டினா, கனடா, துருக்கி, யுஏஇ, பஹ்ரைன், கத்தார், ஜார்ஜியா, இந்தோனேசியா, தான்சானியா, ஓமன் மற்றும் போட்ஸ்வானா.

இக்கண்காட்சியில் கலந்துகொண்ட சுமார் 30 வெளிநாட்டு வெளியீட்டாளர்கள் / விற்பனையாளர்கள், அண்டை மாநில வெளியீட்டாளர்கள் மற்றும் தமிழ்நாட்டுப் பதிப்பாளர்கள் தமிழ் இலக்கியத்தை மையமாக வைத்து பதிப்புரிமைகளை பரிமாறிக்கொள்ள வசதி செய்யப்பட்டது. இது உலகெங்கிலும் உள்ள பதிப்பகத் துறையுடன் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்தியது. தமிழில் இருந்து பிற வெளிநாட்டு

மொழிகளுக்கு 90 தலைப்புகளும், தமிழில் இருந்து பிற இந்திய மொழிகளுக்கு 60 தலைப்புகளும், பிற மொழிகளில் இருந்து தமிழுக்கு 170 தலைப்புகளும், பிற மொழிகளிலிருந்து வேறு மொழிகளுக்கு 45 தலைப்புகளும் மொழிமாற்றம் செய்வதற்கு இதுவரை இல்லாத அளவில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

## 7.25. செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### *7.25.1. வெளிப்படைத் தன்மையுடன் பொது நூலகங்களுக்கு புதிய நூல்கள் வாங்குதல்*

பொது நூலகங்களுக்கு நூல்கள் கொள்முதல் செய்தலில் வெளிப்படைத் தன்மைக்கான நெறிமுறைகளை உருவாக்க குழு அமைக்கப்பட்டு, புத்தகங்களுக்கான கொள்முதல் கொள்கையில் தக்க திருத்தங்கள் மேற்கொண்டு, கொள்முதலின் ஒவ்வொரு படிநிலையிலும்

ஒளிவு மறைவின்றி பொது நூலகங்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் நூல்கள் வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்-பட்டு வருகிறது.

### *7.25.2. தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான உயர்மட்டக் குழு*

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 மற்றும் விதிகள் 1950 ஆகியவற்றில் தற்போதைய பணிச்சூழலுக்கு ஏற்றவாறு திருத்தங்களை மேற்கொள்வதற்கும், மாநிலத்தில் உள்ள நூலகங்களின் செயல்பாட்டை மேம்படுத்து-வதற்கும் 6 உறுப்பினர்கள் மற்றும் 3 சிறப்பு அழைப்பாளர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. சட்ட ஆலோசகர்கள் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர்.எம்.ராஜேந்திரன் தலைமையில்.

உயர்நிலைக் குழு அரசிடம் அளித்த அறிக்கையின்படி, பொது நூலகங்களில் உரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### *7.25.3. கிராமப்புற நூலகங்களில் மின் நூலகச் சேவை*

பொது நூலக வாசகர்கள் மற்றும் போட்டித் தேர்வு எழுத விரும்புவோர் பயன்பெறும் வகையில் கிராமப்புறங்களில் உள்ள பொது நூலகங்களுக்கு மின் நூலக சேவை வழங்கும் நோக்கில், முதற்கட்டமாக 500 நூலகங்களில் wi-fi இணையதள வசதி வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

### *7.25.4. நூலக நண்பர்கள் திட்டம்*

தமிழகத்தில் உள்ள 2,500 நூலகங்களில் மொத்தம் 12,500 தன்னார்வலர்களுடன், நூலக சேவைகள் இல்லாத கிராமப்புற மற்றும்

நகர்ப்புறங்களில் உள்ள சுமார் 15 இலட்சம் வாசகர்கள் பயன்பெறும் வகையில் ரூ.56.25 இலட்சம் மதிப்பீட்டில் நூலக நண்பர்கள் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக திண்டுக்கல் மாவட்டத்தில் தன்னார்வலர்களைக் கொண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

### *7.25.5. டி.என் டாக் (TN talk)*

பல்வேறு துறைகளில் உள்ள வல்லுனர்களின் அறிவை அனைத்து நூலக வாசகர்களுக்கும், பொதுமக்களுக்கும் சென்றடையும் நோக்கில், பொது நூலக இயக்ககத்தால் தலா ரூ.1.50 இலட்சம் செலவில் “TN Talk” என்ற பெயரில் தனித்துவமான தொடர் பேச்சுகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 25 நிகழ்ச்சிகள் நடத்தப்படும். பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறந்த வல்லுனர்களைக்

கொண்டு இந்த நிகழ்ச்சிகள் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடத்தப்படுகின்றன.

### *7.25.6. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் "செந்தமிழ் சிற்பிகள் அரங்கம்"*

தமிழ் மொழிக்கு மகத்தான பங்காற்றிய எழுத்தாளர்கள் மற்றும் தமிழறிஞர்களை கவுரவிப்பதற்காகவும், இளைய தலைமுறைக்கு அவர்களை முன்மாதிரியாகக் காட்டுவதற்காகவும், சாகித்ய அகாடமி விருது, ஞானபீடம் போன்ற மதிப்புமிக்க விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்களின் புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகளை காட்சிப்படுத்துதல், விருதுகள் முதலியனவும், இளம் தலைமுறையினரின் படைப்பாற்றலைத் தூண்டும் வகையில் விருது பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகளை நடத்தவும், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40.00 இலட்சம்

மதிப்பீட்டில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" என்ற புகழ் மண்டபம் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

### *7.25.7. சர்வதேச தரத்தில் நவீன கலைஞர் நூற்றாண்டு நூலகம்*

மாண்புமிகு முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவாக மதுரையில் ரூ.114.00 கோடியில் சர்வதேச தரத்தில் நவீன நூலகம் அமைக்கப்பட உள்ளது. மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், போட்டித் தேர்வுக்குத் தயாராகும் இளைஞர்கள், பள்ளிக் குழந்தைகள் என சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் இந்த நூலகம் அறிவுசார் மற்றும் இலக்கியக் கலங்கரை விளக்கமாக இருக்கும். இந்நூலகத்திற்கான புத்தகங்கள், மின் புத்தகங்கள், ஆராய்ச்சி இதழ்கள் மற்றும் மின்

ஆராய்ச்சி இதழ்கள் வாங்கும் பணி நடைபெற்று வருகிறது.

### *7.25.8. முனைவர்.எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவு நூலகம்*

தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றிய, இந்தியாவின் நூலகங்களின் தந்தை பத்மஸ்ரீ முனைவர் எஸ்.ஆர்.ரங்கநாதனின் நினைவாக, அவர் பிறந்த மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள சீர்காழியில் ரூ.1.32 கோடி செலவில் அரிய நூல்கள், ஆராய்ச்சி வசதிகள், குழந்தைகள் பிரிவு மற்றும் இணையதள வசதியுடன் முனைவர்.ரங்கநாதனின் படைப்புகள் அடங்கிய நூலகம் அமைப்பதற்கான பணிகள் பொதுப்பணித்துறை மூலம் நடைபெற்று வருகின்றன.

### *7.25.9. செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் பெயரில் புதிய நூலகக் கட்டடம்*

அறிவு நூல் திரட்டு, கண்ணகி தேவி, காப்பியக் கதைகள், மூவர் உலா ஆராய்ச்சி, தமிழ்மொழியின் மறுமலர்ச்சி, நல்லிசைப் புலவர்கள் போன்ற பல நூல்கள் இயற்றிய செந்நாப் புலவர் ஆ.கார்மேகனாரின் சேவையினைப் பாராட்டி, இராமநாதபுரம் மாவட்டம் அபிராமபுரத்தில் உள்ள கிளை நூலகத்திற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 7.26. நூலக நிகழ்ச்சிகள்

நூலக அறிவியல் தந்தை முனைவர் எஸ்.ஆர்.ரங்கநாதனுக்கு மரியாதை செலுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12 ஆம் தேதி, "நூலகர் தினம்" கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் மே 22 அன்று "நூலக தினம்"

கொண்டாடப்படுகிறது. நூலகங்களைப் பற்றிய விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தவும், அர்ப்பணிப்புள்ள திறமையானவர்களின் சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கவும் "தேசிய நூலக வாரம்" ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 முதல் 20 வரை கொண்டாடப்படுகிறது. ஏப்ரல் 23 ஆம் தேதி "உலக புத்தக தினமாக" கொண்டாடப்படுகிறது.

## 7.27. நூலக விருதுகள்

மிகச் சிறந்த செயலாக்கம் கொண்ட நூலகர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளிப்பதக்கத்துடன் ரூ.5.000 ரொக்கப் பரிசைக் கொண்ட "முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன்" விருதும், நூலக மேம்பாட்டு நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் நூலகங்களுக்கு, சிறந்த நூலக விருதும் வழங்கப்படுவதோடு, நூலக வளர்ச்சிக்குத் துணைபுரியும் வாசக வட்டத் தலைவர்களைப்

பாராட்டும் வகையில் ரூ.5.000 மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழுடன் கூடிய "நூலக ஆர்வலர்" விருதும் வழங்கப்படுகிறது.

மேலும், குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில், அவர்களில் எழுத்தாளர்களை வளர்க்கும் விதமாக, 18 வயதுக்குட்பட்ட மூன்று சிறந்த எழுத்தாளர்களுக்கு ரூ.25,000 ரொக்கம், கேடயம் மற்றும் சான்றிதழுடன் சிறந்த குழந்தை எழுத்தாளர்களுக்கான "கவிமணி" விருது, ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

### 7.28. நிதி ஒதுக்கீடு

2023-24ஆம் நிதியாண்டில் பொது நூலக இயக்ககத்திற்கு ரூ.196.32 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 8. ஆசிரியர் தேர்வு வாரியம்

## 8.1. முன்னுரை

பள்ளிக்கல்வித் துறை, உயர்கல்வித் துறை, சட்டக்கல்வி இயக்ககம் ஆகியவற்றிற்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் அமைப்பாக ஆசிரியர் தேர்வு வாரியம் 1987-ல் தொடங்கப்பட்டது. இவ்வாரியம் தொடங்கப்பட்டது முதல் சுமார் 1,68,624 ஆசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்களை அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்துள்ளது. மேலும், ஆசிரியர் தேர்வு வாரியமானது தமிழ்நாடு ஆசிரியர் தகுதித்தேர்வு நடத்திடும் முகவாண்மை நிறுவனமாக(Nodal Agency) நியமிக்கப்பட்டுள்ளது.

## 8.2. நோக்கம்

பயன்பாட்டுத் துறைகளின் தேவைகளுக்கேற்ப, தகுதியான ஆசிரியர்களைத் தெரிவு செய்வதே ஆசிரியர் தேர்வு வாரியத்தின்

முதன்மை நோக்கமாகும். ஆசிரியர் தேர்வு வாரியமானது தமிழ்நாடு மின்னாளுமை முகவாண்மை (TNeGA) நிறுவனத்தின் உதவியுடன் சமீபத்திய தொழில்நுட்பத்தினை ஒருங்கிணைத்து வெளிப்படையான முறையில் நடத்துகிறது.

**8.3.ஆசிரியர்கள்தெரிவு**

- 2022 ஆம் ஆண்டில் 96 வட்டாரக் கல்வி அலுவலர்கள் (BEO's) ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டு, தொடக்கக் கல்வி இயக்ககத்தால் பணிநியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2022 ஆம் ஆண்டில் 1030 அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டு

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் பணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மேலும், ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 3043 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை-1 / கணினிப் பயிற்றுநர் நிலை -1 ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு தெரிவுப் பட்டியல்கள் பள்ளிக் கல்வி ஆணையரகம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், ஆதிதிராவிடர் நல இயக்ககம், பழங்குடியினர் நல இயக்ககம், சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் மதுரை மாநகராட்சிக்கு அனுப்பப்பட்டு பணிநியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**8.4.தமிழ்நாடுஆசிரியர்தகுதித்தேர்வுகள்(TNTET)**

- 2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆசிரியர்தகுதித் தேர்வு தாள்-1 14.10.2022 முதல் 19.10.2022 வரை இணைய வழியில் (CBT) நடத்தி முடிக்கப்பட்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.
- மேலும், 2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-2 03.02.2023 முதல் 14.02.2023 வரை இணையவழியில் (CBT) நடத்தப்பட்டுள்ளது.

**8.5.தகவல் மையம்**

2015 ஆம் ஆண்டு முதல் ஆசிரியர் தேர்வு வாரியத்தில் தகவல் மையம் செயல்பட்டு வருகிறது. தேர்வர்களின் சந்தேகங்களுக்கு விரைவாக விளக்கம் அளிக்கும் வகையில்

கட்டணமில்லா எண் (18004256753) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஆசிரியர் தேர்வு வாரியம் அனைத்துத் தெரிவுகள் தொடர்பான தகவல்களை வெளியிட புதிய இணையதளத்தை http://trb.tn.gov.in நிறுவியுள்ளது.

### 8.7 போட்டித் தேர்வுகளை நடத்திட அரசுப் பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள்

ஆசிரியர் தேர்வுவாரிய போட்டித் தேர்வுகளைத் திட்டமிட்டபடி நடத்திட அரசுப் பள்ளிகளில் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் கணினி ஆய்வகங்கள் அமைக்கும் பொருட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், பள்ளித் தேர்வுகள் நடைபெறாத காலங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் பள்ளிக் கணினி ஆய்வகங்களை போட்டித் தேர்வுகளுக்கு பயன்படுத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையின்படி அரசுப் பள்ளிகளில் கணினி

ஆய்வகங்கள் நிறுவுவதற்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் ICT & Digital Initiatives திட்டத்தின் கீழ் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

## 8.6. வருடாந்திர கால அட்டவணை 2023-24

2023-24ஆம் ஆண்டிற்கான தற்காலிக வருடாந்திர கால அட்டவணையை ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ளது. அதில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 4000 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கும், அரசுப்பள்ளிகளில் 6553 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களையும், 3587 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களையும், 267 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கும், சட்டக் கல்லூரிகளில் 129 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கும், அரசுப்

பொறியியல் கல்லூரிகளில் 97 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கும், அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 493 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கும், 33 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களை நிரப்புவதற்கும் ஆக மொத்தம் 15,159 ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு உத்தேசக்கால அட்டவணை வெளியிடப்-பட்டுள்ளது. மேலும், 2023-24ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.8. ஆசிரியர் தேர்வு வாரியம் மறுசீரமைப்பு

தெரிவுப் பணிகளை மேலும் திறம்பட மேற்கொள்ளும் பொருட்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண்.01 பள்ளிக் கல்வித் (TRB) துறை நாள்.03.01.2023-ல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் இந்திய ஆட்சிப் பணி

நிலையில் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பணியிடம் ஒன்றும், ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடமும், ஒரு இணை இயக்குநர் பணியிடமும், இரண்டு துணை இயக்குநர் பணியிடங்களும், மூன்று துணை ஆட்சியர் பணியிடங்களும், ஒரு தொழில் நுட்பத்துணை இயக்குநர் பணியிடமும், மூன்று முதுநிலை புரோகிராமர் பணியிடங்களும், ஆறு இளநிலை புரோகிராமர் பணியிடங்களும், இரண்டு விவர பகுப்பாய்வாளர்(Data Analyst) பணியிடங்களும், நான்கு விவர நிறுவாளர்(Data Administrator) பணியிடங்களும், ஒரு உதவிக்கணக்கு அலுவலர் பணியிடம் மற்றும் 46 அமைச்சுப் பணியாளர்கள் பணியிடங்கள் உட்பட மொத்தம் 71 பணியிடங்கள் அரசால் கூடுதலாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இப்பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**8.9.நிதி ஒதுக்கீடு**

2023-24ஆம் நிதியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ரூ.10.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 9. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 9.1. முன்னுரை

"தமிழ் வெளியீட்டுக் கழகம்" 1961இல் பிற மொழிகளில் வெளியான உயர்கல்வி நூல்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட நிறுவப்பட்டது. 1970இல் இது "தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்" என்று பெயரிடப்பட்டது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள குழந்தைகளுக்கு பல்வேறு கல்விக் கருவிகளை வாங்கி வழங்கும் புதிய பொறுப்புகளுக்கேற்றபடி, "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என 2013இல் மறுபெயரிடப்பட்டது. இக்கழகம் பாடநூல்களை அச்சிட்டு வழங்குவதுடன் மின்மயமாக்கல், உயர்கல்வி மற்றும் அரிய நூல்களை மறுபதிப்பு செய்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுப்

பதிப்பகங்களுடன் இணைந்து கூட்டு வெளியீடாகக் கொண்டு வருதல் போன்ற கூடுதல் பணிகளையும் தற்போது மேற்கொண்டு வருகிறது.

## 9.2. நோக்கங்கள்

- 1 முதல் 7 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கான 3 பருவப் பாடநூல்கள் மற்றும் 8 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கான வருடாந்திர பாடநூல்கள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்குதல்.

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு பள்ளிப்பைகள், காலணிகள் போன்ற கல்வி உபகரணங்களை வழங்குவதற்கான கொள்முதல் நிறுவனமாகச் செயல்படுதல்.

- கலை மற்றும் அறிவியல், மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சூழலியல், சட்டம், இலக்கியம், சித்த மருத்துவம், மீன்வளம் மற்றும் உடற்கல்வி போன்ற துறை சார்ந்த உயர்கல்வி நூல்களை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து அச்சிட்டு வழங்குதல் மற்றும் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டு வருதல்.

- தமிழ் இலக்கியங்களை ஆங்கிலம் மற்றும் பிற தென்னிந்திய மொழிகளில் மொழிபெயர்த்தல்.

- அரிய மற்றும் பழைய தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்தல் மற்றும் அவை சந்தையில் மாணவர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் வாசகர்கள்

ஆகியோருக்குக் கிடைப்பதை உறுதி செய்தல்.

- மாநிலம் முழுவதும் பல்வேறு புத்தகக் கண்காட்சிகளில் பங்கேற்றல் மற்றும் மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மறுபதிப்பு நூல்களை விற்பனை செய்தல்.
- சென்னைப் பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி - 2023 உட்பட பல்வேறு இலக்கிய, பண்பாட்டு மற்றும் மரபு சார் நிகழ்வுகளுக்கு அரசாணைகளின் படி அவ்வப்போது நிதி வழங்குதல்.

## 9.3. உள்கட்டமைப்பு

கழகத்தின் தலைமை அலுவலகம் பேராசிரியர் அன்பழகன் வளாகத்தில் (முன்னர் டிபிஐ வளாகம் என்று அழைக்கப்பட்டது) உள்ள ஈ.வி.கே சம்பத்

மாளிகையில் அமைந்துள்ளது. இதைத் தவிர மாநிலம் முழுவதும் 22 மண்டல அலுவலகங்களையும் கொண்டுள்ளது.

### 9.4. பாடநூல்கள் அச்சிடுதல்

ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களுக்கான பாடநூல்கள் 80 GSM நேர்த்தியான பிரிண்டிங் பேப்பரிலும், லேமினேஷன் கொண்ட ரேப்பருக்காக 230 GSM ஆரா ஃபோல்ட் ப்ளூ போர்டிலும் இக்கழகம் மூலம் அச்சிடப்படுகிறது. அனைத்துப் பாடநூல்களிலும் QR குறியீடுகள் (விரைவுக் குறியீடு) உள்ளது. இது தொடர்புடைய காணொலிகள் மற்றும் ஆன்லைன் கேள்வி வங்கிகளை எளிதாக அணுக உதவுகிறது.

## 9.5. 2022-23 இல் அச்சிடப்பட்ட பாடநூல்களின் விவரம்

| <u>பாடநூல்களின் விவரங்கள்</u> | <u>அச்சடிக்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)</u> | <u>தோராய மதிப்பு (ரூபாய் கோடிகளில்)</u> |
|---|---|---|
| அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள் (இலவச பிரதிகள்) | 219.02 | 297.97 |
| சுயநிதிப் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள் (விற்பனை பிரதிகள்) | 201.06 | 289.85 |
| மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளில் 1 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கானத் தமிழ் மொழி பாடநூல்கள் (விற்பனை பிரதிகள்) | 13.34 | 13.75 |

## 9.6. பாடநூல்கள் வழங்குதல் மற்றும் விற்பனை

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கம் விலையில்லாப் பாடநூல்கள் வழங்கப்படுகின்றன. பாடநூல்களின் விற்பனைப் படிகள் தனியார் பள்ளிகளுக்கும், பொதுமக்களுக்கும் இணைய வழியாகவும், பாடநூல் கழகத்தின் விற்பனை மையங்களின் வாயிலாகவும் விற்பனை செய்யப்படுகிறது. பாடநூல் விற்பனை மையங்கள் பேராசிரியர் அன்பழகன் வளாகம் (டிபிஐ வளாகம்), அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் அடையாறு கிடங்கு ஆகியவற்றில் அமைந்துள்ளன. மேலும், இணையவழி விற்பனை வட்டாட்சியர் அலுவலகங்களில் அமைந்துள்ள TACTV மையங்கள் வாயிலாகவும் நடைபெறுகிறது.

## 9.7. பிற நூல்களை அச்சிடுதல்

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், தொல்லியல் துறை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதலானத் துறைகளின் தேவையின் பொருட்டு, இக்கழகம் பல்வேறு பிற நூல்களை அச்சிடும் பணியை மேற்கொண்டு வருகின்றது. இக்கழகம் 2022-23 ஆம் ஆண்டில் மேற்காணும் துறைகளுக்குத் தோராயமாக ரூ.6.05 கோடி மதிப்பிலான 489.17 இலட்சம் நூல்களை அச்சடித்து வழங்கியுள்ளது.

## 9.8. அரிய நூல்களை மின்மயமாக்குதல் மற்றும் மறுபதிப்பு செய்தல்

தமிழ் வழியில் அறிவியல் பாடங்கள் சார்ந்த கல்லூரிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டபோது, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் (அப்போது, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்) 1968 - 78 காலகட்டத்தில் கிட்டத்தட்ட 900 நூல்களை வெளியிட்டது. அந்தப் புத்தகங்களை மின்மயமாக்கி மறு அச்சிட தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. ஆராய்ச்சி அறிஞர்கள், மாணவர்கள், அரிய நூல்கள் சேகரிப்பாளர்கள் மற்றும் பொது வாசகர்கள் ஆகியோர் பயனடையும்வண்ணம் இந்தச் செயல்பாடு 2017இல் தொடங்கப்பட்டது. அந்நூல்களில், கழகம் இதுவரை 875 தலைப்புகளை தமிழ் இணையக் கல்விக்கழகம் வாயிலாக மின்மயமாக்கி, 635 தலைப்புகளை ஆவணப் பதிப்பாகக் கொண்டு வந்துள்ளது.

மேலும், ரூ.1.18 கோடி மதிப்பிலான மறுபதிப்பு நூல்களின் பிரதிகள் பயனாளர்களுக்கும், அரசுக் கல்லூரிகளுக்கும் பல்வேறு விற்பனை வாயில்கள் (புத்தகக் கண்காட்சி, ஆன்லைன்) மூலம் கேட்பின் அடிப்படையில் (PoD) அச்சடித்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அண்ணா நூற்றாண்டு நூலகம், கன்னிமாரா நூலகம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), அண்ணா பணியாளர் நிர்வாகக் கல்லூரி, அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ் இணையக் கல்விக்கழகம், மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் (RMRL) போன்ற பல நிறுவனங்களுக்கு இந்நூல்களின் ஆவணப் பதிப்புகள் மாணவ சமூகத்தின் நலன்கருதி இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. ஜனவரி 2023இல் நடைபெற்ற 46வது சென்னை புத்தகக்

கண்காட்சியில் ரூ.9.13 இலட்சம் மதிப்பிலான நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 9.9. புதிய முயற்சிகள்

- நாளைய தலைமுறைக்கு நாட்டுடைமை நூல்கள்
- பெரியசாமி தூரன் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட கலைக்களஞ்சியம் மற்றும் சிறார் களஞ்சியத்தின் ஆவணப் பதிப்புகளை வெளியிடுதல்
- நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் படைப்புகளை வெளியிடுதல் என மூன்று புதியத் திட்டங்கள் 2022-23 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.02.2022 அன்று சென்னைப் புத்தகக் கண்காட்சி 2022 இல் சிலப்பதிகாரம்: தி டேல் ஆஃப் ஆங்க்லெட் (பெங்குயின் ரேண்டம் ஹவுஸ்) மற்றும் கதா விலாசம் (ரூட்லெட்ஜ்) உட்பட இக்கழகத்தின் 6 கூட்டு வெளியீட்டு நூல்களை வெளியிட்டார், மேலும் 2 நூல்கள் தெலுங்கில் மொழிபெயர்ப்பு செய்து 15.03.2022 அன்று வெளியிடப்பட்டன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்ட 5 நூல்கள் 05.05.2022 அன்று வெளியிடப்பட்டன.

வ.உ.சி.யின் 150வது பிறந்தநாள் விழாவை கொண்டாடும் வகையில், அவர் எழுதிய நூல்கள் பேராசிரியர்.வீ.அரசு அவர்களால் "பன்னூல் திரட்டு" என்று முதல் தொகுதியாகவும், திருக்குறள் பற்றிய வ.உ.சி.யின் விளக்கவுரை இரண்டாவது தொகுதியாகவும் இக்கழகத்தால் தயாரிக்கப்பட்டு

2021இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன, மேலும், வ.உ.சி. படைப்புகளின் 3 வது மற்றும் 4வது தொகுதிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஜனவரி – 6, 2023இல் வெளியிடப்பட்டன. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் பல்வேறு திட்டங்களின் கீழ் தயாரிக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட நூல்கள் சென்னை இலக்கிய விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

பொது நூலக இயக்குனரகத்துடன் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் இணைந்து சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை ஏற்பாடு செய்தது. இந்த விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஐந்து பன்னாட்டு மருத்துவ நூல்கள் வெளியிடப்பட்டது. அவை மருத்துவ நூல்களின்

உலகளாவிய வெளியீட்டாளர்களான எல்சிவியர், ரௌட்லட்ஜ் ஆகிய பதிப்பகங்களோடு இணைந்து இக்கழகம் கொண்டுவந்துள்ள கூட்டு வெளியீடுகளாகும். இந்த முயற்சியால், தமிழ் மொழி மருத்துவ நூல்களின் மொழிபெயர்ப்புத் துறையில் உலகளாவிய மொழிகளுடன் அதன் போட்டியை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது.

மாணவர்களிடையே படைப்பாற்றல், பொது அறிவு மற்றும் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், பொது நூலகங்களுக்கு ரூ.2,20,35,398/-க்கு ஆங்கில இதழ்களை வாங்குவதற்கும் மற்றும் ரூ.1,19,98,974/-க்கு தமிழ் இதழ்கள் வாங்குவதற்கும் நிதி வழங்கியுள்ளது. தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "மாபெரும் தமிழ் கனவு" என்ற தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரைத் திட்டத்திற்கு இக்கழகம்

ரூ.95 இலட்சம் நிதியளித்தது. இத்திட்டங்களைச் செயல்படுத்துவதைத் தவிர, இக்கழகம் அறிவித்த திட்டங்கள், மாநில நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்கள், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை ஆகிய துறைகளால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் போன்றவற்றையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. இக்கழகத்தின் மேற்படித் திட்டங்கள் தவிர வேறு பல துறைகளால் அறிவிக்கப்பட்ட சில திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில் பாடநூல் கழகம் ஈடுபட்டுள்ளது. இவற்றுள், 21 மொழிகளில் பெரியார் சிந்தனைகள்', 'சமூக நீதி' என்ற தலைப்பில் புதிய நூல் ஒன்று எழுதுதல், சங்க இலக்கியங்களை எளிமைப்படுத்திய விளக்கங்களுடன் வெளியிடுதல், திராவிட கலைக்களஞ்சியம் வெளியிடுதல் மற்றும் தமிழ் இந்திய-ஐரோப்பிய சொற்பிறப்பியல் அகர-முதலித் திட்டம் ஆகியவை அடங்கும். மேலும்,

இக்கழகத்தின் கீழ் தளத்தில் பேராசிரியர் அன்பழகன் பெயரில் வெளியீட்டுப் பிரிவு நூல்களுக்கென புதிய விற்பனை மையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

## 9.10. பிற செயல்பாடுகள்

பேராசிரியர் க.அன்பழகன் நூற்றாண்டின் நினைவாகப் பள்ளிக் கல்வி ஆணையரகத்தின் நுழைவாயில் எண்-2இல் அலங்கார நுழைவு வளைவு அமைப்பதற்கு அரசாணையின்படி ரூ.85 இலட்சம் இக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் சுதந்திர தின அமுதப் பெருவிழா கொண்டாட்டங்களுக்காக ரூ.18 இலட்சத்தை இக்கழகம் வழங்கியுள்ளது. தமிழக அரசின் அரசாணையின்படி. மேல்நிலை வகுப்புப் பாடங்களுக்கான சிறுபான்மை மொழிப் பாடநூல்கள் தயாரிப்பிற்காக, மாநிலக் கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.2.29 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

## 9.11. அறிவியல் மற்றும் இலக்கிய நூல்களை தமிழில் மொழி பெயர்த்தல்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் இரண்டு மொழிபெயர்ப்புத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. தமிழின் தொன்மை, மரபு மற்றும் சமகாலத்தை எதிரொலிக்கவும், உலக இலக்கியத்தை வளப்படுத்தவும் மற்றும் பிற திராவிட மொழிகளின் குறிப்பிடத்தக்க இலக்கியங்களை தமிழில் மொழிபெயர்க்கவும் தமிழ் புனைகதைகள் மற்றும் புனைகதை அல்லாதவற்றை ஆங்கிலம் மற்றும் பிறதிராவிட மொழிகளில் மொழிபெயர்ப்பதற்காகவும் ’திசைதோறும் திராவிடம்’ என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ’முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்’ என்ற மற்றொரு மொழிபெயர்ப்புத் திட்டம், முன்னணி பதிப்பகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில்

கையெழுத்திட்டு, கலை, அறிவியல், மருத்துவம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த புத்தகங்களை தமிழில் மொழிபெயர்ப்பதற்கு தொடர்ச்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உயர்கல்வி நுழைவுத் தேர்வு (இயற்பியல், வேதியியல் உயிரியல்) வினா வங்கிகள் பியர்சன் இந்தியா பிரைவேட் லிமிடெட் உடன் இணைந்து தயாரிக்கப்பட்டு 6 தொகுதிகளாக வெளியிடப்-பட்டுள்ளன. ரூ.3.15 கோடி மதிப்பிலான அந்தப் புத்தகங்கள் அரசுப் பயிற்சி மையங்களுக்கு இக்கழகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது..

## 9.12. இளந்தளிர் இலக்கியத் திட்டம்

குழந்தைகளுக்கான சிறந்த புத்தகங்கள் கிடைக்கும் வகையில் இக்கழகம் செயல்படுத்தி வரும் இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 59 நூல்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

## 9.13. கொள்முதல் பணிகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் தேவைகளைப் கொள்முதல் செய்வதற்கும், அவர்களுடைய செயல்திறனை ஊக்குவிப்பதற்கும் ரூ.260.02 கோடி மதிப்பில் பதினொரு கல்வி உபகரணப் பொருட்களை இந்தக் கழகம் கொள்முதல் செய்து 2022-23 ஆண்டில் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசு வரையறுத்துள்ள நோக்கங்களைக் கடைப்பிடித்து பள்ளி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் கல்விப் பணிகளை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வழங்கி வருகிறது.

# 10. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண். 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2023-24 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 40,299.33 கோடியாகும்.

**2023 -24 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | | | மாநில செலவினங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வருவாய் பகுதி** | | | | | |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | | 1030.47 | | 1030.47 |
| 2059 | பொதுப் பணிகள் | | 16705.00 | | 16705.00 |
| 2202 | **பொதுக் கல்வி** | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 1718961.50 | 256701.44 | 1975662.94 |
| | 2 | இடைநிலைக் கல்வி | 1847177.17 | 73111.62 | 1920288.79 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 251.75 | 1090.00 | 1341.75 |
| | 5 | மொழி வளர்ச்சி | 2287.71 | | 2287.71 |
| | | திருப்பி வசூலிப்பவை | 9348.37 | | 9348.37 |
| **மொத்தம் - பொதுக் கல்வி** | | | **3578026.50** | **330903.06** | **3908929.56** |
| 2204 | விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள் | | 227.30 | | 227.30 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2205 | கலையும் பண்பாடும் | 19570.42 | | 19570.42 |
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிறப்டுத்தப்பட்டோர் நலன் | 22222.06 | | 22222.06 |
| 2235 | சமூக பாதுகாப்பும் நலனும் | 203.00 | | 203.00 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | 1163.61 | | 1163.61 |
| **நிகர மொத்த வருவாய்ப் பகுதி** | | **3639148.36** | **330903.06** | **3970051.42** |
| மூலதன செலவு பகுதி | | | | |
| 4202 | மூலதன செலவு | 59841.26 | | 59841.26 |
| **கடன் பகுதி** | | | | |
| 7610 | அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் | 40.00 | | 40.00 |
| **நிகர மொத்தம்** | | **3699029.62** | **330903.06** | **4029932.68** |
| **மானியக் கோரிக்கை எண்*. 43 இன் நிகர மொத்தம்*** | | | | **4029932.68** |

நமது மாண்புமிகு முதலமைச்சரின் திறமையான தலைமைத்துவம், தொலைநோக்கு பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் தமிழக அரசு, பள்ளிக் கல்வியில் மாற்றத்திற்கான பாதையில் பயணிக்கத் துவங்கியுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் சிறப்பான

ஒத்துழைப்புடன், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்காக வடிவமைக்கப்பட்டு தரவுகளின் துணையுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சீரிய கல்விச் சீர்திருத்த முன்முயற்சிகளால், மாணவர்களுக்கு அவர்தம் வயதிற்கு ஏற்ப கற்றல்அடைவு கிடைக்கப்பெறுவது உறுதி செய்யப்படும்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.07.2022 அன்று திருவண்ணாமலை மாவட்டம், ஆராஞ்சி கிராமத்தில் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் இரண்டு இலட்சமாவது மையத்தைத் தொடங்கி வைத்தார்.







சர்வதேச சதுரங்கப் போட்டியினையொட்டி சென்னையிலிருந்து பெங்களூருக்குச் சென்ற சிறப்பு விமானத்தில் அரசுப் பள்ளி மாணவர்கள் சதுரங்கம் விளையாடினர். இந்தச் சிறப்பு விமானத்தை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 27.07.2022 அன்று கொடியசைத்து அனுப்பி வைத்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.06.2022 அன்று திருவள்ளூர் மாவட்டம், அழிஞ்சிவாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் "எண்ணும் எழுத்தும்" திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.09.2022 அன்று மதுரை மாநகராட்சி ஆதிமூலம் தொடக்கப்பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினைத் தொடங்கி வைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.01.2023 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மாநில அளவிலான கலைத் திருவிழாவில் வெற்றிபெற்ற நான்கு மாணவ மாணவிகளுக்கு கலையரசன், கலையரசி விருதுகள் வழங்கினார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.01.2023 அன்று சென்னை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியின் நிறைவு விழாவில் பங்குகொண்டார். மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் தமிழ்ப் பதிப்பாளர்கள் மற்றும் தேசிய, பன்னாட்டுப் பதிப்பாளர்களுக்கு இடையில் 355 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.01.2023 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் "சென்னை இலக்கியத் திருவிழா – 2023" ஐ தொடங்கி வைத்து தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் 108 புதிய நூல்களை வெளியிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.06.2022 அன்று திருவள்ளூர் மாவட்டம், வடகரை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு வகுப்புகளைப் பார்வையிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.06.2022 அன்று மதுரையில் கட்டப்பட்டு வரும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 19.12.2022 அன்று அரசுப் பள்ளிகளை மேம்படுத்திட தொடங்கப்பட்ட "நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி" திட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமான ரூ.1,29,15,000 க்கான காசோலையை மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.02.2023 அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் "பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் கட்டப்படும் பல்வேறு பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.07.2022 அன்று சென்னை நுங்கம்பாக்கம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.06.2022 அன்று சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் 'கல்லூரிக் கனவு' நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.





பல்வேறு மாவட்டங்களில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் பள்ளிகளை ஆய்வு செய்தல்.



மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் 2022 நவம்பர் மாதம் அரசுப்பள்ளி மாணவர்களுடன் துபாய் கல்விச்சுற்றுலா மேற்கொண்டார்; மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பள்ளிகளை ஆய்வு செய்தல் மற்றும் சிறார் திரைப்படங்கள் குறித்து மாணவர்களுடன் உரையாடல்.



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.03.2023 அன்று பேராசிரியர் அன்பழகன் பயின்ற மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மொழியியல் ஆய்வகத்தைத் திறந்து வைத்தார்.



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 01.03.2023 அன்று பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் மதிப்பீட்டுப் புலத்தைத் திறந்து வைத்தார்.



மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிய முதன்மைக் கல்வி அலுவலர்களைப் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.07.2022 அன்று சென்னை அசோக்நகர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான மனநலம் சார்ந்த விழிப்புணர்வு தொடக்க விழாவில் மாணவியர்களிடம் கலந்துரையாடினார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.01.2023 அன்று சென்னை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்ற 46வது சென்னை புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.